
KALKI 17.5.98
ரூ. 4.50

# கல்கி



பிரதமரின்
விறுவிறுப்பான
பேட்டி!



## அமெரிக்கா போன அஜீத்!

ஜீன்ஸுக்குப்
பிறகு
பிரசாந்த்!






உங்கள் குழந்தை தானிய உணவை உண்ணும் நேரம் வந்துவிட்டது. ஆனால், நான்கு மாத காலத்தில் அதன் ஜீரண உறுப்புகள் சிறிது நாசூக் கானவை. பிரத்தியேகமாக, குழந்தைகளுக்கென தயாரிக்கப்பட்ட உணவே மிகச் சிறந்தது.

# புதிய ஃபாரெக்ஸ் ரைஸ் மீல்ஸ் குழந்தையின் தேவையை அறிந்தது. ஊட்டம் தரும் உணவிலே உயர்ந்தது. உங்கள் குழந்தைக்கு, அது உகந்தது.

அறிமுகம், முதன் முறையாக இந்தியாவிலே புதிய ஃபாரெக்ஸ் ரைஸ் மீல்ஸ். எளிதாக ஜீரணிக்கக்கூடிய வகையில், அரிசிக்கு இயற்கை அளித்த நற்குணங்கள் அனைத்தும், வளரும் குழந்தைக்கு நல்முறையிலே கிடைக்க வேண்டும் என்றே தயாரிக்கப்பட்டது. க்ளூட்டன் ஃப்ரியாக தயாரிக்கப்பட்ட புதிய ஃபாரெக்ஸ் ரைஸ் மீல்ஸ், உங்கள் குழந்தைக்கு உணவினால் அலெர்ஜி வராமல் பாதுகாக்கிறது. சமச்சீரான அளவிலே வளரும் குழந்தைக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் கொண்ட தயாரிப்பாகும். ஆறு சுவைகளில் தயாரிக்கப்பட்ட ரைஸ் மீல்ஸில் ஒன்றை இன்றே ஊட்டத்துவங்குங்கள், உற்சாகம் பெற்ற மழலை முகத்தை கண்டு மகிழுங்கள்.




முக்கிய அறிவிப்பு: தாய்ப்பாலே குழந்தைக்கு உகந்தது. தானிய உணவுகளை 4 மாதத்திற்குப் பிறகே துவங்க வேண்டும்.

CONTRACT FAX 248

## —பிரதமரின் சுவையான பேட்டி

**பிரதமர் வாஜ்பேயுடன் அவரது பர்சனல் வாழ்க்கை பற்றிய ஒரு பேட்டி. 'ராஷ்டிரிய சகாரா' ஏப்ரல் இதழில் வெளியாகியுள்ளது. அதன் சுவையான சில பகுதிகள்:**

**"உங்களுடைய அரசியல் பிரவேசம் எப்படி நிகழ்ந்தது?"**

"அதை ஒரு விபத்து என்றே சொல்ல வேண்டும். சியாம பிரசாத் முகர்ஜியின் மரணத்தையடுத்தே அது நிகழ்ந்தது. அவரது மரணம் இயற்கையானது இல்லை. நான் வீர் அர்ஜுன் என்ற பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, காஷ்மீரில் நிலவி வந்த பர்மிட் முறையை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக முகர்ஜி, ஸ்ரீநகர் சென்றார். நானும், ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் அவருடன் பயணம் செய்தேன். அவர் கைது செய்யப் பட்டார். அப்போது, என்னிடம் திரும்பி,

# "டெல்லியைத் தாண்டி விட்டால் எனக்குக் கவிதை பிறந்து விடும்!"

'வாஜ்பேயி, நான் பர்மிட் ஏதுமின்றி காஷ்மீருக்குள் நுழைந்த தகவலை மக்களுக்குச் சொல்!' என்றார். ஜெயிலுக்குப் போன முகர்ஜி, அங்கேயே மரணமடைந்தார். மர்மமான அவரது மரணம் என்னைப் பெரிதும் பாதித்தது. பத்திரிகைத் தொழிலை விட்டு விட்டு, ஜன சங்க் கட்சியில் சேர்ந்தேன்."

**"பொது வாழ்வில் உங்களுக்கு ஆதர்ச புருஷர் யார்?"**

"நிறையப் பேரைச் சொல்லலாம். என்னை மிகவும் கவர்ந்தவர் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி. அப்புறம் சுவாமி தயானந்த சரஸ்வதி ஒரு சிந்தனையாளர் என்ற முறையில், ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த கோல்வாகர், அரசியலில் ஜே.பி, லோகியா, தீனதயாள் உபாத்யாயா, எல்லோரையும் விட ரொம்ப ஈடுபாடு என்றால் அது நேதாஜியின் பேரில்தான். வீர சவர்கரின் தியாகம் என்னை பிரமிக்க வைக்கும். லாலாலஜபத்ராய், பகத்சிங்..."

**"நேருவைப் பற்றி...?"**

"ஒரு ஜனநாயகவாதி, சிந்தனையாளர் என்ற முறையில்









நேருவைப் பிடிக்கும். ஆரம்பத்தில் அவர் மீது எனக்குப் பெரும் மரியாதை இல்லாவிட்டாலும், நான் பாராளுமன்றத்துக்குப் போன பிறகு, அவர் மாபெரும் மனிதர் என்பதை உணர்ந்து கொண்டேன். என் பாராளுமன்றப் பேச்சுக்கள் குறிப்பாக அயல் உறவுக் கொள்கைகள் பற்றியவை அவருக்கு ரொம்பப் பிடிக்கும்.''

**''நேருவுடன் ஒப்பிட்டால் இந்திரா காந்தி, ராஜீவ் எல்லாம் எப்படி?''**

''நேரு சிறந்த பார்லிமெண்டேரியன். விமர்சனங்களை சகஜமாய் எடுத்துக் கொள்ளும் பண்பாளர். ஆனால் இந்திரா காந்தி அப்படியல்ல. ராஜீவுக்கு, தன் வயதையொத்தவர்களுடன்தான் பழக விருப்பம். ஆனால், அவர் மரியாதையுடன் பழகத் தெரிந்தவர். நான் உடல் நலம் குன்றியிருந்தபோது, உடனடியாக அமெரிக்காவில் சிகிச்சை பெற வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார்.''



**''அந்தக் காலத்தில் நீங்கள் பழகிய அரசியல்வாதிகளுக்கும், இன்றுள்ள அரசியல்வாதிகளுக்கும் என்ன வித்தியாசத்தை உணருகிறீர்கள்?''**

''அவர்கள் அன்பானவர்கள்; கண்ணியமான பண்பாளர்கள். பரந்த மனப்பான்மை கொண்டவர்கள். ஆனால் இப்போது குறுகிய மனப்பான்மையும், பொறாமையும் நிறைய உள்ளது. எதிர்க்கட்சிகளை அவர்கள் எதிரிகளாய் நினைக்கவில்லை. இன்று சகிப்புத்தன்மைகூட குறைந்து விட்டது!''

**''அரசியல் தவிர, நீங்கள் ஆர்வம் கொண்ட மற்ற விஷயங்கள் எவை?''**

''கவிதை எழுதுவது. நான் நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதியிருக்கிறேன். பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, 1942ல் நான் முதல் கவிதையை எழுதினேன். என் கவிதைகள் பல பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. என்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளின் போதும், ஒரு கவிதையாவது எழுதுவது என்பதை நான் வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். டெல்லியில் இருக்கிறபோது, என் கற்பனை வறண்டு போய் விடுகிறது. டெல்லியை விட்டுப் புறப்பட்டதும், நான் முதலில் தேடுவது காகிதமும், பேனாவும்தான். டெல்லியைத் தாண்டி விட்டாலே எனக்குக் கவிதை பிறந்து விடும்.

**''ஓய்வு நேரமென்றால், அதை எப்படிக் கழிக்க விரும்புவீர்கள்?''**

''கவிதை தவிர எனக்குப் பிடித்த இன்னொரு விஷயம் சமையல். நான் ரொம்ப நன்றாகச் சமைப்பேன். என் அப்பாவும், நானும் ஒன்றாகத் தங்கியிருந்த சமயம் நான்தான் சமைப்பேன். இப்போதுகூட நான் சைவம், அசைவம் இரண்டுமே சுவையாகச் சமைப்பேன்.''

**''குறிப்பாக எந்த ஐட்டம் செய்வதில் நீங்கள் எக்ஸ்பர்ட்?''**

''சைனீஸ் ஐட்டங்கள். எனக்குப் பிடித்த உணவு கிச்சடி. ரொம்ப சிம்பிள். ரொம்ப டேஸ்டி. இனிப்பு வகைகளை விரும்பிச் சாப்பிடுவேன்!''

**"உங்கள் அப்பாவைப் பற்றிச் சொல்லுங்களேன்!"**

"என் தந்தை மறைந்த ஸ்ரீகிருஷ்ண பெஹாரி வாஜ்பேயி. சுயமாய் உழைத்து முன்னேறியவர். மெட்ரிகுலேஷன் படிக்கிறபோதே, மெட்ரிக் வகுப்பு மாணவர்களுக்கு அவர் இந்தி சொல்லிக் கொடுப்பார். பல சிரமங்களுக்கிடையே முதுகலைப் படிப்பை முடித்துவிட்டு, பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராக குவாலியரில் பணியாற்றினார். ரிடையர் ஆன பிறகும்கூட அவர் சும்மா உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. நான் எம்.ஏ மற்றும் சட்டம் படிக்க கான்பூர் சென்றபோது, என்னுடனேயே வந்து விட்டார். என்னுடன் சேர்ந்து சட்டம் படித்தார்! இது ரொம்ப அபூர்வமானது. அப்பாவும், மகனும் ஒரே வகுப்பில் படிப்பது, அப்போது உள்ளூர் நியூஸ் பேப்பர்களில் பரபரப்பாகப் பிரசுரிக்கப்பட்ட செய்தி. இருவரும் டிஏவி கல்லூரி ஹாஸ்டலில் ஒரே அறையில்தான் தங்கிப் படித்தோம்!"

**"நீங்கள் பேச்சுத் திறமையை வளர்த்துக் கொண்டது எப்படி?"**

"பள்ளியிலும், கல்லூரியிலும் படிப்பு தவிர மற்ற விஷயங்களிலும் நான் ஈடுபாடு கொண்டிருந்தேன். பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்ளுவது அவற்றில் முக்கியமானது. என் தாத்தா, பகவத்கீதை பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்துவார். அவரது பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவார்கள். ஆக, பேச்சுத் திறமை என் குடும்பப் பாரம்பரியம் எனலாம்!"

**"நீங்கள் சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொண்டது உண்டா?"**

"ம்... மாணவனாக இருந்தபோது கலந்து கொண்டிருக்கிறேன். 1942ல் மாணவர் கிளர்ச்சியில் பங்கேற்றேன். கைதுகூட ஆனேன். ஆனால் நான் அப்போது எந்த அரசியல் கட்சியிலும் சேர்ந்திருக்கவில்லை."

**"உங்களை 'கலர்ஃபுல் பேச்சிலர்' என்கிறார்களே! உண்மையா?**

(தர்மசங்கடத்துடன்) "இல்லை... இல்லை. அதெல்லாம் சுத்த அபத்தம். கட்டுக் கதைகள்!"

**"ஏன் நீங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை? காதல் தோல்வி போல ஏதாவது காரணமா?"**

(சிரிப்பு) "இந்தக் கேள்வியை எப்படியும் கேட்பீர்கள் என எதிர்பார்த்தேன். காதலுமில்லை... ஒன்றுமில்லை. நான் சட்டம் படிக்கிற சமயம், யோசித்து எடுத்த முடிவு தான் இது. 1946ல் நடந்த பிரிவினை காரணமாய், என் சட்டப் படிப்பைக்கூட முடிக்க முடியவில்லை. பிரிவினையைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் என் மனத்தை மிகவும் பாதித்தன. அரசாங்க உத்தியோகத்துக்குப் போவதில்லை; திருமணம் செய்து கொள்ளுவதில்லை. முழு நேரமும் மக்களுக்குப் பணியாற்றுவது என்று நான் முடிவெடுத்தேன்."

**"அடுத்து என்ன செய்தீர்கள்?"**

"பத்திரிகையாளராவது என முடிவெடுத்தேன். 'ராஷ்டிரதாம்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஆனேன். அதன்பின் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பாஞ்சஜன்ய இதழுக்கும், பிறகு ஸ்வதேஷ் என்ற பத்திரிகைக்கும் மாறினேன். ஆனால் இன்றைக்குப் போல, அன்றைக்கு ஜர்னலிசம் என்பது கவர்ச்சிகரமான தொழில் அல்ல; சம்பாதிக்கவும் வாய்ப்பு இல்லை. ஆனாலும் நான் பத்திரிகைத் துறையில் பணிபுரிவதைப் பெருமையாய்க் கருதினேன். மகிழ்ச்சி கொண்டேன். மக்களுக்குத் தொண்டாற்ற இதுவும் ஒரு நல்ல வழிதான் என்று நினைத்தேன்."



**"நாடு எவ்வளவு தூரத்துக்கு முன்னேறிடிச்சு பாருங்க."**

**"என்னாச்சு?"**

**"இதோ இந்த மாசத்துக்குள்ள ஆட்சி கலைஞ்சிடும்; அடுத்தது நம்ம ஆட்சிதான்னு சொல்லி முன்னாள் பிரபலம் ஒருத்தர் பல பேர்கிட்ட லஞ்சம் வாங்கிட்டிருக்காரே!"**

**— சீர்காழி வி. ரேவதி**



''தலைவர்கிட்டே போய் சினிமாத் துறையிலே நாம சந்திக்கிற பிரச்னைகளைப் பற்றிப் பேசினது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

'' 'சினிமா தியேட்டரில் கூட்டமே இல்லேன்னா, வாடகைக்கு ஆட்களைப் பிடிச்சுட்டு வர வேண்டியதுதானே'ங்கறார்!''

– ஜயன்

**''இப்போதும் அப்படி நினைக்கிறீர்களா?''**

''இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமெனில் இன்றையச் சூழ்நிலையில் பிரதமரால்கூட மக்களுக்குப் பெரிதாக ஒன்றும் செய்து விட முடியாது. சில சமயங்களில், சீர் செய்யவே முடியாத அளவுக்கு, நிலைமை மோசமாகி விட்டதோ என்றுகூட நான் நினைப்பதுண்டு. சரியான தலைமைதான் இன்று நாட்டை நல்வழிப்படுத்த முடியும். நான் உண்மையாய் உழைக்க வேண்டும் என்றுதான் பாடுபடுகிறேன்.''

**''உங்களுடைய வாழ்க்கையின் தத்துவம் என்ன?''**

''நான், என் மனசாட்சிக்கும், இந்த நாட்டுக்கும், மக்களுக்கும்... ஏன் இந்த உலகத்துக்கும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.''

**''உங்கள் பேச்சு நிறைய மக்களைக் கவருவதன் ரகசியம் என்ன?''**

''நான் கடுமையாக விமர்சித்தாலும் தனிப்பட்ட நபர்களைத் தாக்கிப் பேச மாட்டேன். எதைப் பேசினாலும், இதயத்திலிருந்துதான் பேசுவேன்!''

**''உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?''**

''நமக்கும் மேலே ஒரு சக்தி இருக்கிறது என்று தீவிரமாக நம்புகிறேன். கடவுள் என்பவர் எங்கோ உட்கார்ந்து கொண்டு, எல்லாவற்றையும், ஆட்டுவித்துக் கொண்டிருப்பதாக நான் கருதவில்லை.''

**''மறுபிறவியில் நம்பிக்கை உண்டா?''**

''புனர்ஜென்மத்தில் எனக்கு அதீத நம்பிக்கை உண்டு. இந்தப் பிறவியில் நடக்கிற கெட்டதற்குப் போன பிறவியில் செய்த கெடுதல்களே காரணம் என்று எனக்கு நம்பிக்கையில்லை. இந்தப் பிறவியிலேயே வினை விதைத்தால், வினையை அறுப்போம்!''

**''உங்களுக்கு இசை பிடிக்குமா?''**

''இந்துஸ்தானி பிடிக்கும். பப்பிலஹரியை விட நௌஷத் பிடிக்கும். முகேஷின் பழைய மெலடிகள் என் இதயத்தை ரொம்பத் தொட்டு விடும்.''

**''சினிமாவில்?''**

''பழையது, புதியது இரண்டுமே. குறிப்பாக குருதத் படங்கள். ராக்கி, மதுபாலா, நுதன் ஆகியோர் என்னைக் கவர்ந்த ஹீரோயின்கள்.''

**''உங்களுக்குப் பிடித்த கார் எது?''**

''அம்பாசிடர்தான். பெட்ரோல் அதிகம் குடித்தாலும், அதிக கொள்ளளவு கொண்டது அதுதான்.''

**''அரசியலுக்கு வந்திருக்காவிட்டால், வேறு என்ன செய்து கொண்டிருப்பீர்கள்?''**

''இலக்கியம் படைத்துக் கொண்டிருப்பேன். கல்லூரி எதிலாவது பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பேன். அல்லது பத்திரிகைத் துறையிலேயே தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பேன்!''

**''உங்களுடைய பலவீனம் என்ன?''**

''எனக்கு ஞாபகசக்தி கொஞ்சம் குறைவு. அப்புறம் எனக்குக் கூட்டம் என்றால் பிடிக்காது. பொதுக்கூட்டங்களில் பேசி முடித்துவிட்டு, உடனே புறப்பட்டு விடுவேன். தனிமையை விரும்புகிறவன் நான்!''

**''உங்களுடைய பலம்?''**

''அதை மற்றவர்கள் முடிவு செய்யட்டுமே!''

**''உங்களால் சகித்துக் கொள்ள முடியாத விஷயம்?''**

''முட்டாள்தனத்தை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. நான் பொறுமை இழந்து விடுவேன்.''

தமிழில்: **கௌதம்**
படங்கள்: **யோகா**



# கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார்!

கண் புற உலகத்தைப் பார்க்கிறது,
மனம் கண்ணைப் பார்க்கிறது,
அந்தராத்மா மனத்தைப் பார்க்கிறது.
இது உண்மை; மாற்ற முடியாத உண்மை
மனசாட்சிக்கு ஏற்ப நாங்கள் சுத்தமான
ருசிகரமான இனிப்பு மற்றும் கார
வகைகளைத் தயாரிக்கிறோம்.

திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய்,
அதிரசம், திரட்டுப்பால், சீர் முறுக்கு ஆகியவற்றை
தயாரித்துக் கொடுக்கிறோம்.

**ஸ்ரீ கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்**

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020. போன் : 4915662/4914213

சமீபத்தில் மைலாப்பூர் அயோத்தியா குப்பத்துக்குப் பின்புறம் உள்ள விரைவு ரயில் பாதையின் கீழ்– பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில்– 22,800 பாக்கெட் கள்ளச் சாராயம் 57 மூட்டைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைப் போலீஸார் பறிமுதல் செய்தார்கள். ஆனால் யாரும் கைது செய்யப்படவில்லை!

இது பற்றிய செய்தி வெளியிட்ட பத்திரிகைகள், அந்தப் பகுதி பெரிய புள்ளி ஒருவர்தான் இந்த கள்ளச் சாராய வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தன. இந்த விஷயத்தில் கொஞ்சம் மூக்கை நீட்டிப் பார்த்தோம். அன்று இந்த மூட்டைகளைப் பறிமுதல் செய்தவர்களில் மைலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தியும் ஒருவர். அவரைச் சந்தித்தோம்.


"எங்க உதவிக் கமிஷனருடன் அந்த வேட்டையின்போது உடன் சென்றேன். அவ்வளவுதான். மற்றபடி அயோத்தியா குப்பம் மெரினா காவல் நிலைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது!"

"அது சரி; உங்க ஏரியாவில் கள்ளச் சாராயம் இருக்கா?"

"எங்க ஸ்டேஷன் லிமிட்டில் உள்ள கடற்கரையோரக் குப்பமான டுமிங் குப்பத்தில் சனி, ஞாயிறுகளில் கள்ளச் சாராயம் விற்றுக் கொண்டிருந்தார்கள். ராயபுரம், திருவொற்றியூர்ப் பகுதிகளில் இருந்து ஆட்டோக்களில் கடத்திக் கொண்டு வருவார்கள். இரவும், பகலும் கண்காணித்து ஆட்களையும் ஆட்டோக்களையும் பிடித்தோம். ஐந்து பேரை குண்டர்கள் சட்டத்தில் உள்ளே போட்டு விட்டோம். இப்போது எங்க ஏரியாவில் கள்ளச்சாராயம் கிடையாது!" என்ற கிருஷ்ணமூர்த்தியிடம், "அயோத்தியா குப்பத்தில் இந்த வியாபாரத்தில் இறங்கியுள்ள பெரிய மனிதர் யார்?" என்றோம். "அந்த விவகாரத்தை மெரினா காவல் நிலையத்தில் விசாரித்துக் கொள்ளுங்களேன்!" என்று ஒதுங்கினார் அவர்.

மெரினா காவல் நிலையத்தில் ஐந்து பேரின் படங்கள் மாட்டப்பட்டுள்ளன. படங்களுக்கு மேலே 'போக்கிரி வீரமணியும் அவன் கூட்டாளிகளும்' என்று எழுதப்பட்டிருக்கும் போர்டுதான் முதலில் நம் கண்ணில் பட்டது. அயோத்தியா குப்பம் கள்ளச் சாராய வியாபாரத்தில் ஈடுபட்ட பிரமுகரைப் பற்றி கேட்டால் பேசுவதற்குக் கொஞ்சம் தயங்குகிறார்கள்.

"இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இந்தப் பேட்டையில் ஊரறிந்த 'தாதா'வாயிருக்கும் ஒருத்தரின் அண்ணியும், அண்ணியின் அம்மாவும்தான் இந்த வியாபாரத்தில் இறங்கியிருப்பவர்கள். அவர்களுடன் அந்த நபரும் இப்போது தலைமறைவாகிவிட்டார். முன் ஜாமீன் கேட்டு கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளதாகத் தகவல்!" என்றார் ஓர் அதிகாரி. 57 மூட்டைகளில் 90 மில்லி கொண்ட சிறுசிறு மூட்டைகளாக 22,800 பாக்கெட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டதாம். இப்போது மயிலாப்பூர் உதவிக் கமிஷனர் அலுவலகத்தில் மூட்டைகள் வைக்கப்பட்டிருக்



கின்றன. "சீக்கிரம் destroy பண்ணுங்கப்பா" என்று உதவிக் கமிஷனர் உத்தரவு போட்டிருக்கிறார்.

கள்ளச் சாராய வியாபாரத்துக்கு அயோத்தியா குப்பம் மிகவும் பெயர் பெற்றது. இப்போது டாட்டா ஸியராவும், செல் போனுமாக சுற்றிக் கொண்டிருக்கும் அந்த நபர் அடிப்படையில் மீனவர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றாலும் ஒரு வசதிக்கு வந்தது கள்ளச் சாராய வியாபாரத்தினால்தான் என்று மாட்டாங்குப்பம் பகுதிகளில் சொல்கிறார்கள். ஐந்துக்கும் மேற்பட்ட கொலை வழக்குகளில் சிக்கி, ஜெயிலில் இருந்து, இப்போது ஜாமீனில் வெளிவந்து, எந்த வம்பு தும்புக்கும் போகாமல் இருக்கிறவர் அவர் என்றும் சொல்கிறார்கள். கடற்கரையோர மீனவ கிராமங்களுக்கு ஊர்த் தலைவராகவும் இருக்கிறார் அவர். குப்பத்துப் பகுதிகளில் 'தானைத் தலைவர், கலியுக கர்ணன்' என்றெல்லாம் புகழ்ந்து போஸ்டர். நூற்றுக்கும் மேற்பட்ட கட்டு மரங்களும், நிறைய மோட்டார்ப் படகுகளும் அவர் குடும்பத்துக்குச் சொந்தமாக இருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு சமுதாயத் தலைவராக உயர்ந்துவிட்ட அவரைத் ''தொடுவதற்கு'' போலீஸ் கொஞ்சம் தயங்குவதாகவே தோன்றுகிறது. கேட்டால் "வலை வீசித் தேடிக் கொண்டிருக்கிறோம்" என்கிறார்கள்.

இப்போதெல்லாம் அந்த நபருக்கு சினிமாத் தொடர்பு அதிகமாகி விட்டதாம். இது தவிர, அவரே ஒரு படத்தில் நடிப்பதாகச் சொல்கிறார்கள். "ஏதோ ஷூட்டிங் போயிருப்பதாக'' போலீஸ் வட்டாரத்தில் சொல்கிறார்கள்.

# சவால் விடும் கள்ளச் சாராயம்!

அயோத்தியா குப்பத்தில் இருந்து தான் சென்னையின் பல பகுதிகளுக்கும் கள்ளச் சாராயப் பாக்கெட்டுகள் விநியோகம் செய்யப்படுகிறதாம். எனவே அந்தப் பகுதியில் கண்டிப்பாகச் செயல்பட்டால் இந்த வியாபாரத்தின் முதுகெலும்பை முறித்து விடலாம் என்று போலீஸார் சொல்கிறார்கள். "மாதவரம், ரெட்ஹில்ஸ், பொன்னேரி போன்ற பகுதிகளில் கள்ளச் சாராய தொழிற்சாலைகளே இருக்கின்றன. அங்கெல்லாம் எங்க ஆட்கள் கொஞ்சம் தீவிரமாக இருந்தாலே போதும்" என்கிறார் ஓர் அதிகாரி.

இதற்கிடையில் மதுக் கடைகளுக்கான ஏலம் நடந்திருக்கிறது. "இந்த முறை முன் வைப்புத் தொகையை அதிகரித்து விட்டார்கள். அருகருகே கடைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதாலும், கள்ளச் சாராய ஓட்டத்தாலும் எங்கள் விற்பனை ஏற்கெனவே திருப்தியாக இல்லை. இந்த நிலையில் லட்ச, லட்சமாகக் கொட்டி கடைகளை ஏலம் எடுப்பதில் வியாபார ரீதியாக லாபம் இருப்பதாகத் தெரியவில்லை" என்றார் தேனாம்பேட்டை ஒயின் கடை வியாபாரி ஒருவர்.

முன்பெல்லாம் கமிஷனர் ஆபீஸ் பார்ட்டி என்றால் கள்ளச் சாராய வியாபாரிகளும், பார் வைத்துள்ள ஒயின் கடைக்காரர்களும் நடுங்குவார்கள். ஆனால் நாளடைவில் அந்தப் பார்ட்டி, மாலையானால் கடைக்குக் கடை மாமூல் வசூல் செய்வதை மட்டுமே தொழிலாகக் கொண்டு விடவே வியாபாரிகளுக்கு ஏகக் கொண்டாட்டமாகப் போய்விட்டதாம்.

"கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு காவல் துறைக்குக் கடமையுணர்ச்சி மட்டுமிருந்தால் போதாது. ஒரு சமுதாயப் பொறுப்புணர்வும் இருக்கணும். எந்தவித சபலத்துக்கும் ஆசைப்படாமல் இருக்க வேண்டும்" என்கிறார் ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி ஒருவர்.

இந்த நிலையில் மதுவிலக்குத் துறை போலீஸ் மீண்டும் உருவாக்கப்பட இருக்கிறதாம். "அந்த தனிப்பிரிவில் டூட்டி செய்ய ஆட்கள் போட்டி போடுவதிலிருந்து, அதன் 'கவர்ச்சி,' புரிந்து போகுமே" என்று கிண்டலாகச் சொல்கிறார் கமிஷனர் அலுவலக அதிகாரி.

— நமது நிருபர்கள்



# ஸ்ரீநாத் ஓய்வெடுக்கிறாரா, நீக்கப்பட்டாரா?

**கல்கி** : உங்களுக்கு மறுபடியும் தோள் வலி வந்ததன் காரணமாக ஓய்வு கொடுக்கப்பட்டதா அல்லது நீக்கப்பட்டீர்களா?

**ஸ்ரீநாத்** : கடந்த முறை நான் கல்கிக்குப் பேட்டியளித்தபோது தோள் வலி காரணமாக ஓய்விலிருந்தேன். அப்போது இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கு எதிராகப் பழையபடி முழு வேகத்தோடு பந்து வீச வருவேன் என்று பேட்டியளித்தேன். அதே போல் வந்து பந்தும் வீசினேன். என் பந்து வீச்சின் வேகம், அளவு எல்லாமே பழைய படி முழுமையாகவே இருக்கின்றன. ஆனாலும் முன்பு உங்களிடம் 80 சதம்தான் ஃபிட் என்று சொன்னேன். மீதி 20 சதம்தான் இப்போது தொந்தரவு கொடுக்கிறது. அதுவும் தொடர்ச்சியாக இரண்டு டெஸ்ட் மேட்சுகளில் ஆடும் போதுதான் தொந்தரவு தருகிறது. பொதுவாக, வேகப் பந்து வீச்சாளர்கள் அனைவருக்கும் வருகிற தொந்தரவுதான் இது. இருந்தாலும் கூட ஒருநாள் போட்டிகளில் என்னைச் சேர்த்திருந்தால் நன்றாகவே விளையாடியிருப்பேன். ஆனபோதிலும் சில காலம் நான் ஓய்வெடுப்பதுதான் எனக்கும் நல்லது; நமது அணிக்கும் நல்லது; அடுத்த ஆண்டு நடக்கப் போகும் உலகக் கோப்பைப் போட்டிகளில் நான் விளையாடுவதுதான் முக்கியம் என்று தேர்வுக் கமிட்டியினர் கூறியதால் நானும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேன். மற்றபடி பத்திரிகைகள் எழுதுவது போல என்னை அணியிலிருந்து நீக்கவில்லை.

**கல்கி** : நீங்கள் அணியில் இருந்தால் பிரசாத் இல்லை. பிரசாத் இருக்கும்போது நீங்கள் இருப்பதில்லை. நீங்கள் இருவருமே

சிறப்பாகப் பந்து வீசுகிறவர்கள். அப்படியிருந்தும் ஒரே சமயத்தில் ஏன் இருவரும் இருப்பதில்லை?


**ஸ்ரீநாத்** : இதற்கு நீங்கள் நினைக்கிற மாதிரியான அளவுக்கெல்லாம் பெரிய காரணங்கள் ஏதும் இல்லை. நாங்கள் இருவருமே அனுபவமுள்ள பந்து வீச்சாளர்கள் என்பதால் எங்களில் ஒருவரை அணியில் வைத்துக் கொண்டு, புதிய பந்து வீச்சாளர்களையும் அறிமுகப்படுத்துகிறார்கள். நான் ஆடும் போது எனக்கு பார்ட்னராக ஹர்பிந்தர் சிங் இருந்தார். பிரசாத் ஆடும் போது அகார்கர் பார்ட்னராக இருக்கிறார். இப்படி ஆடும்போதுதான் புதிய வேகப் பந்து வீச்சாளர்களை அறிமுகப்படுத்தி வெற்றி பெற முடியும். இதுதான் காரணம்.

**கல்கி** : உங்களைப் போன்ற வேகப் பந்து வீச்சாளர்களெல்லாம் ஏன் கபில்தேவைப் போல் தொடர்ந்து ஆட முடிவதில்லை?

**ஸ்ரீநாத்** : அடேயப்பா! கபிலுடன் போய் என்னை ஒப்பிடுகிறீர்களே! அவர் ஒரு ஜீனியஸ்! அவர் மலை என்றால் நான் மடு. என்னை அவரோடு ஒப்பிடவே கூடாது. தமது உடம்பை ரொம்பவும் ஃபிட் ஆக வைத்திருந்து, தொடர்ச்சியாக விளையாடிய ஒரே வேகப் பந்து வீச்சாளர் உலகிலேயே அவர் ஒருவர் மட்டும்தான். ஆனாலும் ஒரு விஷயம்... இப்போது இருப்பது போல அவர் காலத்தில் இத்தனை மேட்சுகள் தொடர்ந்து நடைபெற்றதில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்படி விடாமல் மேட்சுகள் நடந்தால் வேகப் பந்து வீச்சாளர்கள் பாதிக்கப்படத்தானே வேண்டியிருக்கும். இதுதான் உலக அளவில் இருக்கிற இன்றைய வேகப்பந்து வீச்சாளர்களின் நிலை. இப்படிச் சொல்வதாலேயே நான் கபிலைக் குறைத்து மதிப்பிடுவதாக அர்த்தம் செய்து கொண்டு விடாதீர்கள், ப்ளீஸ்!

**கல்கி** : அகார்கர் எப்படிப் பந்து வீசுகிறார்?

**ஸ்ரீநாத்** : அற்புதமாக வீசுகிறார். நல்ல out swing, yorker என எல்லாமே போடுகிறார். இருபது வயதிலேயே இப்படியொரு வாய்ப்புக் கிடைத்திருப்பதால் பல மேட்சுகள் விளையாடி அனுபவம் பெற்று, எதிர்காலத்தில் இன்னும் திறமையாகப் பந்து வீசுவார் என்பதிலும் சந்தேகமில்லை.



**கல்கி** : அகார்கர் வந்திருப்பதால், தங்களின் வாய்ப்பு பற்றி?

**ஸ்ரீநாத்** : ஸ்ரீநாத்தான் இந்திய அணியில் ஆடவேண்டும் என்று பட்டயம் ஏதாவது கட்டி வைக்கப்பட்டிருக்கிறதா என்ன? என்னை விட யார் சிறப்பாகப் பந்து வீசினாலும் அவர்களே இந்தியாவுக்கு ஆடத் தகுதியுடையவர்கள் என்பதே எனது கருத்து. இம்மாதிரி இளைஞர்கள் வரும்போதுதான் என்னைப் போன்றவர்களும் ஒரு புதிய

**ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் நமது வெற்றிக்குப் பெரிதும் துணையாக இருந்த ஸ்ரீநாத், அதற்குப் பிறகு நடந்த ஒருநாள் போட்டிகளிலும் சரி, சார்ஜா போட்டிகளிலும் சரி இடம்பெறவில்லை. என்ன காரணம்? அணியிலிருந்து நீக்கப்பட்டாரா அல்லது அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டதாக கிரிக்கெட் போர்டு சொல்வதுதான் உண்மையா? இதுபற்றி ஸ்ரீநாத்தையே சந்தித்துப் பேசினோம்....**

உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் ஆட முடிகிறது. அதனால் இம்மாதிரியான இளைஞர்களின் வரவை நான் மனமார வரவேற்கிறேன்.

பேட்டி, படம் :
**நந்தினி**

## — ஸ்ரீநாத்தின் பரபரப்பு பேட்டி



# தமிழகத்தில் தேர்தல் வந்தால் முடிவு எப்படியிருக்கும்?

●● இந்த இதழை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் போது ஆட்சிக் கலைப்புப் பேச்சு உச்சகட்டத்தில் இருந்தால் ஆச்சர்யமில்லை. காரணம், மே, இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்துக்குள் 'கலைப்பு' சம்பந்தமாக முடிவெடுக்காவிடில் அ.தி.மு.க. நிபந்தனையில்லாத ஆதரவைத் தளர்த்திக் கொண்டு, அவ்வப்போதைய பிரச்னை அடிப்படையில்தான் issue - based ஆதரவு என்ற நிலையை மேற்கொள்ளும் என்று எச்சரிக்கை விடப்பட்டிருப்பதுதான். மற்ற மாநிலங்களுக்குச் செய்ய இருப்பது போல ரொட்டீனாக மாநிலங்களவை தேர்தலுக்கான அறிவிப்பை தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் செய்ய வேண்டாமென்று சட்ட அமைச்சகம், தேர்தல் கமிஷனுக்கு 'ஆலோசனை' சொல்லியிருப்பதாகத் தலைநகர் தகவல் ஒன்று சொல்கிறது.

"பா.ஜ.க.வுக்கு இருப்பது hidden agenda என்றால் எங்களுடையது மிகவும் வெளிப்படையான agenda. இந்த வாய்ப்பை நாங்கள் நழுவ விட்டால் கலைஞர் எங்களைக் குழியில் தள்ளி மூடி விடுவார். எனவே எக்காரணம் கொண்டும் 'கலைப்பு' கோரிக்கையை கைவிட மாட்டோம்" என்றார் அ.தி.மு.க. சார்பில் பல வழக்குகளில் வாதாடும் வழக்கறிஞர் ஒருவர்.

ஆனால் உள்ளூர் பா.ஜ.க. தலைவர்கள் கலைப்பு விஷயத்தில் கொஞ்சம் சுணக்கமாகவே இருக்கிறார்கள். "டில்லியில் எதாவது கோப்பு நகர வேண்டுமென்றால் கூட என்னைக் கேட்டுக் கொண்டுதான் நகர வேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருக்கிறார் ஜெ. இங்கேயும் ஆட்சியைக் கலைத்து விட்டு கவர்னர் ஆட்சியைக் கொண்டு வந்தால் கோட்டை அதிகாரிகள் போயஸ் தோட்டத்துக்கும் பையனூர் பங்களாவுக்கும் அல்லவா முறைவாசல் செய்ய வேண்டியதாக இருக்கும்" என்கிறார் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திலிருந்து பா.ஜ.க.வுக்கு கட்சிப் பணி ஆற்ற வந்திருக்கும் பிரமுகர் ஒருவர்.

சமீபத்தில் காந்தி நகரில் நடைபெற்ற தேசிய கவுன்ஸில் கூட்டத்தில் ஜெ.வின் கலைப்பு அரசியல் ரணகளமாக மேல்மட்டத் தலைவர்களிடையே விவாதிக்கப்பட்டது. அ.தி.மு.க. விலகிச் சென்றாலும், பா.ம.க.வும் ம.தி.மு.க.வும் தொடர்ந்து பா.ஜ.க.வை ஆதரித்துச் செயல்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்ட போது, அதில் பிரச்னை ஒன்றும் இருக்காது என்றார்களாம் தமிழகத் தலைவர்கள். ஒருங்கிணைப்பு கமிட்டி கூட்டத்துக்குப் பின்னர் பா.ஜ.வுக்குப் பிரச்னைகள் அதிகமாகுமே தவிர குறைய வாய்ப்பில்லையாம்!

இதற்கிடையில், தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல், அடுத்த சில மாதங்களில் நடைபெறும் பட்சத்தில், கட்சிகளின் வெற்றி வாய்ப்பு பற்றி மத்திய உளவுத் துறை ஒரு சர்வே எடுத்திருக்கிறதாம். தி.மு.க.வும் - த.மா.கா.வும் ஒரே கூட்டணியாகத் தொடர்ந்தால் கூட 80 இடங்களுக்கு மேல் கிடைக்காது என்பது அவர்கள் கணிப்பாம். அதே போல் அ.தி.மு.க.வும் தனித்தே ஆட்சி அமைக்க மெஜாரிட்டி கிடைக்காதாம். "ஜனநாயக நெறிகளுக்கு உட்பட்டு பா.ஜ.க. செயல்படும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கலைத்தாலும் கலைப்பார்கள்" என்று சொன்னார் சீனியர் தி.மு.க. பிரமுகர் ஒருவர்

●● சிறிது நாட்களுக்கு முன்னர் தமிழக அமைச்சரவையில் கூட்டலும் கழித்தலும் இருக்கும் என்று முதல்வர் அறிவித்ததிலிருந்து இளைய தலைமுறை எம்.எல்.ஏக்களுக்குக் கொஞ்சம் நப்பாசை இருந்தது. ஆனால்

ஆட்சிக் கலைப்பு பயமுறுத்தல்களால் மிகவும் யோசிக்கிறார் முதல்வர். "இந்த தூசி அடங்கிய பிறகு பார்க்கலாம்" என்பது அவருடைய தற்போதைய கருத்தாம். ஆனால் எது எப்படியிருந்தாலும், இப்போது அமைச்சரவையில் உள்ள செயல்படாத எட்டுப் பேருக்கு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காதாம். "இப்போதிருக்கும் அரசியல் சூழ்நிலையில் அவர்களைக் கழற்றி விட முடியாமல் இருக்கிறார் முதல்வர்" என்கிறார் கோட்டை அதிகாரி ஒருவர். அவர்களில் சிலர் 'பசை'யுள்ளவர்களாக மாறிய விவகாரமும் விசாரிக்கப்படுகிறதாம். இந்த நிலையில், "தி.மு.க. ஆட்சி கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில், சில சீனியர் பிரமுகர்கள் கட்சியிலிருந்து விலகலாம்" என்ற கிசுகிசுவும் பரவிக் கொண்டிருக்கிறது.

●● நிர்வாகக் குழுவில் முடிவெடுக்க முடியாமல், ஐவர் குழு பிரச்னையை ஆராயும் என்று அமைச்சரவையில் சேருவது



• பயணம் எந்தப் பக்கம்?

பற்றி வை.கோ. சொன்னார் அல்லவா! இப்போது செஞ்சியார் தரப்பிலிருந்து "சீக்கிரம் முடிவெடுங்கள்" என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறதாம். குறிப்பாக பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்னர் அமைச்சரவை விரிவாக்கத்திற்கு வாய்ப்பு இருப்பதால், வை.கோ. இந்தப் பிரச்னையை நீண்ட நாள் ஆறப் போட முடியாது என்று கட்சி வட்டாரத்தில் சொல்கிறார்கள். சட்டமன்றக் கலைப்புக்குப் பிறகு தேர்தல் வரும்பட்சத்தில், அதிகாரத்தை செயல்படுத்தும் இடத்தில் கட்சிக்காரர்கள் இருக்க வேண்டும் என்கிறார்கள் அவர்கள்.

●● Cross roads என்பார்களே! அது போன்ற இடத்தில் நின்று கொண்டிருக்கிறது த.மா.கா. "காங்கிரஸிலும் இணையக் கூடாது; தனியாகச் செயல்பட்டாலும், தி.மு.க. கூட்டணியில் நீடிக்கக் கூடாது" என்று சொல்லும் பலமான கோஷ்டியைச் சமாளிக்க, மூப்பனார் மூளை, ஓவர்டைம் செய்ய வேண்டிய சூழ்நிலை. இதில் சிதம்பரம் மட்டும் கொஞ்சம்



• ஆதரவு தளருமா?

யதார்த்தமாக, "காங்கிரஸில் சேர வேண்டாம்; தேர்தல் வந்தால் கூட்டணி வைத்துக் கொள்ளலாம். அதே சமயம் உடுக்கை இழந்த சமயத்தில், இடுக்கண் களைந்த தி.மு.க.வை கைவிடுவதும் சரியில்லை!" என்றும் சொல்லியிருக்கிறாராம்.

●● கோடை விடுமுறை சமயத்தில் பெரிய அரசு அதிகாரிகள் மாற்றம் செய்யப்படுவார்கள். இதற்கிடையில் கோட்டைக்கு வெளியே உள்ள கீழ்நிலை அதிகாரிகளின் மாற்றங்களில் ஒருசில அமைச்சர்களும் செல்வாக்கான எம்.எல்.ஏக்களும் வசூல் வேட்டையில் இறங்கியிருக்கிறார்களாம்! ●

— தில்லப்பா

# 58

**வை**குண்டம் என்பது எல்லாருக்கும் கை கூடுவதாகாது. இந்தப் பிறவியிலே, இப்போது பகவானை நாம் அனுபவிக்க என்ன செய்வது...?

வைகுண்டத்திலே போய்ச் சேர்ந்த ஒருவனுக்கு ரொம்ப தாகம் எடுத்ததாம். "ஏகமா தாகம் எடுக்கிறது; தீர்த்தம் கொடுங்கள்..." என்று கேட்கிறான் அவன்.

"மேலே ஆசரண ஜலம் இருக்கிறது; போய் எடுத்துக் கொள்ளுங்கள்- ஒரு சொம்பு எடுத்துக் குடியுங்கள்" என்று அவனிடம் சொன்னால் எங்கேயாவது பொருந்துமா? சத்ய லோகம், பிரும்ம லோகமெல்லாம் கடந்து போய் தாக சாந்தி பண்ணிக் கொள்ள வேண்டும்!

கேட்டவர் நடுங்கிப் போய்ட்டார்! 'இங்கே தாக சாந்திக்கு ஒரு தம்ளர் ஜலம் கேட்டால், ஆவரண ஜலத்திலேயிருந்து ஒரு சொம்பு எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்களே?' என்று!

அப்படித்தான், இந்தப் பிறவியிலே வைகுண்டத்து பரமாத்மாவை அனுபவி என்று சொன்னால் அது நமக்கு ரொம்ப கஷ்டம். இங்கே என்ன உபகாரம் பண்ணும் வைகுண்டம்? எதுவும் பண்ணவில்லை..! ஆவரண ஜலம்போல், நம்மால் அடைய முடியாதிருப்பதனாலே 'வைகுண்டத்தை மறந்து விடு' என்றார்கள்! இப்போது அதைப் பற்றிச் சிந்தனை பண்ணாதே!

இனி அடுத்தது...? திருப்பாற்கடல்! அங்கே போக முடியுமா நம்மாலே? அது எப்படி இருக்கிறது...?

சமுத்திர ஜலம் போலே!

நம் ஊரிலும் சமுத்திரம் இருக்கிறது. தாக சாந்திக்கு எடுத்துச் சாப்பிட முடியுமா? ஒரே உப்பு ஜலமல்லவா?!

தேவதைகளெல்லாம் சென்று க்ஷீராப்தியிலே பிரார்த்தனை பண்ணுகிறார்கள் என்பதால் நம்மால் இப்பிறவியில் அப்படிப் பண்ண முடியுமா?

அதுவும் நம் கைக்கு எட்டாத தூரத்தில் இருப்பதால் அதையும் மறந்துவிடு! என்றார்கள்.

சரி, ராமகிருஷ்ணாதி அவதாரங்களெல்லாம் இருக்கின்றனவே... அவற்றின் கிட்டே போகலாமே என்றால், கிருஷ்ணனைப் பார்க்க முடியுமா?

அந்த அவதாரங்களெல்லாம் காட்டாற்று வெள்ளம் போலே! திடீரென்று வெள்ளம் தோன்றும். ஆனால் அது வற்றிப் போய்விடும். நிரந்தரமானது இல்லை. திரேதா யுகத்தில் இருந்தவர்கள், துவாபர யுகத்தில் இருந்தவர்கள் அவதாரங்களை அனுபவித்திருக்கிறார்கள். இப்போது இருக்கிற நமக்கு ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் உபகாரம் பண்ணுமா?

உள்ளே உட்கார்ந்திருக்கிறானே... சர்வாந்தர்யாமியாக இருக்கிறானே...' அவனைப் பார்க்கலாமா என்று முயன்றால் அது

# குறையொன்றுமில்லை

ஊற்று ஜலம் போலே!

வெளியில இருக்கிற ஜலமே நமக்குத் தெரியவில்லை; அடைய முடியவில்லை! உள்ளே இருக்கிற ஜலத்தை எங்கேயிருந்து பார்ப்பது?!


நிலத்தடி நீர் இருக்கிறதே அது சில பேருக்குத்தான் தெரியும். அர்ஜுனன் குருக்ஷேத்திரத்திலே பாணப் பிரயோகம் பண்ணி ஜலத்தைக் கொண்டு வந்தான். என்ன ஜலத்தை?

கங்கை ஜலத்தைக் கொண்டு வந்தான்- பீஷ்மாச்சார்யார் பருகுவதற்காக.

குதிரைகளெல்லாம் பருகுவதற்காக பூமியிலிருந்து நீரைக் கொண்டு வந்தான் கிருஷ்ணன்.

பீஷ்மர் தாகம் தாகம் என்று கேட்டார். அவருக்கு என்ன தாகம்...? அவர் 'அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று! அர்ஜுனன் பாதாள கங்கையை வரவழைத்தான், பீஷ்மாச்சார்யார் ஆரப் பருகினார். தம் தாயாரைக் கண்டு சந்தோஷப்பட்டார். அவர், காங்கேயன் என்று பெயர் அவருக்கு- கங்கையினுடைய புதல்வரானதாலே.

இப்படி, தீர்த்தம் எங்கேயிருக்கிறது



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

என்பதை வல்லுனர்களால் தான் உணர முடியுமே யொழிய சாமானியர்களால் உணர முடியாது.

சேலத்தில் பட்ட கோயில் என்று ஒரு கோயில். வரதராஜ பெருமாள் அங்கே இருக்கிறார். அடியேன் உபன்யாஸத்துக்குப் போனேன். கோயில் அர்ச்சகர் அங்கே பெரிய விருத்தர். வாஸ்து சாஸ்திரத்திலே கெட்டிக்காரர். கிணறு எங்கே வெட்ட வேண்டும். எங்கே வெட்டினால் ஜலம் வரும் என்பதெல்லாம் ரொம்ப அழகாகச் சொல்லக் கூடியவர். அவர் கிரஹத்துக்கு அடியேனைக் கூப்பிட்டிருந்தார்.... போனேன். அங்கே போய் சந்தியா வந்தனம் பண்ணிவிட்டு உபன்யாசத்துக்குப் போக வேண்டும்.

சந்தியாவந்தனம் பண்ண புழக்கடைப் பக்கம் போனேன். போனால், வாசல்படி தாண்டியதும் ஒரு கிணறு... அப்புறம் இன்னொரு கிணறு! வாசல்படி தாண்டிய



உடனே இருக்கிற கிணற்றில் ஜலத்தைக் காணோம். அன்னண்டை கிணத்தில்தான் கயிறு தொங்குகிறது. அங்கே போய் ஜலம் தூக்கிக் கொண்டேன்.

அப்புறம் அந்த சுவாமி வந்தார். 'இங்கே ஒரு கிணறு, அங்கே ஒரு கிணறு இருக்கிறதே?' என்று கேட்டேன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்! நான் எல்லோருக்கும் ஜலம் எங்கே இருக்கிறது என்று சொல்கிறவன்... என் வீட்டிலே பொய்த்துப் போய் விட்டதே!" என்றார். "முதலில் இங்கே வெட்டினேன், ஜலம் வரவில்லை. அப்புறம் அடுத்த கிணறு வெட்டினேன் அங்கேதான் நீர் கிடைத்தது..." என்றார்.

ஆகையினாலே, என்னதான் சாஸ்திரம் தெரிந்திருந்தாலும் சில சமயம் நம் புத்தி மழுங்கித்தான் போகும். அதனாலே நாம் சர்வக்ஞர்கள் என்று நினைத்துக் கொள்ளலாகாது. அந்த பகவான் அருள் இருந்தால் தான் சர்வக்ஞத்துவம் பிரகாசிக்கும்.

ஜலம் உள்ளே இருப்பதை அவ்வளவு சுலபத்திலே நாம் தெரிந்து கொள்ள முடியாது.

தாகம் எடுக்கிறது என்பவனிடம் ஊற்று நீரைத் தோண்டி எடுத்துக் கொள் என்றால் யாரால் முடியும்!

நன்றாகக் கிணறு வெட்டி, அதில் ராட்டினமும் போட்டு, கயிறு கட்டி குடத்தாலே தூக்கி, ஜலத்தைக் கையிலே கொடுத்தால் வாங்கிக் கொள்வது கஷ்டமா?

அந்த மாதிரி சுலபமாகக் கொடுத்தால் எல்லோரும் வாங்கிக் கொள்கிறோம்.

ஊற்று நீர் அந்தர்யாமி.

கோயில்களில் அர்ச்சாவதாரத்தில் பரமாத்மா எழுந்தருளியிருக்கிறாரே- அது கிணற்று நீர் போலே! சுலபமாக அனுபவிப்பதற்கு நமக்குக் கிடைத்து விடுகிறான்.

ஆகையினாலே எல்லாவற்றையும் நாம் எதிலே பார்க்க வேண்டும்...?

அர்ச்சையிலேதான் பார்க்க வேண்டும். அர்ச்சையின் திருவடியிலேதான் ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டும்.

வைகுண்டத்திலே இருக்கிற பகவானிடம் ஆத்ம சமர்ப்பணம் பண்ணுகிறேன் என்றால் முடியுமா?! இல்லை, 'ராமகிருஷ்ண அவதாரங்களிடத்தில் ஆத்ம சமர்ப்பணம் பண்ணுகிறேன்' என்றால் முடியுமா? அந்தர்யாமிக்கே பண்ணுகிறேன் என்றால்தான் முடியுமா!?...

ஆனால், அர்ச்சாவதாரத்திலே அவன் நம் பக்கத்திலேயே குடிகொண்டிருக்கிறான். அர்ச்சையும் பேசும். அர்ச்சை என்பது வெறும் பிம்பம் என்று நாம் நினைத்துவிடக் கூடாது.

அந்த பிம்பத்திலே அப்படியே ஜீவகளை பூரணமாக இருக்கிறது. பரமாத்மா நம்மைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். அதனால் மிகவும் ஜாக்கிரதையாக நாம் அவனைப் பூஜை பண்ண வேண்டும்.

மகான்களெல்லாம் ஆராதனம் பண்ணுகிற போது நாம் கவனிக்க வேண்டும். எவ்வளவு பவ்யமாக, எவ்வளவு ஜாக்கிரதையாக பூஜை பண்ணுகிறார்கள்! ஏனென்றால், பகவான் 'அந்த பிம்பத்திலே பூரணமாக இருக்கிறேன்' என்று சங்கல்பம் பண்ணிக் கொண்டு வந்து தங்கி விடுகிறான்.

நான்கு விதமாக பிம்பத்திலே அவன் வந்து அமர்கிறான்:

தெய்வம், மானுஷம், ஆருஷம், அதற்கும் மேலே ஸ்வயம் வ்யக்தம்.

ஆருஷம் என்று மஹரிஷிகளுக்குப் பிரத்யக்ஷமாகி அந்த மஹரிஷிகளால் பிரார்த்திக்கப்பட்டு சில க்ஷேத்திரங்களில் அப்படியே இருக்கிறான்.

சில க்ஷேத்ரங்களில் தெய்வம்! தேவதா பிரதிஷ்டை. தேவதைகளெல்லாம் பிரதிஷ்டை பண்ணியிருப்பார்கள். ஒரு தேவதைக்காகப் பிரத்யக்ஷமாகியிருப்பான்; அவன் பிரார்த்தித்தபடி அங்கேயே தங்கி விடுவான்.

சிலது மானுஷம்! மனிதர்களான நம்மைப் போன்றவர்கள் ஆகம சாஸ்திர ரீதியாக, விசேஷமாக பிரதிஷ்டை பண்ணு

## அருள்வாக்கு

ஸமீப காலமாக நம் ஆசாரங்களைப் பற்றி இதற்கு முந்திய தலைமுறைக்கு இருந்ததைவிடக் கொஞ்சம் கௌரவபுத்தி உண்டாயிருப்பதைப் பார்க்கிறேன். முன்னே இங்கிலீஷ் படித்தவர்களென்றால் நம் ஆசாரம் அவ்வளவுமே பேத்தல் என்று நினைப்பவர்களாயிருந்தார்கள். ஆனால் நான் கொஞ்ச நாளாக ஒரு வேடிக்கை பார்க்கிறேன் - ஸயன்ஸும், ஸ்பிரிசுவாலிடியும் (ஆத்மிகமும்) ஒன்றுக்கொன்று விரோதமானது போல் தோன்றினாலும், ஸயன்ஸ் அபிவிருத்தியாகிக் கொண்டு வருவதாலேயே, புதிசு புதிசாக டிஸ்கவரி செய்யும் போது, "இதென்னடா ஆச்சர்யமாயிருக்கிறது! நாம் ரொம்பவும் 'அறிவிலே பின்தள்ளி நின்றவர்கள் என்று நினைத்த



ஆதிகால இந்தியர்கள இந்த விஞ்ஞான உண்மைகளை, நமக்கு இருக்கிற லாபரட்டரியும் இன்ஸ்ட்ருமென்டுகளும் இல்லாமலே எப்படியோ கண்டுபிடித்து அவர்களுடைய சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதாகத் தெரிகிறதே'' என்று அதிசயப்படுகிறார்கள். கொஞ்ச நாள் முந்தி (பத்திரிகைகளில்) பார்த்திருப்பீர்கள். ரஷ்யாக்காரன் கம்யூனிஸ்ட், நிரீச்வரவாதி. ஆனால் இங்கே நாம், ''இதென்ன, ஹோமம் என்று சொல்லிக் கொண்டு வீட்டையெல்லாம் புகையாக்கிக் கொண்டு, கண்ணும் கரிக்கக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது?'' என்றால், ரஷ்யா தேச ஸயன்டிஸ்ட்கள் வறட்டிப் புகையினால் அடாமிக் ரேடியேஷன் (அணுச் சிதைவின் கதிரியக்கம்) உள்படப் பலவித பொல்யூஷன்களைப் போக்கிக் கொண்டு விடலாமென்று சொல்லி, நம்முடைய ஹோமத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள். இதே போல ஹோமத்தில் போடப்படும் பலவிதமான ஸமித்துக்களின் புகை பரவுவதும் க்ருமி நாசினியாக (antiseptic) உதவுகிறது என்று முன்னே டாக்டர்கள் சொன்னதுண்டு. தர்ப்பை, துளஸி, பில்வம் என்றிப்படி நம் சாஸ்திர காரியம், பூஜை இவற்றில் பிரயோஜனமாகின்றவற்றுக்கெல்லாம் வைத்தியரீதியிலோ, மற்ற ஸயன்ஸ்களின் ரீதியிலோ sound basis (அழுத்தமான அடிப்படை) இருக்கிறது என்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

தல்.

ஸ்வயம் யத்தம் என்றால், தானே விரும்பிச் சில இடங்களிலே தோன்றுவது.

– இப்படி அர்ச்சாவதாரத்திலே நான்கு விதமாக பரமாத்மா கோயில் கொண்டிருக்கிறான்.

ஆகையினாலே இப்போது கவனித்துப் பார்த்தால் எந்த நிலையிலே பகவானை ஆராய்ந்தாலும் அமலனாய் இருக்கிறான். இந்த அர்ச்சாவதாரத்திலேயும் சரி, வைகுண்டம், திருப்பாற்கடலிலேயும் சரி... அவன் அமலன்தான். நாம் நமது சக்திக்கு உட்பட்டு அவனை எய்துவதற்குரிய இடம் அர்ச்சாவதாரம் தான். அதிலும் அவன் குற்றமற்றவனாய் தூய்மையே உருவானவனாயிருக்கிறான்.

அமலன் என்பதற்கு இன்னொரு அர்த்தமும் இருக்கிறது. அழுக்கே இல்லாததனாலே அவன் அமலன் என்று சொன்னேன். நம்மிடத்திலே இருக்கிற அழுக்கைப் போக்குவதனாலேயும் அவன் அமலன் ஆகிறான்.

ரோஹிணி நக்ஷத்திரத்தன்று பண்ணக் கூடிய ஒரு யாகத்தைக் குறித்து வேதம் சொல்கிறது.

உலகிலேயே எல்லா ஜீவராசிகளுக்கும் அன்னம் கிடைக்க வேண்டும்– அந்த மாதிரி அன்னத்தை உண்டாக்கக் கூடிய மகாயக்ஞம் அது.

வயல் வெளியிலே நிறைய தான்யமானது கொழிக்க வேண்டும் எல்லா ஜீவராசிகளுக்கும் அன்ன ஸம்ருத்தி ஏற்பட வேண்டும் என்பதற்காக 'ரோஹிணியாம் கார்ய:' என்கிறது. 'ரோஹிணி நக்ஷத்திரத்தன்று யக்ஞத்தைப் பண்ணு!'

யக்ஞத்தை எப்போது பண்ண வேண்டும்...?


சூர்யோதய காலத்தில் அந்தக் காரியத்தை ஆரம்பித்துவிடு. 'உதிதே சூர்யே...' என்று அந்த மந்திர உச்சாரணத்துக்குரிய ஸ்வரம் இருக்கிறதே... அந்த ஒலியே எழுப்புகிற ஒலிபோலதான். சூரியன் உதித்த பிறகு நாம் தூங்கக் கூடாது என்று சொல்கிற ஒலி.

ஆகையினால், சூர்யோதய காலத்திலே நாம் எழுந்துவிட வேண்டும். அதே போல் அஸ்தமன வேளையிலே விழித்துக் கொண்டிருக்க வேண்டும். தூங்கிவிடக் கூடாது.

இந்த இரண்டு வேளையிலும் கண் விழித்திருக்க வேண்டும் என்பது முக்கியம்:

ராமாயணத்திலே அயோத்தியா காண்டத்திலே பரதன் பிரதிக்ஞை பண்ணுகிறான் பாருங்கள்... அப்போது என்ன சொல்கிறான்? ராமன் காட்டுக்குப் போவதற்கு யார் காரணமாயிருந்தாலும் அதற்குத் தன்னைக் காரணமாக பாவித்துக் கொண்டு பேசுகிறான். "எப்படிப்பட்ட கொடுஞ் செயலைச் செய்தவனாய் நான் இருந்தால், இரண்டு சந்தியா காலங்களிலே எவன் படுத்து உறங்குகிறானோ, அவனுக்கு சம்பவிக்கக் கூடிய பாவம் எனக்கும் வரும். அந்த பாவத்திலே நான் போகிறேன்'' என்கிறான்!

(தொடரும்)



• 51 PEG நட்சத்திரமும் மிக அருகில் அதனைச் சுற்றி வரும் துணைக் கோளும்...

# விரியும் பிரபஞ்ச ரகசியங்கள்!

அண்ட சராசர வெளியில் — பூமியைப் போன்ற குணம் கொண்ட கோள் மண்டலங்களும், அவற்றில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகளும் இருப்பதாக அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா' சுடச்சுட கண்டறிந்திருக்கிறது!



• 70 விர்ஜினிஸ் நட்சத்திரத்தைச் சுற்றி சுழன்று கொண்டிருக்கும் வியாழன் போல் ஏழு மடங்கு எடையுள்ள கோள்...

சூரியனை மையமாகக் கொண்டு நமது பூமி இயங்குவது போல் நட்சத்திரங்களை மையமாகக் கொண்டு இயங்கும் கோள்கள், வானவெளியில் அநேகம் உள்ளன. பற்பல பால்வீதி மண்டலங்களின் (galaxy) அங்கங்கள் இவை. சூரிய குடும்பத்தைச் சாராத, ஒரு நட்சத்திரத்தை மையமாகக் கொண்டு சுழலும் இவை, பல சமயங்களில் பூமியின் சாயலைப் பலமாக ஒத்துத் தோன்றுகின்றன. தத்தம் தாய் நட்சத்திரங்களை ஒட்டி, அவற்றின் மிக அருகில் அமையப் பெற்ற சுற்றுப் பாதையில், இந் நட்சத்திர - மண்டலக் கோள்கள் சுழன்று கொண்டிருக்கின்றன.

ராட்சஸக் கோளான வியாழன் அளவுள்ள இவை (ஒரு வியாழன் = 1000 பூமிகள்!!) வியாழனை விட எக்கச்சக்கமான வெப்பத்தோடு இருப்பதால் 'சுடு வியாழன்' எனும் தலைப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சூரியனைச் சுற்றும் நமது பூமி விலகியே சுற்றுகிறது. ஆனால் இவை ரொம்ப ரொம்ப நெருக்கமாகவே சுற்றுகின்றன. இத்தனை நெருக்கமாய்ச் சுழன்றபோதிலும், தாய் நட்சத்திரங்களால் ஈர்க்கப்பட்டு அவற்றுள் விழுந்து இவை மரணித்து விடுவதில்லை. காரணம், தாய் நட்சத்திரங்களிலிருந்து வீசி அடித்துக் கொண்டேயிருக்கும் அலைகளும், சுழல்களும், பேய்க் காற்றுகளும், நெருப்பு வீச்சுகளும்தான் என்று தெரிகிறது.

**70** விர்ஜினிஸ் எனும் பிரபல நட்சத்திரத்தை நம் ராட்சஸ வியாழன் போல ஏழு மடங்கு எடை(!) கொண்ட கோளொன்று உறவாடி வருவது, *1996-97ல்* அறியப்பட்டிருக்கிறது. 51-PEG எனும் ஹீரோ நட்சத்திரத்தைச் சுற்றி வரும் ஒரு கோள், விண்ணியலைப் புளகாங்கிதமடையச் செய்திருக்கும் மற்றொரு நிஜம்!

இவை - கோள்களைப் போல் தோற்றமளிக்கும் மாயை என்றுதான் ஆரம்பத்தில் எண்ணப்பட்டது. கோள்களைப் போல திடப்பகுதிகள் ஏதுமேயில்லாத வெறும் வாயுக் கூட்டமென்றே நம்பப்பட்டதால், இம் மாயைகளுக்கு 'வாயுப் பந்து' என்ற பொதுப் பெயர் வைத்தனர். மேலும் தங்கள் கருப்பகுதிகளில் அணுப் பிளவுகளை நிகழ்த்தும் தெம்பில்லாத காரணத்தால், இவற்றால் கோள்களைப் போல பிரகாசிக்க முடியாது...!

கிரகங்களும் சரி, இவ் வாயுப் பந்துக்களும் சரி, ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் வாயுக்களால் ஆக்கப்பட்டுள்ளன. என்ன ஒரு வித்தியாசமென்றால், கிரகங்களின் உட்பகுதி ஐஸ் மற்றும் பாறைகளாலான சூப்பர் திட ஏரியா! வாயுப் பந்துக்களுக்கு அது இராது. திடப் பகுதிகளில்லா விட்டால், அது கிரகமுமாகாது.

இருப்பினும், கோள்களுக்கான அத்தியாவசியமான குணங்கள் இல்லாததால் மட்டுமே, இவை கோள்களல்ல என அடித்துக் கூறி விட முடியாது. கிடைத்துள்ள இவற்றின் புகைப்படங்களின் மீதான ஆழமான ஆய்வுகள், இவை கோள்கள் என்றே அடித்துக் கூறுகின்றன. இவற்றில் பூமியின் குணங்களும் ஏராளமாய்த் தென்படுகின்றன. நீலத் திட்டுக்களாய் நீர் ஏரிகள் காணப்படுவதும், மிகச் சிறப்பு!

இன்னும் ஓரிரு வருடங்களில், அதிநவீன வானவியல் உபகரணங்களின் உதவியால், நட்சத்திர மண்டலங்களில், மேலும் பல புதுக் கோள்கள் - உயிரின வாழ்வுக்குக் கட்டியங்கூறும் பூமி போன்ற கோள்கள் கண்டறியப்படக்கூடும்! அப்போது பல உன்னத உண்மைகள் நம்மை பிரமிக்க வைக்கக்கூடும்! ●

— **கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்**

## பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்க ஆய்வு மற்றும் பயிற்சி மையம் அஞ்சல் வழி இந்தி பயிற்சிப் பிரிவு

299, N.S.C. போஸ் சாலை, மெர்க்கன்டைல் பிளாசா தபால் பெட்டி எண். 1279,
சென்னை - 600 001 தொ.பே.: 5340226, 5227170, 5228773, 5261013

### பேச்சு மொழி இந்தி டிப்ளமோ சான்றிதழ்

(இந்தியில் "இயல்பாகவும், சரளமாகவும் பேச, உரையாட எளிய பயிற்சி)

நுழைவுத் தகுதி – ஆர்வமுள்ள அனைவருக்கும்

பாடத் திட்டம் – எழுத்துகளைச் செவ்வனே உச்சரிக்கப் பயிற்சி அடிப்படை பேச்சு மொழி இலக்கணம், பல சூழ்நிலைகளில் பேசுவதற்குப் பயிற்சி. பயிற்சியின் இறுதியில் பேச்சு மொழி சொற்களஞ்சியம் வழங்கப்படும்.

பயிற்றுமொழி – தமிழ்

பயிற்சிக் காலம் – 6 மாதங்கள் (ஜூலை 1998 முதல் டிசம்பர் 1998 வரை)

நேர்முகப் பயிற்சி – 3 – ஒருநாள் பயிற்சி, வகுப்புகள் ஞாயிற்றுக் கிழமைகளில் (மதிய உணவு உட்பட) நடத்தப்படும்.

தேர்வு – 1998 டிசம்பர் மாத இறுதியில் நடத்தப்படும். தேறியவர்களுக்கு அஞ்சல் வழி இந்தி பயிற்சி டிப்ளமோ சான்றிதழ் வழங்கப்படும்.

நேர்முகப் பயிற்சி மற்றும் தேர்வு மையம் – சென்னை, மற்றும் 30 மாணவர்களுக்கு மேற்பட்ட இடங்களில் நடத்தப்படும்.


பயிற்சிக் கட்டணம் – ரூ. 400.00 (தேர்வு நேர்முகப் பயிற்சிக் கட்டணம் உட்பட)

பயிற்சியில் சேர விரும்புபவர்கள் ரூபாய் ஐம்பதுக்கான வரைவோலை **(Demand Draft), SBIOA Institute, Chennai** என்ற பெயருக்கு, சுயவிலாசமிட்ட தபால் தலையுடன் (ரூ. 2/) கூடிய கடித உறையுடன் மேற்கண்ட முகவரிக்கு எழுதவும். இந்த ரூ. 50/- பயிற்சிக் கட்டணத்தில் கழித்துக் கொள்ளப்படும். உறையின் மேல் தமிழ் மூலம் இந்திப் பயிற்சி என்றுக் குறிப்பிடவும்.

நிர்வாக இயக்குநர்

இப்பயிற்சி ஆங்கிலம் மூலமாகவும் நடத்தப்படுகிறது [கல்கி 24.5.98] பார்க்கவும்.






**ESTD : 1955** ஸ்ரீ **Ph : 706823, 704312**

### 29 முதல் 30 நாட்கள் கொண்ட இமாலய பத்ரிநாத், கேதார்நாத், நேபாள், பசுபதிநாத் யாத்திரை

12.7.98-ஆம் தேதி நித்திரை வசதி கொண்ட 3 டயர் ஸ்லீப்பர் கேரேஜ் புறப்படுகிறது. யாத்திரை மார்க்கம் : சென்னை, ஜெய்ப்பூர், மதுரா, ஆக்ரா, டில்லி, அரித்வார், ரிஷிகேஷ், கேதார் – பத்ரிநாத், அலகாபாத், அயோத்யா, காசி, நேபாள், கயா, கல்கத்தா (குர்தா ரோடு) பூரி, புவனேஷ்வர், கோனாரக், விஜயவாடா வழியாக சென்னை வந்து சேருகிறது. 2-ம் வகுப்பு ரயில் டிக்கெட் முழு பர்த் வசதி, காலை டிபன், காப்பி 2 வேளை போஜனம், ரயில் கேரேஜிலேயே தங்கும் வசதி உள்பட நபருக்கு ரூ. 9975/- பத்ரிநாத், கேதார்நாத், நேபாள் யாத்திரைக்கு பஸ் சார்ஜ் தனியாக ரூ. 3750/- செலுத்த வேண்டும்.

### 19 முதல் 23 – நாட்கள் நேபாள் – பசுபதிநாத் காசி யாத்திரை

25 நாட்கள் கொண்ட 3 TIER SLEEPER கேரேஜ் மூலம் சென்னை சென்ட்ரலில் இருந்து 6.9.98 தேதி ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் மூலம் புறப்பட்டு ஜெய்ப்பூர் ஆக்ரா – டில்லி அரித்வார் – ரிஷிகேஷ் – அலகாபாத் அயோத்யா – காசி (நேபாள்) கயா கல்கத்தா – பூரி – விஜயவாடா வழியாக சென்னைக்குத் திரும்பி வந்து சேர்கிறது. கட்டணம் ரூ. 8575+2000 ரூ. 2500/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி தேவையான பர்த்துகளை முன்கூட்டியே ரிசர்வ் செய்து கொள்ள நேரில் வருவது நலம்.

### 19 நாட்கள் – தீபாவளி கங்கா ஸ்நானமும் தங்க அன்னபூர்ணா தேவி தரிசனமும் கூடிய காசி யாத்திரை ஸ்பெஷல்


சென்னையிலிருந்து 11.10.98ம் தேதி இரவு ஹவுரா மெயில் மூலம் ஒரு 3 டயர் கேரேஜ் புறப்படுகிறது. டிபன் – காப்பி போஜனம் உள்பட நபருக்குக் கட்டணம் ரூ. 7875/-

விவரத்திற்கு ரூ. 2 ஸ்டாம்ப் அனுப்பி, முழு விவரங்கள் பெறலாம்.

## ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்,

34-A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி - 2. Ph : 706823
K. E. நம்பிள்ளை. D. சேகர். N.K. சேகர். N. கங்கா. Ph : 704312








1998 மே 17
வெகுதான்ய வைகாசி 3
மலர் : 56
இதழ் : 42

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## இரு பக்கமும் இடி வாங்கும் பிரதமர்!


'மத்திய அரசு தம்மைக் கலந்தாலோசிக்கவே இல்லை' என்கிறார் ஜெயலலிதா. மின் துறையை முறைப்படுத்தும் அமைப்புகள் நிறுவுவதற்கான அவசரச் சட்டம் குறித்து தமக்குத் தெரியவே தெரியாது என்கிறார்!

அவர் கட்சியைச் சேர்ந்த மத்திய சட்டத்துறை அமைச்சர் தம்பிதுரையின் கவனத்துக்கு வராமல், இந்த அவசரச் சட்டம் இறுதி வடிவம் பெற்றிருக்க முடியாது. எனினும், தாம் செய்தித்தாள்கள் மூலமாகவே அது குறித்து அறிந்ததாகச் சொல்கிறார் ஜெயலலிதா. தம்பிதுரையோ "அம்மா சொல்வதே சரி" என்பதற்கு மேலாக ஒரு வார்த்தை பேசத் தயாராயில்லை!

அரசியல் நாடகம்தான் என்றாலும் தம்பிதுரையின் தேவதா விசுவாசம் அ.தி.மு.க தலைவருக்குப் பெரிய பலம். ஆனால், பாவம் பிரதமர் வாஜ்பாயி! இத்தகைய விசுவாசத்தை அவரால் தமது சொந்தக் கட்சியினரிடமிருந்தும் பெற முடியவில்லை; கூட்டணிக் கட்சியினரிடமிருந்தும் பெற முடியவில்லை!

அமைதியாகவும் ஆக்கபூர்வமாகவும் ஆட்சி நடத்த விடாமல் கூட்டணிக் கட்சிகள் பக்கம் பக்கமாக இழுக்க, எதிர்க்கட்சிகளோ அவரை இன்னொரு திக்கிலிருந்து தாக்கி திணறடிக்கின்றன.

ஜனாதிபதி ஆட்சிமுறை குறித்து அத்வானி 'வாய் கொடுத்து' வைக்க, ஜனதாதளம்,




அவர் ஜனநாயகத்துக்கே முட்டுக்கட்டை போடுவதாகக் கொதிக்கிறது.

அகமதாபாத், காந்தி நகரில் நடந்த பி.ஜே.பி தேசிய குழு கூட்டத்தில், "என்னதான் கூட்டணி ஆட்சி நடத்தினாலும் கட்சியின் அடிப்படை சித்தாந்தங்கள் மறக்கப்பட மாட்டாது' என்று தலைக்குத் தலை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் பி.ஜே.பி தலைவர்கள்.


"அடிப்படை சித்தாந்தங்கள்' என்றால் என்ன என்பது தெரியாதா? இரட்டை வேடம் போடுகிறது பி.ஜே.பி...!" என்று காங்கிரஸ் தலைவர்கள் பிடித்து பிரதமரை உலுக்குகிறார்கள். 'இந்த ஆட்சி சிறுபான்மையினரின் எதிரி! மீண்டும் ராம ஜன்ம பூமி, அயோத்தியில் ராமர் கோயில் என்று பிரச்னைகள் தொடரப் போகின்றன...' என காங்கிரஸ் கூச்சல் போடுகிறது.

கூட்டணிக் கட்சிக்காரரான பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டஸ், தமது பங்குக்குக் குட்டையைக் குழப்பும் ஒரு காரியம் செய்திருக்கிறார். கிருஷ்ணமேனன் நினைவுச் சொற்பொழிவு ஆற்றும்போது, "சைனாதான் நமக்கு முதல் எதிரி" என்று பேசியிருக்கிறார்.

துளியும் இங்கிதமற்ற இந்தப் பேச்சு, பி.ஜே.பிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் முன்னாள் பிரதமர் குஜ்ராலின் கிண்டலுக்கு உள்ளாகியிருக்கிறது. சர்வதேச அளவில் கடும் விமர்சனங்கள் கிளம்பியிருக்கின்றன. சீன அரசாங்கமே மறுப்பும் கண்டனமும் தெரிவித்துள்ளது. அண்டை நாடுகளுடனான நல்லுறவை இப்படிச் சோதிக்கலாகாது என்று பொறுப்பான அயலுறவுத்துறை அனுபவஸ்தர்கள் எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை முற்றியிருக்கிறது.

ஃபெர்னான்டஸ் சீனாவுடன் உரசிப் பார்க்கிறார் என்றால், பாகிஸ்தானை பகிரங்கமாகச் சீண்டுகிறார் மஹாராஷ்டிர முதல்வர் ஜோஷி! 'அந்நாட்டுக் கலைஞர்கள் இங்கே மும்பையில் வந்து நிகழ்ச்சிகள் வழங்கவில்லை என்று யார் அழுதார்கள்? அவர்களெல்லாம் இங்கு வரவே வேண்டாம்' என்று பாகிஸ்தானிய கலைஞர்களுக்கு 144 போடுகிறார்! 'பாகிஸ்தானிய கிரிக்கெட் வீரர்கள் இங்கு ஏன் வர வேண்டும்?' என்று பாய்கிறார் பால் தாக்கரே!

கலையும் கலாசாரமும் மொழி, இன, தேச கால எல்லைகளைக் கடந்து மனிதனை




இணைப்பவை என்கிற அடிப்படைக் கோட்பாட்டுக்கே சமாதி கட்டுகிறது இந்தச் சிந்தனை. பி.ஜே.பி யின் கண்ணே போன்ற சிவசேனா பாசறையிலிருந்து இப்படியொரு புயல் கிளம்பி, பிரதமர் வாஜ்பாயிக்கு அவமானம் சேர்க்கிறது!

இவை எதையுமே பிரதமர் வெளிப்படையாகக் கண்டிக்கவில்லை; வாய் கொடுத்து வம்பு செய்பவர்களைக் கட்டுப்படுத்தவும் முயற்சி செய்யவில்லை.

கூட்டணிக் கட்சிகளின் அதிகப் பிரசங்கித்தனமும் எதிர்க்கட்சிகளின் தாக்குதலும் இதே ரீதியில் தொடருமானால், பி.ஜே.பியினால் இந்த ஆட்சியில் எதையுமே சாதிக்க முடியாது. சராசரியான அன்றாட நிர்வாகத்தைக்கூட முறைப்படுத்த முடியாது.

தமது கட்சிக்காரர்களையும் அமைச்சர்களையும் அளந்து பேசும்படி பிரதமர் உத்தரவிட வேண்டும். கூட்டணிக் கட்சிக்காரர்களின் மிரட்டல் அரசியலுக்கு இடங் கொடுக்காமல் சாணக்கியத்துடன் தமது நிலையை அவர் பலப்படுத்திக் கொள்வது நல்லது.

"பி.ஜே.பியை விட்டால், அடுத்த ஆட்சி அமைக்க லாயக்கானது காங்கிரஸ்தான்" என்று த.மா.கா தலைவர் மூப்பனார் தம் நிலையைத் தெரிவித்து விட்டார். சோனியாவைப் போய்ப் பார்த்துப் பேசியவர், தமது அரை மணி நேரச் சந்திப்புக்குச் 'சிறப்பு அர்த்தம்' எதுவும் கிடையாது என்றுதான் சொல்லியிருக்கிறார்.

இப்போது இல்லாத சிறப்பு அர்த்தம், வாஜ்பாயி தலைமையிலான அரசு மேலும் பல குழப்பங்களில் சிக்கித் தவிக்கும்போது தலை தூக்க வாய்ப்பு இருக்கிறது.

சோனியா முந்திக் கொண்டு செயல்படுவதற்கு முன்பாக வாஜ்பாயி விழிப்படைந்து தம்மையும் தமது கூட்டணியையும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். ஜெயலலிதாவை சாந்தப்படுத்த முயற்சி மேற்கொண்டால் போதாது. தேவைப்படுகிறபோது, கண்டனக் கணைகளையும் தேவைப்படுகிறவர் மீது வீசத் தயாராக வேண்டும். சுய கௌரவத்தை அடகு வைத்துவிட்டுப் பிரதமர் நாற்காலியில் ஒட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் வாஜ்பாயிக்கு ஏற்பட்டு விடக் கூடாது.

# எப்படி இயங்குகின்றன

**கோவை தொடர் குண்டுவெடிப்புக்குப் பிறகு ஏராள தீவிரவாதிகள்... ஏராள வெடி பொருள்கள், ஆயுதங்கள், கடத்தல் பொருள்களை கோவை காவல்துறை கண்டுபிடித்திருக்கிறது – என்றால் அதற்கு மிக முக்கிய காரணமாயிருப்பவை கோவையைச் சுற்றிப் போடப்பட்டுள்ள போலீஸ் செக்போஸ்ட்கள்... இதன் சாதனைப் பட்டியல் மிக நீளமாய் இருப்பினும், இதன் பின்னணியில் கோவைவாசிகள் வேதனையையும் சுமக்க வேண்டியுள்ளது. அது குறித்து ஒரு ரிப்போர்ட்!**



• கோவை - திருச்சி ரோடு செக்போஸ்டில்...

"இருந்த செக் போஸ்ட்களை எடுத்தது தான் தீவிரவாதிகளின் நடமாட்டத்திற்கு வழி வகுத்தது. கோவை கோட்டைமேட்டில் 'அல்-உம்மா' சுதந்தரமாக வளர உரமிட்டது...!"

கோவை குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு இப்படி உரக்கப் பேசியவர்கள்கூட (பொது ஜனங்கள்... அரசியல்வாதிகள் உட்பட...) இப்போது வாயடைத்து நிற்கின்றனர்.

இப்போது கோவையில் தடுக்கி விழுந்தால் சோதனைச் சாவடி மீதுதான் விழ வேண்டும்!

"ஒரு நாளைக்கு மட்டும் ஏழெட்டுத் தடவை பிஸினஸுக்காக இந்த வழியே போவேன் வருவேன்... ஒவ்வொரு தடவையும் கார் டிக்கியைத் திறந்து, ஹேண்ட்பேக்கை திறந்து பெரிய ரோதனை. ஒரிரு வாரத்தில் இவங்க (போலீஸ்) பழக்கமாயிட்டாங்கன்னு தைரியமா இருந்தா, அதுக்குள்ளே வேறொரு குரூப் போலீஸார் வந்திடறாங்க. அவங்ககிட்டே மறுபடியும் திறந்து காட்டி... இதனாலேயே நான் காரைத் தொடறதேயில்லை...!

– இப்படி சிறு ஒர்க் ஷாப் அதிபர் ஒருவர் கூறியதைத் தொடர்ந்து, இது குறித்து விசாரிக்கப் புறப்பட்டோம். சாம்பிளுக்கு நாலு செக்போஸ்ட்களை குறி வைத்து நகர்ந்தோம்.

"கோயமுத்தூர் வர்றதுன்னா குலை நடுங்குது மாப்ளே. உம் மக கல்யாணத்துக்குக் கார்ல வந்தேன். 'டிக்'கைத் திற சூட்கேஸைக் காட்டுன்னு மண்டபத்துலயே போலீஸ்காரங்க தொந்தரவு. இப்ப பஸ்ல வந்தேன். நினைச்ச இடத்துல நிறுத்தி நிறுத்தி எந்த ஊரு, என்ன பேரு... முகத்தைக் காட்டுன்னு பிரச்னை... இந்தத் தொல்லைக்குத்தான் இனி ஆறு மாசத்துக்குக் கோயமுத்தூரே வர்றதில்லேன்னு முடிவு செஞ்சுட்டேன்... என்னைச் சங்கடப் படுத்தாதே...!"

– பெங்களூரிலிருந்து வந்த உறவினர், ஊருக்குத் திரும்பிப் போகும்போது தம்மிடம் சொல்லி அலுத்துக் கொண்ட வார்த்தைகளைக் கூறி நம்மிடம் அரற்றினார் ஒரு பஸ் டிரைவர்.

"வெளியூர்க்காரங்களுக்கு இப்படின்னா நமக்கு? இந்த வழியில ஒரு ஆன் விடற

# கோவை செக்போஸ்டுகள்?

தில்லே... லைசன்ஸ் இருக்கா.... இன்ஷ்யூரன்ஸ் ரசீது இருக்கான்னு கேட்டு ஒரே தொந்தரவு... பக்காவா எல்லாம் கையில வச்சுக்கணும்... இல்லே, அம்பதோ, நூறோ பாக்கெட்ல வச்சுக்கணும்!" இப்படி இன்னொருவர்.

**கோ**வை புறநகர்ப் பகுதியில் இருகூர் – கோவை பகுதியின் காட்டுப் பாதையில் புழுதி மண்ணில் முக்குளித்தபடி தாறுமாறாய் வண்டி போட்டிபடி சிலர். (எல்லாமே டூவிலர்கள்). வண்டிகளில் காய்கறிக் கூடை, மாட்டுத் தீவனம், இன்ன பிற வகையறாக்கள்.

"ஏன் இப்படி காட்டுப்பாதையில்... நேர் வழியில் வர வேண்டியதுதானே?" எனக் கேட்டோம்.

"அதையேன் சார் கேட்கறீங்க... நாங்க தினமும் காய்கறி மார்க்கெட் போயிட்டு அந்த வழியில்தான் வருவோம். ஆனா இப்ப 'செக் போஸ்ட்' போட்டாலும் போட்டாங்க... 'காய்கறியக் கொட்டு' 'காட்டு'ன்னு ஒரே அவஸ்தை. அதெல்லாம் சரியாயிருந்தா வண்டிக்கு லைசன்ஸ் உண்டா, அப்படியா இப்படியான்னு ஏகப்பட்ட கேள்விகள். அதனாலேயே தடம் மாத்தி வர வேண்டியதாப் போச்சு..!

"அவங்க பரவாயில்லை சார்... நா ஒரு பாங்க் ஸ்டாப். ஐடன்டிடி கார்டைக் காட்டினாலும் அவ்வளவு சுலபமா விடறதில்லே. வண்டி லைசென்ஸ், பர்மிட், இன்ஷூரன்ஸ் எல்லாம் காட்டச் சொல்லி... நா இனி கமிஷனர்கிட்டேயே புகார் கொடுக்கப் போறேன்...!" ஸ்கூட்டரில் சென்ற ஒருவர் இப்படிச் சொன்னார்.

**அ**வர்கள் குறிப்பிட்ட செக்போஸ்ட்டுக்குப் போன போது ஏழெட்டு மோட்டார் சைக்கிள்கள். ஓலை வேய்ந்த கூரைக்குக் கீழ் செக்போஸ்ட். படு சுறுசுறுப்பாய் ஒவ்வொருவரையும் ஓரங்கட்டி விசாரிப்பு. பழுப்புக் காகிதங்களை வாங்கி வாங்கிப் புரட்டல். இல்லாதவர்களிடம் சில 'பரிமாறல்கள்'...



• சோதனையின் போது...

நாம் கவனித்துக் கொண்டிருந்தபோதே வழுக்கிக் கொண்டு வந்த மாருதி வேனை மறித்து நிறுத்திச் சோதனை. அதனுள் பர்தா போட்ட சில பெண்கள். குல்லா போட்ட இரண்டு ஆண்களைப் பார்த்தது தான் தாமதம். போலீஸாருடன் ஒரு எஸ்.ஐயும் காருக்குள் தலை நீட்டினார்.

"என்ன முஸ்லீமா...?"

கேள்வியின் பின்னால் காருக்குள் நெளியும் பீதி.

"ஏம்பா... காருக்குள்ள முஸ்லீம் குடும்பம்...ம்...ம் நல்லா தரவா 'செக்' பண்ணு..."

பயப் பிராந்தியில் காரை விட்டே இறங்கி விட்ட பெண்கள். அவர்கள் கையில் குழந்தைகள். டிக்கியைத் திறந்து, கதவு திறந்து, சீட்டுக்கடியில் எல்லாம் ஆராயப்பட்டன! இப்படிப்பட்ட சோதனை தவிர வேறு வழியில்லை என்றாலும் நமக்கே சங்கடமாகி, அப்படியே பின்வாங்கி, கோவை–திருச்சி ரோடு சோதனைச் சாவடி



**ரன் இல்லாமல் விக்கெட்!**

**பாரதிய ஜனதா அரசில் இருந்து சேடப்பட்டி முத்தையா, பூட்டாசிங் ஆகியோர் நீக்கப்பட்டது பற்றி ஜெய்பால் ரெட்டி கூறியது: "ஒரு ரன்கூட எடுக்காமல் 2 விக்கெட் விழ்ந்து விட்டது!"**
**தகவல்: போடி எஸ். சையது முகமது**

நோக்கி நகர்ந்தோம்.

மாலை நேரமாதலால் சந்தேகப்படும் படியான இரண்டு, மூன்று, நான்கு சக்கர வாகனங்களுடன் வெளியூர் பஸ்களையும் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர். நாம் நின்று கவனித்த அரைமணி நேரத்தில் மறதியாகக் கூட யாரிடமும் 'லைசென்ஸ்' கேட்டுத் தொந்தரவு செய்ததைக் காண முடியவில்லை, எனவே அதுபற்றி அவர்களிடமே நெருங்கிக் கேட்டோம்.

"எங்களுக்கு என்ன உத்தரவோ அதை மட்டுமே செய்கிறோம். அனைத்து வாகனங்களையும் நிறுத்தி நிறுத்திச் சோதனை போட்டது ஒரு கால கட்டம். இப்பவெல்லாம் சந்தேகப்படற வாகனங்களை மட்டுமே நிறுத்திச் சோதனையிடுகிறோம். லைசென்ஸ் கேட்பதெல்லாம் எங்க டூட்டி இல்லே. அதுக்கு traffic இருக்கு. ரொம்ப அவசியமேற்பட்டா மட்டும் (மிகுந்த சந்தேகத்திற்குள்ளானால்) அதெல்லாம் கேட்டு மேலிடத்தில் ஒப்படைப்போம். இங்கேதான் நிறைய சந்தனக் கட்டைக, கட்டுகட்டா கரன்ஸிகளெல்லாம் பிடிச்சுக் கொடுத்திருக்கோம்...!" என்றனர்.

நல்ல மதிய நேரம்- அலர்ட்டான கோட்டை மேட்டுப் பகுதியில் (கர்னாடிக் தியேட்டர் சமீபம்) பிரவேசித்த போது யாரும் எதுவும் கண்டு கொள்ளவில்லை. அதிரடிப் படை வீரர்கள் + போலீஸார் படு கேஷுவலாய் அரட்டையடித்தபடி இருந்தனர். சாலையில் நின்றிருந்த இரண்டொரு போலீஸார் மட்டும் போகிற வருகிற வாகனங்களை உற்றுப் பார்த்தபடி..... (வண்டியை நிறுத்திச் சோதனை போட்டு அலுத்துப் போய் விட்டனரோ...?) காரணம் கேட்ட போது, மாலை இரவு நேரங்களில் மட்டும் சோதனை கடுமையாய் இருக்குமாம்.

உக்கடம் பஸ் ஸ்டாண்ட் செக்போஸ்டிலும் 'கார்கள்' மட்டும் நிறுத்தப்பட்டு, டிக்கி திறக்கப்பட்டு, உடனுக்குடன் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

அடுத்து நாம் சோதனையிட்ட சோதனைச்சாவடி கோவை அவினாசி சாலையில் (சென்னைக்கான பிரதான சாலை). மற்ற சோதனைச் சாவடிகளை விட கூடுதல் பரபரப்பாய் அது இருந்தது. காரணம், அப்போதுதான் ஒரு 'பஸ்ஸில்' சந்தனக் கட்டைகளைப் பிடித்தனராம். அதனால் ஒரு பஸ் விடாமல் சோதனைகள் துரிதப்படுத்தப் பட்டிருந்தது.

சோதனைச் சாவடி கூண்டுக்குள் சில சந்தனக்கட்டைகள். சுற்றிலும் பல போலீஸார்.

"பாருங்க சார்... ஏதோ நாங்க டெரரிஸ்ட், வெப்பன்ஸ்... பாம்ன்னு புடிக்கத்தான் புறப்பட்டோம்... ஆனா அகப்படறதோ சந்தனக் கட்டை, கத்தை கத்தையா பணம், கஞ்சா, அபின்னு...!" என்று சிரித்தவரிடம், ''எல்லோர்கிட்டேயும்... லைசென்ஸ் கேட்கறீங்களாமே..." என்றோம்.

''கிடையாது சார். லைசென்ஸைப் பொறுத்தவரை சில பேர் கிட்ட வெரிஃபிகேஷனுக்காகக் கேட்டுக்கிட்டிருந்தோம். கார் குண்டு, மொபட் குண்டுன்னு திருடப்பட்ட வாகனங்களிலிருந்து உருவானதாகத் தகவல் வந்ததன் நிமித்தம் அந்தச் சோதனை நடந்தது. இப்ப அதுகூட சந்தேகப்படற வாகனங்கள் மீது மட்டும்தான்...!" என்றார்.

இது சம்பந்தமாக கோவை மாநகர போலீஸ் கமிஷனர் ராதாகிருஷ்ணன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "போலீஸ் செக்போஸ்ட்களால் பொது ஜனங்கள் அவதிப்படுவதாகச் சொல்கிறார்களே... கோவையில் செக்போஸ்ட்கள் இன்னும் எத்தனை கால கட்டத்திற்கு என காலவரை ஏதும் உண்டா...?''' என்று கேட்டோம்.

"செக்போஸ்ட்களால் தொந்தரவா? யார் சொன்னது?' அப்படியெல்லாம் இதுவரை எந்த ரிப்போர்ட்டும் எங்களுக்கு வரவில்லை தற்போது செக்போஸ்ட்கள் சிறப்பாகவே இயங்கி வருகின்றன. அவை பொது ஜனங்களுக்குப் பாதுகாப்பாய் அமைந்துள்ளது என்பதே எங்களுக்கு வரும் தகவல்கள்...!" என்றார்.

கட்டுரை, படங்கள்: **ரோகிணி**

## உங்கள்
## இல்லத்தை அலங்கரிக்க



FLORIDA

# Supreme
## FURNITURE

எங்களிடம்
40
வகையான
மாடல்கள்
உள்ளன



FLORA

பிராந்திய அலுவலக முகவரி :

## தி சுப்ரீம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,

12, முதல் குறுக்கு தெரு, C.I.T. காலனி, மைலாப்பூர், சென்னை - 600 004.
Ph : 4970119, 4970120 Fax : 044-4998263

பள்ளிகள், கல்லூரிகள், கல்யாண மண்டபங்கள், சேர் வாடகைக்கு விடுபவர்கள், சமூகக் கூடங்கள், அறக்கட்டளைகள் மற்றும் சொந்த உபயோகத்திற்கு மொத்தமாக வாங்குவோருக்கு கற்பனைக்கு எட்டாத விலையில் கொடுக்கப்படும்.

அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் :

● சென்னை : ஹண்டர்ஸ், (Ph : 5230489/5227631). விஜய் இண்டர்நேஷனல், (Ph : 517499/512972). தனா ஸ்டீல் சென்டர், (Ph : 5222205/5261883). துர்கா மார்க்கெட்டிங், (Ph : 2381027) ● கோயம்புத்தூர்: ஹண்டர்ஸ், (Ph : 210753) ● மதுரை : சுப்ரீம் ஷாப்பி, (Ph : 747786/747400) ● கும்பகோணம் : ஸ்ரீகலா ஏஜென்ஸீஸ், (Ph : 421650) ● திருநெல்வேலி : N.K.V. ஏஜென்ஸீஸ், (Ph : 337029) ● தூத்துக்குடி : N.K.V. ஏஜென்ஸீஸ், (Ph : 328783) ● சேலம் : சுப்ரீம் ஏஜென்ஸீஸ், (Ph : 446970) ● பாண்டிச்சேரி : ஸ்ரீராம் டிரேடர்ஸ், (Ph : 31717). நவநீத் அஸோஸியேட்ஸ், (Ph : 23385). சுப்ரீம் லிங்க்ஸ், (Ph : 46312). ஸ்ரீராமஜெயம் எண்டர்பிரைஸஸ், (Ph : 37205) ● ஈரோடு : காவேரி டிரேடர்ஸ், (Ph : 224008). ஸ்ரீ அபிராமி டிரேடர்ஸ், (Ph : 253396). ● திருச்சி : ஜெனரல் எக்விப்மெண்ட்ஸ், (Ph : 707710/707265) ● கரூர் : ஆதிசக்தி டிரேடர்ஸ், (Ph : 62176/62329) ● திண்டுக்கல் : ராணி ஃபர்னிசர்ஸ், (Ph : 420778) ● திருப்பூர் : செந்தூர் டிரேடர்ஸ், (Ph : 746625) ● புதுக்கோட்டை : விநாயகா ஃபர்னிச்சர், (Ph : 23415 PP) ● காஞ்சிபுரம் : காஞ்சி கிளாஸ் & பிளைவுட், (Ph : 24215) ● தாராபுரம் : ஸ்ரீசுதர்சன் ஏஜென்ஸீஸ், (Ph : 22644) ● திருவண்ணாமலை : பரணி டிரேடர்ஸ், (Ph : 25738) ● அறந்தாங்கி : ஜீவா எலக்ட்ரானிக்ஸ், (Ph : 20064) ● நாமக்கல்: நாமக்கல் சுப்ரீம் ஃபர்னிசர்ஸ், (Ph : 32365) ● விருதுநகர் : பாலாஜி ஏஜென்ஸீஸ் குரூப் (பி) லிட், (Ph : 45155/45255). கிளைகள் : சிவகாசி, (Ph : 24711) ராஜபாளையம், (Ph : 24755)

**Supreme** வேண்டும் என்று கேட்டு வாங்குங்கள்

# கல்கி—B. M. SILK SAREES

BMSS

## இணைந்து வழங்கும்

## பட்டுப் புடவை பரிசுப் போட்டி - 6

இந்த இதழில் ஒரு வி.ஐ.பி. தமக்குப் பிடித்த ஐட்டமாக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறார். அது என்ன ஐட்டம்? அந்த வி.ஐ.பி. யார்?

இந்த இதழைப் படித்துக் கண்டுபிடித்துக் கீழுள்ள ஒரு பாதிக் கூப்பனில் எழுதியனுப்புங்கள். பலர் சரியான விடையெழுதினால் குலுக்கல் முறையில் ஒருவருக்கே பட்டுப் புடவை பரிசு!

மீதிப் பேருக்கு ஏமாற்றம்தானா? இல்லை. கூப்பனிலுள்ள மறுபாதியிலும் இதே விடையை எழுதிப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். பன்னிரண்டு வாரம் தொடரப் போகும் இப் போட்டியின் முடிவில் பம்பர் பரிசு ஒன்றும் காத்திருக்கிறது! விவரங்கள் விரைவில்.

- விடைகளைக் கூப்பனில் மட்டுமே எழுதியனுப்ப வேண்டும். ஒரிஜினல் கூப்பன்தான்; ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.
- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

**முடிவு தேதி: 25.5.98**

---

**பட்டுப் புடவை பரிசுப் போட்டி – 6**
**(நீங்கள் பத்திரப்படுத்த வேண்டிய கூப்பன்)**

வி.ஐ.பி.யின் பெயர் :

..............................................................

அவருக்குப் பிடித்த ஐட்டம் :..................

என் பெயர் : ..............................................

முகவரி : ..................................................

..............................................................

---

**பட்டுப் புடவை பரிசுப் போட்டி – 6**
**(எங்களுக்கு அனுப்ப வேண்டிய கூப்பன்)**

வி.ஐ.பி.யின் பெயர் :

..............................................................

அவருக்குப் பிடித்த ஐட்டம் : ..................

என் பெயர் : ..............................................

முகவரி : ..................................................

..............................................................

---

"டில்லியில் உள்ள பா.ஜ.க. தலைமை நிலையத்தில் தேதி குறிப்பிடாமல் சென்னைக்கு ஒரு open விமான டிக்கெட்டை எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும்; ஏனென்றால் எந்த நேரமும் ஜஸ்வந்த சிங் ஜெயலலிதாவுடன் பேச்சு வார்த்தை நடத்த சென்னைக்குப் போக வேண்டி இருக்கும்" என்று பா.ஜ.க. மேல்மட்டத் தலைவர்களிடையே கிண்டலாக ஒரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது.

ராஜபுதன வம்சத்தில் வந்தவர் ஜஸ்வந்த். சித்தூர் ராணி பத்மினி என்று கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா, அந்த சித்தூர்கார் சமஸ்தானத்தின் வாரிசுதான் ஜஸ்வந்த். ஆஜ்மீரிலும், டேராடூனிலும் தமது படிப்பை முடித்தவுடன் ராணுவத்தில் சேர்ந்து விட்டார். ராணுவத்தில் ஆராய்ச்சிப் பிரிவில் பணிபுரிந்தவர் 1970களில் பா.ஜ.க.வின் கொள்கைகளால் கவரப்பட்டு அதில் இணைந்தவர். 1980களிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வரும் ஜஸ்வந்துக்கு 1998-ம் ஆண்டு கொஞ்சம் போதாத காலம்தான்! இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியில் தோற்றுப் போனார். ஜெயித்திருந்தால், நிதி அல்லது பாதுகாப்புத் துறை அமைச்சராக வந்திருக்க வேண்டியவர். 'தேர்தலில் தோற்றவர்களுக்கு அமைச்சரவையில் இடம்கொடுக்கக் கூடாது' என்ற பாலிஸி கடைப்பிடிக்கப்பட்டதால் வாய்ப்பை இழந்தார் ஜஸ்வந்த்.

பாராளுமன்றத்தில் மிகச் சிலர் பேசும் போதுதான், எல்லோரும் கூர்ந்து கவனிப்பார்கள். குறிப்

# தோசைப்

பாக, சந்திரசேகர், வாஜ்பேயி, சோம்நாத் சாட்டர்ஜி, ப. சிதம்பரம் ஆகியோர் பேசும் போது அவை அமைதியாகக் கேட்கும். இந்த வரிசையில் ஜஸ்வந்தும் உண்டு. அவரின் அலங்காரமான ஆங்கிலப் பேச்சு அனைவரையும் ஆச்சர்யப்பட வைக்கும். ராஜ்ய சபையில் ஜெ. உறுப்பினராக இருந்த போது அவருக்கு அடுத்த சீட்டில் உட்கார்ந்து இருந்தவர் ஜஸ்வந்த். கான்வென்ட் படிப்புக்காரரான ஜெ.வுக்கு ஜஸ்வந்தின் ஆங்கில உச்சரிப்பும், கண்ணியமான பழக்க வழக்கங்களும் பிடித்துப் போயிருந்ததில் வியப்பில்லை.

பைப்பில் புகையிலை போட்டுப் பிடிக்கும்

வழக்கத்தைக் கொண்டிருப்பவர் ஜஸ்வந்த். இது தவிர இரண்டு, மூன்று பாக்கெட் சிகரெட்டும் தினசரி இவருக்குத் தேவைப்படும். தில்லி தீன் மூர்த்தி சந்தில் (Lane) உள்ள இவரது வீட்டிற்குப் பத்திரிகையாளர்கள் படையெடுத்துக் கொண்டேயிருப்பார்கள். எந்த ஒரு விஷயத்திலும், ஒரு தெளிவான கருத்தைக் கொண்டிருப்பவர். இதுவரை இவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் கிடையாது. பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, சர்வதேச உறவு, சுற்றுச்சூழல் ஆகிய தலைப்புகளில் உள்ள புத்தகங்கள்தாம் இவருக்குப் பிடித்தவை.


ராணுவத்தில் இருந்தவர் என்பதால் நேரம் தவறாமை என்பது ரத்தத்தில் ஊறி விட்ட ஒன்று. ஒருமுறை உறவினர்கள் வீட்டு (அதுவும் மனைவியின்) விசேஷம் ஒன்றுக்கு அழைத்திருந்தார்கள். ஜஸ்வந்த் சரியான நேரத்துக்குச் சென்று விட்டார். ஆனால் விசேஷம் துவக்கப்படாமல் கால தாமதமாகிக் கொண்டிருந்தது. எழுந்தார் ஜஸ்வந்த். முக்கியமானவரிடம், "வெரி ஸாரி" என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார். நேரம் கிடைக்கும்போது கால்ப், போலோ என்று விளையாடக் கிளம்பி விடுவார். நம்ம ஊர் சமாசாரம் ஒன்றிற்கு இவர் அடிமை. ஆம்; இவர் ஒரு தோசைப் பிரியர். (போயஸ் தோட்டம் குறித்து வைத்துக் கொள்ளலாம்.)

சென்ற முறை வாஜ்பேயி அரசு பதின்மூன்று நாள் பொறுப்பில் இருந்தபோது நிதி அமைச்சராக இருந்த ஜஸ்வந்த், அந்தத் துறை அதிகாரிகளை மிகவும் கவர்ந்து விட்டார். அவருடைய கிரகிக்கும் அறிவும், தொலை நோக்குப் பார்வையும் அவர்களுக்குப் பிடித்துப் போய் விட்டன. "இவர் ஐந்து வருட காலம் பதவியில் இருந்தால் இந்தியப் பொருளாதாரத்திற்கு ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுத்திருப்பார்" என்று சொன்னார்கள் அவர்கள். வாஜ்பேயி அரசு இந்த முறை திட்டக் கமிஷன் துணைத் தலைவராக பொறுப்புக் கொடுத்திருக்கிறது. திட்டக் கமிஷன் வேலைகளில் ஜஸ்வந்த் தீவிரக் கவனம் செலுத்துவதற்கு ஜெ. அவரை அனுமதிக்க வேண்டும். ●

— கௌசி

படம் : நியூஸ் ஸ்கிரைப்

# பிரியர் ஜஸ்வந்த் சிங்!






**• போலி மருத்துவமனை**

'ஈவா' என்ற பெயரில் நடந்த அந்த 24 மணி நேர சிகிச்சை - மருத்துவமனை இருக்கும் இடம் எப்படித்தான் இருக்கிறது என்று பார்க்கச் சென்றோம்.

வண்ணாரப்பேட்டை நெடுஞ்சாலையிலிருந்து ஒதுங்கிக் கிடக்கிறது கொருக்குப்பேட்டை பகுதி. பஸ் ஸ்டாப்பிற்கு வர வேண்டும் என்றால் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடை! பஸ் நுழைந்து வர முடியாத குறுகலான பகுதி.

இளைய முதலி தெரு முழுக்க லாரிகளின் அணிவகுப்புத்தான். இரும்புப் பட்டறைகளின் ஓசை அந்த ஏரியா முழுக்க ஒலிக்கிறது. அந்தத் தொழிலை நம்பியிருக்கின்ற கூலித் தொழிலாளிகளின் குடியிருப்பைப் பார்த்தோம். அழுக்கேறிய சட்டைகளோடு



• இறந்த சிறுவனின் தாய்

டாக்டர் போர்வையில் உலாவிய மனோகரன் வேறு வேறு ஏரியாவில் கிளினிக் என்ற பெயரில் நான்கு 'கடைகளை' இரண்டாண்டுகளாக நடத்தி வந்திருக்கிறார்.

தவறான சிகிச்சையால் அந்த இடத்திலேயே மனோகரன் என்ற சிறு வயதுப் பையன் இறக்காமல் இருந்திருந்தால் இன்னமும் தொழில் கனஜோராக நடந்து கொண்டிருக்கும்!

# "பகட்டு பண்ற டாக்டர்கிட்ட மரியாதை இல்லீங்க; அதான் இவங்ககிட்டே வர்றோம்!"

பட்டறைகளில கிடக்கிறார்கள். தாத்தா, மகன், குழந்தை, குட்டிகள் என்று குடும்பங்கள் முழுக்கவும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றன.

படிப்பறிவு குறைவான மக்களின் நாடியை உணர்ந்த போலி டாக்டர் மனோகரன் அந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். ஒரு கிளினிக்கில் கம்பவுண்டராக வேலை பார்த்த அனுபவம் கைகொடுத்திருக்கிறது.

"ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் இப்படி ஒரு பெட்டிக் கடையிலே தொழில் நடத்து வாரா? உங்களுக்கு ஏன் சந்தேகம் வரவில்லை?" என்று அப்பகுதி மக்களிடம் கேட்டோம்.

"எங்களுக்கு உடனே எப்படிங்க சந்தேகம் வரும். இந்த ஏரியாவில அவசரத்துக்கு ஒரு பெரிய டாக்டர் இல்லீங்க. வண்ணாரப்பேட்டைக்குப் போகணும். அங்கெல்லாம் ராத்திரி பத்து மணியோட கிளினிக்க மூடிடுவாங்க. நேரங்கெட்ட நேரத்தில யாருக்காவது உடம்பு சரியில்லைன்னா உடனே தூக்கிட்டு எங்க போறது? அந்த மாதிரி சமயத்தில இங்கதான் கொண்டு வருவோம்" என்றார் விஜயகுமார்.

பேச்சு முறை, தோற்றம் இவற்றை இம்மக்கள் கவனிக்கவில்லை என்பதும் தெரிந்தது. போலி டாக்டருக்கு அதுவே ஒரு பிளஸ் பாயிண்டாகவும் இருந்திருக்கிறது.

"ரோலிங் சேரில் உக்காந்துக்கிட்டு



• இறந்த சிறுவனின் சகோதரி



• விஜயகுமார்

கையைப் பிடிச்சுப் பாப்பாரு. பேஜர், டுவீலர்ன்னு ஒரே பரபரப்பா இருந்ததால நாங்க கவனிக்கலை. வேற வேற இடத்தில கிளினிக் இருக்கிறது தெரிஞ்சதால சந்தேகமே வரலை" என்றார் ரமேஷ்.

ஆறு மாதத்திற்கு முன்பே பிடிபட்டிருக்க வேண்டியவர், எப்படியோ தப்பி விட்டார்! வசுமதி என்ற சிறுமிக்குத் தவறான சிகிச்சை கொடுத்ததால் ஒரு கால் செயல் இழந்து பின் இறந்திருக்கிறாள். பரூக் என்ற பையன் இதே போல் இறந்திருக்கிறான். இவர்கள் ஊசி போட்ட ஒரு வாரம் கழித்து இறந்ததால் மக்களிடம் சந்தேகம் தோன்றவில்லை.

"இந்த மக்களுக்கும் புத்தி இல்லீங்க. பீஸ் மத்த டாக்டரை விட பாதி குறைச்சலா வாங்குறான்னு எல்லாம் ஏமாந்திட்டாங்க" என்றார் ஆனந்தன்.

காய்ச்சல் என்று போனவர்களுக்கு பென்சிலின் சேருமா என்று மட்டும் விசாரித்து அறிந்து கூடுதல் டோஸேஜில் மருந்தைச் செலுத்திக் காய்ச்சலை உடனே நிறுத்தியிருக்கிறார். அதனால் மக்களிடம் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

"பெரிய பெரிய பில்டிங்குள்ள போறதுக்குச் சங்கடமா இருக்குங்க. பாதி இங்கிலீஷ்ல கேக்குறாங்க. கேக்குறதுக்கு தலையாட்டிடுறோம். முழுசா சொல்ல முடியறதில்ல. காருல வந்து இறங்குறவங்களை ஒரு மாதிரி கவனிக்கிறாங்க. எங்களைக் காக்க வச்சு கண்டுக்காம இருப்பாங்க. என் பொண்ணுக்கு வயித்து வலின்னு ஒரு டாக்டர்கிட்டே தூக்கிட்டுப் போனேன். நர்ஸ் அப்பாயின்ட்மெண்ட் வாங்கியிருக்கீங்களான்னு கேட்டாங்க. இல்லன்னதும் போங்கன்னுட்டாங்க. நான் சண்டை போட்டேன். டாக்டர் வந்து ஆளவச்சு வெளியேத்திட்டாரு. கடைசியிலே இந்த டாக்டர்கிட்டே தான் வந்து காட்டினேன். அந்த மாதிரி பகட்டு பண்ற டாக்டர்கிட்ட எங்களுக்கு மரியாதை இல்லீங்க. அதனாலதான் இங்க கொண்டு போயிட்டு இருந்தோம்" என்கிறார் சண்முகநாதன்.

இறந்த பையன் மனோ



**"எம்பி. ஆகி ஒரு மாசம் ஆகுது; அதுக்குள்ள அந்த எம்.பி. பேர்ல ஊழல் புகார் வந்துடிச்சே?"**
**"நிச்சயமா ஐந்து வருஷம் பதவி இருக்கும்னு தெரிஞ்சா பொறுமையா சம்பாரிச்சுக்கலாம். அதுக்கு வழி இல்லாதப்ப என்ன செய்யறதாம்...?"**
**— சீர்காழி. வி. ரேவதி**

கரின் சொந்த ஊர் திண்டிவனம் தாலுகாவில் உள்ள ஒலக்கூர். எவர்சில்வர் பாத்திரக் கடையில் குறைந்த சம்பளத்தில் இருந்தாலும் மாதா மாதம் வீட்டுக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்திருக்கிறான்.

மனோகரனை எட்டு வயதிலிருந்து பெரியம்மா மகள் கஸ்தூரிதான் வளர்த்து வந்திருக்கிறார். கஸ்தூரி இரண்டு மாதத்திற்கு முன்புதான் வண்ணாரப்பேட்டையிலிருந்து மாறி இந்த இளைய முதலி தெருவுக்குக் குடிவந்திருக்கிறார்.

''பக்கமா இருக்கிறதால எல்லோரும் இங்கதாங்க ஊசி போட போவாங்க. தம்பி மனோகரனுக்கு அன்னைக்கு காய்ச்சலோடு வாந்தி வேறே.. எங்க வீட்டில எல்லோரும் வேலைக்குப் போய்ட்டாங்க. நான் தம்பியைக் கூட்டிட்டு வந்து காட்டினேன். அப்ப அந்த டாக்டர் இல்லை. நர்ஸ் மட்டும் இருந்தாங்க. இடுப்புல ரெண்டு ஊசி போட்டாங்க. குளூகோஸ் பாட்டில்ல ரெண்டு மருந்து சேத்து ஏத்துனாங்க. நான் பீஸ் எவ்வளவுன்னு கேட்டேன். எட்டு நூறுன்னு சொன்னாங்க. எங்கையில 200 ரூவாதான் இருந்திச்சு. 200 ரூபாயைக் கொடுத்திட்டு இன்னொரு தம்பியைப் பார்த்துக்கச் சொல்லிட்டு தோடை அடகுவைக்க வட்டி கடைக்கு ஓடினேன். அஞ்சு நிமிஷம் கூட ஆகியிருக்காது. ஒருத்தர் தம்பி சீரியசா இருக்குன்னு தேடி வந்தார். போய்ப் பார்த்தப்போ வாயிலயும் மூக்கிலயும் நுரை நுரையா தள்ளியிருந்துச்சு. சின்னத் தம்பியைக் காணோம். செத்துப் போவான்னு தெரிஞ்சதும் காலையில சாப்பிட்டிருக்க மாட்ட, போய் சாப்பிட்டுட்டு வான்னு ஏமாத்தி அனுப்பிட்டாங்க.

''சாகறதுக்கு முன்னாடிதான் அந்த போலி மனுசன் வந்திருக்கான். நாடியைப் பாத்திட்டு உள்ள போயி இந்த ஊசியைப் போடுன்னு சொல்லிட்டு போயிட்டாப்பல. அப்பயே தம்பி இறந்திட்டான். நாங்க பதறிக்கிட்டு இருந்தோம். டாக்டர் வரவே இல்லை. அப்புறந்தான் போலீசில புகார் கொடுத்தோம்'' என்கிறார் கஸ்தூரி.

இந்த போலி டாக்டர் மனோகர், புழல், மூப்பனார் நகர், பாரதி நகர் என மற்ற மூன்று இடங்களில் வேறு வேறு பெயர்களில் மருத்துவமனைகளை நடத்தியிருக்கிறார். இந்தப் போலிக்கு போலி நர்ஸ், போலி டாக்டர்கள் என்று ஒரு போலி வட்டமும் உதவிக்குச் செயல்பட்டிருக்கிறது.

மனோகரனுக்கு ஏமாற்றும் துணிவைக் கொடுத்தது மக்களின் பாமரத்தனம்தான். அதே சமயம் பெரிய டாக்டர்கள், பணம் சம்பாதிப்பது மட்டுமே நோக்கமாக இருப்பதால் மேல்தட்டு மக்களின் வருகைக்குத் தோதான இடங்களில் மட்டுமே மருத்துவமனைகளைக் கட்டி காத்திருக்கின்றனர்.

நல்ல உள்ளம் கொண்ட சில டாக்டர்களேனும் அடித்தட்டு மக்கள் நிரம்பியுள்ள இப்படிப்பட்ட இடங்களில் மருத்துவமனைகளைத் தொடங்க வேண்டும். பத்து இருபதுக்கெல்லாம் நோயாளிகளைப் பார்க்க மாட்டோம் என்று ஒதுங்கினால், போலிகள் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பிப்பார்கள்! நமக்குத் தெரியாமல் இன்னும் எத்தனை சவா மருத்துவமனைகளோ! எத்தனை மனோகரன்களோ!

– யுகாந்தன்
படங்கள் : ஸ்ரீஹரி



# சாக்லேட் பார்க்க மியூசியம் போகணும்!

"என்ன பெட்...? ஒரு ஃபைவ் ஸ்டார்?"- இப்படி இன்னிக்கு நம்ம காலேஜ் சர்க்யூட்ல சுலபமா bet கட்றோம். அடுத்த நூற்றாண்டுலே இப்படில்லாம் பந்தயம் வைக்கணும்னா ப்ரூனய் சுல்தான் குடும்பத்துல வளர்ப்பு மகளா/ மகனா போனாத்தான் உண்டு! சாக்லேட் விலை

## சுமி சூப்பர் மார்க்கெட்

அப்படி எகிறிப் போகுதாம்! தென்னமெரிக்க கோகோ பயிர்கள்ல Witches Broom னு ஒரு பூஞ்சாள நோய் அடிச்சு பயிர் செமை பாதிப்பாம்... நெஸ்லே, காட்பரி, ஹெர்ஷிஸ்ன்னு பொதுவா முறைச்சுக்கற உலக சாக்லேட் நிறுவனங்கள் ரொம்ப ஒத்துமையா உட்கார்ந்து பிரச்னையை எப்படி சமாளிக்கறதுன்னு யோசிக்கறாங்களாம்...! பூஞ்சாள நோய்க்காவது மருந்து கண்டுபிடிச்சுருவாங்களாயிருக்கும். ஆனா உலகத்துல இருக்கிற rain forest என்கிற அடர்காட்டுப் பகுதி அழிஞ்சுக்கிட்டே வருதே... அந்த மாதிரி காட்டு நிழல்லதான் கோகோ பயிர் விளையும்... இந்த ரேட்ல காடுகள் அழிஞ்சா நம்ம கொள்ளுப் பேரன் பேத்திகளுக்கு சாக்லேட்டை மியூசியத்துலதான் காட்டணும்;



• பி.வி.ஆர்.



• அசோகமித்திரன்

காடுகளை விடியோவாத்தான் காட்டணும்.

காடுகளையும் வனவிலங்குகளையும் காப்பாத்தத்தான் அரசாங்கம் திட்டமெல்லாம் போட்டிருக்கேன்னுவீங்க... பெங்களூர் பன்னர் கட்டா நேஷனல் பார்க்குல என்னாச்சு தெரியுமா? யாரோ பாவிங்க கள்ளச்சாராயத்தை பூமிக்கடியில புதைச்சு வைக்க, அந்த வாசனையை எப்படியோ மோப்பம் பிடிச்சு ஒரு யானைக்குட்டி அதை தாகத்துக்குக் குடிச்சிருக்கு... பாவம்! எத்தனை முயற்சி பண்ணியும் அதைக் காப்பாத்த முடியலை...!

திருப்பதி காடுகளையொட்டி ஒரு கிராமத்துல நடந்த சம்பவம் இன்னும் கோரம். ஒரு விவசாயி வயலைச் சுத்தி மின் கம்பி வேலி போட்டு வைச்சிருக்கார் – காட்டுப் பன்றிக்குத் தடையா... அதுல ஒரு சிறுத்தைப் புலி மாட்டி செத்திருக்கு... கிராமத்துக்காரங்க அது தான் சாக்குன்னு அதுன் தோலை உரிச்சு வித்துட்டு, மாமிசத்தை சமைச்சு சாப்பிட்டுட்டாங்களாம்! என்ன கொடுமை பாத்தீங்களா... மனுஷ புத்தி ஏன் இப்படியெல்லாம் போகணும்...!

• மகாசுவேதா தேவி



என்ன சுமி, ஏன் இப்படி ஒரே அழு

மூஞ்சி நியூஸா சொல்லி போரடிக்கறேம் பீங்க.... சியவனப்ராஷ் மாதிரி ஒரு தகவல்:

மெட்ராஸ் பிரஸ் கிளப்புல மஹா சுவேதா தேவி வந்து பேசினாங்க.... அதாங்க ஞானபீட பரிசு வாங்கின பெங்காலி ரைட்டர்... அடாடா! 73 வயசுல என்ன ஒரு மிடுக்கு... அவங்க பேச்சைக் கேட்டாலே உத்வேகம் வருது... இருபது வருஷமா பழங்குடி இனத்தவருக்காகப் போராடிட்டிருக்காங்க... அவங்க எல்லா எழுத்துக்கள்லேயும் இந்த இனத்தவருக்காகக் குரல் கொடுக்கறாங்க. இன்னமும் அவங்க வாழுற பகுதிகளுக்குப் போய் ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் வரை செல வழிக்கறாங்க... நேரடி அனுபவத்தைத்தான் கதையாக்கறாங்க... "நீங்கள்ளாம் பத்திரிகைக்காரங்க... இதையெல்லாம் எழுதி சமூகத்திலயும் அதிகார வர்க்கத்துலயும் மாற்றம் கொண்டு வர முயற்சி செய்யுங்க..." அப்படின்னு கடமையை ஞாபகப் படுத்தினாங்க...

இன்னொரு கூட்டத்திலயும் பத்திரிகைகளை அலசிப் பார்த்தாங்க- தேவன் நினைவு நாள் விழா... அசோகமித்ரனுக்கும் பி.வி. ஆருக்கும் தேவன் நினைவுப் பதக்கங்கள் கொடுத்தாங்க. ஆனந்த கிருஷ்ணன் தலைமை தாங்கினார். அந்தக் கால விகடன், கல்கியையும் இந்தக் கால விகடன், கல்கியையும் ஒப்பிட்டுப் பாருங்க...ன்னார். அசோகமித்ரன், தன்னை ரொம்ப பாதிச்சது சின்ன வயசுல விகடன்ல படிச்ச யுத்த டைரிதான்னு சொன்னார். இரண்டாம் உலகப் போர் பற்றின வாராந்திர குறிப்புகளாம். 'நமது யுத்த நிருபர்'ன்ற பெயர்ல வெளிவந்த அந்த டைரியை தேவன்தான் எழுதியிருக்கணும்னு சொன்னார்... இதை யார் உறுதிப் படுத்தப் போறாங்கன்னு தெரியலை...!

எப்பவும் போல இந்த இலக்கியக் கூட்டத்துக்கும் கூட்டம் ரொம்பக் குறைவு... ஆனா அதிசயம்! பேச்செல்லாம் முடிஞ்ச பிறகு நடந்த நெய்வேலி சந்தான கோபாலனுடைய இசை அஞ்சலிக்குப் புதுசா கூட்டம் வந்ததே பாக்கணும்! அவரும் அப்படியே தேனருவியாத்தான் பாடினார்... நடு நடுவுல, தானே தமிழாக்கம் பண்ணின தியாகராஜர், சுவாதி திருநாள் பாட்டுகளும் பாடினார்.

Musicalஆ ஒரு ஜோக் சொல்லி முடிக்கட்டுமா..?

ஒரு விஷமக்கார குழந்தையை அடக்க அதோட அம்மா ஒரு ஐடியா பண்ணினாங்க... "டீ.வி.யைத் தொடாதே, அதோட அம்மா வந்து கோச்சுக்கும்... ரேடியோவைத் தொட்டியானா அதோட அப்பா வந்து திட்டும்..." அப்படின்னு பீலா விடுவாங்க...

ஒரு நாள் சாயங்காலம் அம்மாக்காரி வீணையை தூசி தட்டி எடுத்து வைச்சு வாசிக்க ஆரம்பிச்சா... அங்கேயிருந்து வந்த குழந்தை இடுப்புல கையை வைச்சுக்கிட்டு பெரிய மனுஷி தோரணைல சொன்னதாம்:

"இப்போ நீ இந்த வீணையைக் கீழே வைக்கலைன்னா அதோட அப்பா அம்மா இரண்டும் வந்து உன்னைப் பிடிச்சுக்கும்!"

— சுமி





**வாங்கிவிட்டீர்களா?**

படிக்கவும் பாதுகாக்கவும்...

# கல்கி விடுமுறை மலர் -1998

இப்போது பரபரப்பாக
விற்பனையாகிறது!

உடனடியாக வாங்கி விடுங்கள்;
இல்லையேல் ஏமாற்றம் அடைவீர்கள்.

**விலை ரூ. 30/-**



# வீரத்தாலாட்டு

ஒவ்வொரு கேள்விக்கும் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டு விடைகளில் ஒன்றுதான் சரியானது. அது எது என்பதை நீங்களே கண்டு பிடித்துக் கொள்ள வேண்டியதுதான். என்றாலும் உங்களுக்கு உதவ ஒரு க்ளூ. சில சரியான விடைகள் 'அ', சில சரியான விடைகள் 'ஆ' என்று இருக்காது. எல்லாம் ஒரே மாதிரிதான் இருக்கும்.

1. முரளியைப் பொறுத்தவரை இந்தப் படம் :

அ. பொற்காலத்திற்குப் பிறகு இன்னொரு மைல் கல்.

ஆ. முரளி என்றில்லை; யாரைப் போட்டிருந்தாலும் குறைந்தது இந்த அளவு செய்திருப்பார்கள்.

2. குஷ்பூவின் பாத்திரம் :

அ. 'ஆஹா எவ்வளவு விதம்விதமான பாத்திரங்கள் இவரைத் தேடி வருகின்றன' என்பதற்கு இந்தப் படம் இன்னொரு உதாரணம்.

ஆ. படு வேஸ்ட். "ஒத்த ரூபா தாரேன்" பாணியில் மூன்று பாடல்களுக்கு இவர் ஆடும் போது அலுப்போ அலுப்பு. கதை முழுவதையும் படமாக்கிய பிறகு எதையோ நினைத்து குஷ்பூவை சேர்த்துக் கொண்டது போல் கதைக்குக் கொஞ்சமும் ஒட்டாத ஒரு ரோல்.

3. முரளியை வளர்த்த அன்னையாக வரும் லட்சுமி :

அ. அற்புதமான நடிப்பு.

ஆ. நன்றாக நடிக்கிறார். ஆனால் "நடிக்கிறார், நடிக்கிறார்" என்று பளிச்சென்று தெரியும் வகையில் கிராமப் பாத்திரத்தில் அவரால் இயல்பாகப் பொருந்த முடியவில்லை.

4. இளையராஜாவின் பங்கு :

அ. கஸ்தூரி ராஜாவின் எந்தப் படத்தில் இசைஞானி சோடை போயிருக்கிறார்?

ஆ. ஆசைதீர மூன்று பாடல்களைப் பாடியிருக்கிறார். "கதை போல தோணும் இது கதையுமில்லே" பாடல் படத்தில் அடிக்கடி இடம்பெறுவதால் மனதிலும். மற்றபடி மெட்டுகளில் கூட இசை வறட்சி.

5. மணிவண்ணனின் நகைச்சுவை, மனோரமா ஆச்சியின் பாத்திரப் படைப்பு ஆகியவை :

அ. தேன், தெவிட்டுமா என்ன?

ஆ. பெரிதும் ஸ்டேலாகி விட்டன. கொழ கொழவென்று காதில் விழாத மாதிரி பேசுவதை மணிவண்ணனும், வெள்ளைச் சிலையும் காதில் பாம்படமுமாகத் தோன்றுவதை மனோரமாவும் விட்டுத் தொலைத்தால் கோடி புண்ணியம்.

6. படத்தின் ஒரே ஆறுதல் :

அ. ஆறுதலா? படமே ரசிகர்களுக்குப் பெரும் பரிசாயிற்றே.

ஆ. வன்முறை தேவையில்லை என்று ராதிகா முடிவெடுக்கும் க்ளைமாக்ஸ்.

7. (சின்ன வயது) முரளியின் அப்பாவாக வரும் ராஜ்கிரண் :

அ. அசத்தியிருக்கிறார். கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?

ஆ. ராதிகாவுடன் ஒரு அபத்த டூயட், பரிதாபமான இறப்பு என்று... பாவமாக இருக்கிறது.

மொத்தத்தில் 'ஆ'....வ்!

— ஜி.

அது என்னவோ தெரியவில்லை... துணை மேயர் என்றாலே சர்ச்சைக்குரியவர்களாகவே இருக்கிறார்கள். நெல்லையில் துணை மேயரின் மகன்கள் குண்டு தயாரித்ததாகப் பிரச்னை (குண்டும்) வெடித்தது. கோவையில் துணை மேயர் பெண் கவுன்சிலர்களுக்கு லவ் லெட்டர் எழுதியதாக சர்ச்சை...! திருச்சி துணை மேயர், மேயரோடு நேரடி மோதலில் ஈடுபட்டு மாதமொரு முறையாவது தலைப்புச் செய்தியாகி விடுகிறார். அந்த வரிசையில் மதுரை துணை மேயரும் தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறார்.

கடந்த இருபதாம் தேதி மதுரை மேயர் பெ. குழந்தைவேலுவின் அறைக்கு வந்த துணை மேயர் மிசா. பாண்டியன் தமது பினாமியின் காண்ட்ராக்ட் விஷயமாக மேயருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும், இறுதியில் அது கைகலப்பில் முடிந்ததாகவும் கூறப்படுகிறது. இருபதாம் தேதி இரவு தி.மு.க பொதுச்செயலாளர் க. அன்பழகன் வெளியிட்ட அறிக்கையில் 'மிசா பாண்டியன் மாநகர் மாவட்ட துணைச் செயலர் பொறுப்பிலிருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் தாற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் சர்ச்சைக்குரிய துணை மேயரை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

**கேள்வி:** கட்சியிலிருந்து எதற்காக சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளீர்கள்?

**பதில்:** பத்திரிகைகள் வாயிலாகத்தான் எனது சஸ்பென்ஷன் நிலையை அறிந்தேன். எனக்கு இதுவரை கட்சியிலிருந்து எந்த விதமான நோட்டீஸும் வரவில்லை. வந்த பிறகு தான் என்ன காரணம் என்பது தெரியும். அதன் பிறகு என் விளக்கத்தைத் தலைமைக்குத் தெரியப்படுத்துவேன்.

**கேள்வி:** மீனாட்சியம்மன் கோவிலைச் சுற்றி நிறுத்தப்படும் வாகனங்களிடம் கட்டணம் வசூலிக்கும் காண்ட்ராக்ட்டை நீங்கள் பினாமி பெயரில் எடுத்திருந்ததாகவும், தற்போது அப்பகுதியை 'ஃப்ரீ ஜோனா'க மேயர் அறிவித்து விட்டதால் (மதுரை வந்த முதல்வரும் 'அது தொடரும்' என்று அறிவித்து விட்டதால்) அந்த காண்ட்ராக்ட்டை ரத்து செய்ய மேயர் முயன்றதாகவும், அதனால் நீங்கள் மேயரோடு கைகலப்பில் ஈடுபட்டதாகவும் அதனால்தான் இந்த சஸ்பென்ஷன் என்றும் கூறப்படுகிறதே?

**பதில்:** நான் பினாமி பெயரில் எந்த காண்ட்ராக்ட்டும் எடுக்கவில்லை. எனவே எந்த காண்ட்ராக்ட்டுக்காகவும் நான் கைகலப்பில் ஈடுபட வேண்டிய அவசியமேயில்லை.

**கேள்வி:** மேயரை நீங்கள் அடித்து விட்டதாகக் கூறப்படுவது...?

**பதில்:** ஏன் ஸார்... நான் துணை மேயர், அவர் மேயர். இரண்டு பேரும் தினசரி முகத்தில் விழித்துக் கொள்ள வேண்டாமா? ஒரு கவுன்சிலர் என்ற முறையில் எந்த பிரச்னையானாலும் நான் அவரிடம்தானே போய் நிற்க வேண்டும்?! அவரைப் போய் அடிப்பேனா? அறைக்குள் இருந்தது நானும், மேயரும்...! நானும், மேயரும் இது பற்றிச் சொல்லாதபோது மற்றவர்கள் பரப்பும் வதந்திகளை நம்பலாமா?

**கேள்வி:** அந்த குறிப்பிட்ட காண்ட்ராக்ட்டை மேயர் அமெரிக்கா போயிருந்த போது அவசர அவசரமாக வழங்கியது நீங்கள்தானே?

**பதில்:** கையெழுத்திட்டது நான்தான். ஆனால் அவசர அவசரமாக என்பது தவறு. எந்த காண்ட்ராக்ட்டையும் அனுமதிக்கும் அதிகாரம் கமிஷனருக்கே உண்டு. அவர் அனுமதியோடுதான் அது வழங்கப்பட்டது.

# "நான் போய்

அந்த காண்ட்ராக்ட்டை பெற்றுள்ள ராதா கிருஷ்ணன் சுதந்தரப் போராட்ட தியாகியின் மகன். சுதந்தரப் பொன்விழா ஆண்டில் ஒரு தியாகியின் மகனுக்கு வாய்ப்புத் தரலாமே என்ற அடிப்படையில்தான் அவருக்கு வழங்கப்பட்டது. ஏற்கெனவே அப்பகுதியில் நடந்த வாகன வசூலில் மாதம் நாற்பதாயிரம் மட்டுமே மாநகராட்சிக்கு வந்து கொண்டிருந்தது. அவரது காண்ட்ராக்ட் மூலம் மாதம் ஒரு லட்சம் வரும் என்ற லாப நோக்கில்தான் அந்த காண்ட்ராக்ட் வழங்கப்பட்டது.

**கேள்வி:** தொடர்ந்து சர்ச்சைகளில் ஏன் சிக்கிக் கொள்கிறீர்கள்... கவுன்சிலர் லீலாவதி கொலையின்போது செளராஷ்ட்ரா பேங்கில்

தகராறு செய்ததாகக் கைது செய்யப் பட்டீர்கள். சுப்ரமணியபுரம் போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரை தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டீர்கள். தினமலர் தாக்குதல் சம்பவத்திலும் உங்கள் பெயர் அடிபட்டது. இப்போது இது...ஏனிப்படி?

**பதில்:** பாவம் ஓரிடம்... பழி ஓரிடம் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல? லீலாவதி கொலையை அடுத்து செளராஷ்ட்ரா சமூகத்தினர் பந்த் நடத்தினார்கள் தி.மு.க.வை எதிர்த்து! பந்த்தை முறியடிப்பது எனது நோக்கம் என்று வைத்துக் கொண்டால் கூட, திறந்திருக்கும்



பல பேர் என் பெயரைச் சொல்லி ரவுடித்தனம் பண்ணுவதாகத் தகவல் வந்துள்ளது. என் பெயரைச் சொல்லி யார் ரவுடித்தனம் பண்ணினாலும் சம்பந்தப்பட்டவர்கள் தைரியமாக அவர்களைப் பிடித்து போலீஸில் ஒப்படைக்கலாம். எனக்குத் தகவல் தந்தால் நானே கூட வந்து அவர்களைப் பிடித்து போலீஸில் ஒப்படைக்கத் தயார்.

**கேள்வி:** முதல்வரின் மகன் மு.க. அழகிரி இருக்கிற தைரியத்தில்தான் நீங்கள் வரம்பு மீறுவதாகக் கூறப்படுவது பற்றி...?

**பதில்:** தலைவரின் மகன் என்ற முறையில் அவர் மீது மரியாதையும், அபிமானமும் கொண்டிருக்கிறேன். அவ்வளவே...! சேற்றை வாரியிறைக்க முடிவு செய்து விட்டவர்கள் எதுவும் பேசுவார்கள்.

# "மேயரை அடிப்பேனா?"

பேங்க்கில் தகராறு செய்ய வேண்டிய அவசியமென்ன? சுப்ரமணியபுரம் போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரை நான் தாக்கப் போனதாக தினமலர் தொடர்ந்து செய்தி போட்டு வருகிறது. அந்த இன்ஸ்பெக்டர் பெயரென்ன என்பதையோ, என்ன பிரச்னைக்காக நான் அடிக்கப் போனேன் என்பதையோ இதுவரை வெளியிட்டார்களா? இல்லை...! தினமலர் தாக்குதல் சம்பந்தமாக சி.பி.ஐ. விசாரணைகூட வரட்டும். எனக்கும், அதற்கும் துளியும் சம்பந்தமில்லை.

**கேள்வி:** இப்படி எதிலுமே உங்களுக்கு பங்கில்லை எனும்போது 'வன்முறையாளர்' என்ற இமேஜ் உங்கள் மீது வர என்ன காரணம்?


**பதில்:** அதுதான் எனக்கும் புரியவில்லை.

**கேள்வி:** சஸ்பென்ஷனை அடுத்து உங்கள் நிலை என்ன?

**பதில்:** கட்சியால்தான் எனக்கு இந்த வளர்ச்சி கிட்டியது. என்னைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ கட்சித் தலைமைக்கு முழு உரிமை உண்டு. கட்சி எடுக்கும் எந்த முடிவுக்கும் கட்டுப்படுவேன். துணை மேயர் பதவியை ராஜினாமா செய்யச் சொன்னாலும் செய்து விடத் தயாராயிருக்கிறேன்.

சந்திப்பு, படங்கள்:
**கிரண்நியூஸ்**

— துணை மேயர் பேட்டி



அவரவர் பைகளில் அவரவர் முகங்கள் இருந்தன. ஏதோ ஒருவகையில் முகத்தின் வெளிப்பாடு பைகளில் தொங்கிக் கிடந்தது. இதென்ன பைத்தியக்கார எண்ணம் என்று மஞ்சு தன்னைத்தானே உலுப்பிக் கொண்டான். என்னவோ தெரியவில்லை, விஜயலக்ஷ்மி வருகிறேன் என்று ஃபோன் பண்ணியதிலிருந்தே இதுபோன்ற அசட்டு எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன. எங்கோ பூத்திலிருந்து அவள் பேசியிருக்க வேண்டும். பின்னால் 'ஹோஹோ' என்று நிற்காது இரையும் சத்தம் கேட்டது. அதனையும் மீறிப் பேசுவதற்கு விஜயலக்ஷ்மி மிகுந்த பிரயத்தனப்பட்டிருக்க வேண்டும். அதனாலேயே அவள் குரலுக்கு அத்தனை சத்தம் போலும்.

விஜயலக்ஷ்மியும் கல்லூரி நாட்களில் தோளில் சதா ஒரு பையைச் சுமந்திருப்பாள். பாசிகளால் பின்னப்பட்ட பை அது. நிறம் கூட ஞாபகம் இருந்தது. சிவப்பும் வெளிர் மஞ்சளும் கலந்த பாசிகள் அவை. வழக்கமாக இடது தோளிலேயே விஜயலக்ஷ்மி அதைத் தொங்க விட்டிருப்பாள். அதுவே கொஞ்சம் முரண்பாடாகத் தெரியும். ஏனெனில், மஞ்சு பார்த்த அநேகப் பெண்கள் பையை வலது தோளிலேயே சுமந்திருப்பார்கள்.

ஆபீசுக்குப் போகும் ஷீலாக்காவின் வலது தோள் கூட அப்படித்தான் உப்பலாக ஒரு பையைச் சுமந்திருக்கும். டிபன் பாக்ஸ், தண்ணீர்ப் பாட்டில், கடைசி ஃப்ளாப்பில் சொருகப்பட்டிருக்கும் பத்திரிகை. பக்கத்துத்

தமயந்தி

தெரு சடகோபனின் பையில் ப்ளம்பிங் தொழிலுக்கான விஷயங்கள் இருக்கும். உஷா பையில் ப்ளாஸ்க்கும், பெரிய டிபன் பாக்ஸ் ஒன்றும் நீட்டிக் கிடக்கும். உஷா ரொம்பவும் குண்டு. நீலாவதியின் பையில் அவள் குழந்தைக்கான விஷயங்களும் கிடக்கும். பால், பாரக்ஸ், ஸ்பூன், தம்ளர் எல்லாமே க்ரஷில் இறங்கி விடும். மிஞ்சியிருக்கிறவற்றை நீலாவதி ஸ்கூலுக்குக் கொண்டு போவாள். அவள் டீச்சர், எனவே மீதமிருக்கிறவை சிவப்பு மை கொண்ட பேனா, எப்போதோ பையில் போட்டுக் கொண்ட துண்டு சாக்பீஸ் துண்டுகள் என்று கிடக்கும்.

எங்கிருந்து விஜயலக்ஷ்மி ஃபோன் செய்தாள் என்று கூட கேட்க மறந்து விட்டது. இரைச்சல் மத்தியில ஃபோன் பேசுவது இவளுக்குப் பிடிக்காது. எல்லாவற்றிலும் அமைதி வேண்டும் இவளுக்கு. ரமணாசிரமத்தின் தியான மண்டபம் போல. ஆனால் வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளும் அமைதியாக நடந்து விடுவதில்லை. இரைச்சல் மத்தியிலேயே வாழ்க்கை இயங்குகின்றது.

"பால்."

இவள் தோளுக்கு மேல் கைகளைத் தூக்கி சோம்பல் முறித்தாள். "த்தோ வர்றேன்" என்று குரல்கொடுத்து விட்டு பால் பாத்திரத்தை எடுத்து வந்தாள். பால்காரப் பையன் இவளைப் பார்த்ததும் சிரித்தான். அந்தச் சிரிப்பு, கொட்டாவியைப் போல இவளையும் தொற்றிக் கொண்டது.

"கூட ஒரு கால் லிட்டர் ஊத்து தம்பி."

"விருந்தாளா அக்கா?"

"ம். ப்ரெண்ட்."

"அக்கா தனியாருக்கதுக்கு ஆள் வந்தா நல்லாருக்கும் இல்லே?"

இவள் மௌனமாக உள்ளே வந்து பாலை அடுப்பில் ஏற்றினாள். மறு அடுப்பில் காலையில் கிண்டிய எலுமிச்சை சாதமிருந்தது. விஜயலக்ஷ்மி வரவில்லையென்றால் ராத்திரிக்கு அது போதும். ஒரு முட்டையைக் கூட்டுக்கு அவித்துக் கொள்ளலாம். எளிதான உணவு. ஊட்டச்சத்து மிக்கதும். அதனால் விஜயலக்ஷ்மி ரொம்ப வருடங்கள் கழித்து வருவதால், ஏதாவது நன்றாகச் சமைக்க வேண்டும் போலிருந்தது. என்ன செய்யலாம்? சப்பாத்தி குருமா? கிச்சடி? தோசை? எள்ளுப்பொடி கூட மீதமிருந்த ஞாபகம். இவள் பாட்டில்கள் நடுவே எள்ளுப் பொடியைத் தேடினாள். அது பின்வரிசையில் இருந்தது. அரை பாட்டிலளவு மீதமிருந்தது.

விஜயலக்ஷ்மி இப்போது எப்படியிருப்பாள் என்று தோன்றிற்று. ஒரு பெண் குழந்தை என்றாள். பிள்ளை பெற்ற உடனேயே அநேக தமிழ்ப் பெண்கள் சதை போட்டு விடுகிறார்கள். இடுப்புத் தசை விரிந்து, தோள்கள் பரந்து விடுகின்றன. முகத்தில் கூட இளமைத் துடிப்பு கலைந்து போய், எல்லா பொறுப்புகளையும் சுமக்கும் முதிர்ச்சியின் சலிப்பு தென்பட்டு விடுகிறது. அப்படித்தான் விஜயலக்ஷ்மி இருக்க வேண்டும்.

"கல்யாணம் கட்டப் போறதில்லை விஜி, நான்."

"சொல்லுவே. பத்து வருஷம் கழிச்சிப் பார்ப்போம்."

"பாரேன். குடும்பம்ங்கிற கிணத்துக்குள்ள விழுந்துட்டு, கரை எங்கே எங்கேனு என்னால தேடிட்டிருக்க முடியாது விஜி."

"குடும்பம் சிறைனு நினைக்கிறே மஞ்சு."

"நினைப்பில்லை. நிஜம்."


"எனக்கென்னமோ அது சாத்யம்னு தோணலை. வயசுக் காலத்துல நமக்குனு

# மும்பையில் ஒரு டைடானிக்

டைடானிக் சினிமா பற்றி, இன்று உலகமே பேசுகிறது. ஆனால், அதே போன்ற சோகம், இந்தியக் கப்பலான 'ராம்தாஸ்'க்கும் நடந்திருக்கிறது. அது நிகழ்ந்து ஐம்பது வருடங்கள் ஓடி விட்டன. 1947ம் ஆண்டு, ஜூலை 17ம் தேதி ராம்தாஸ் என்ற பயணிகள் கப்பல் கடலில் மூழ்கியது.

டைடானிக் போல, ராம்தாஸ் கப்பல், பனிப்பாறை எதிலும் மோதி உடையவில்லை. சூறாவளிக் காற்றுதான் ராம்தாஸ் கப்பலில் பயணம் செய்த பயணிகளை பலி வாங்கியது.

ராம்தாஸ் கப்பலுக்கு 'கணவன்மார்கள் ஸ்பெஷல்' என்ற செல்லப் பெயரும் உண்டு. காரணம், அந்தக் கப்பல் மும்பைக்கும், கோவாவுக்கும் இடையில் பயணிகளை ஏற்றிச் செல்லும். கோவாவைச் சேர்ந்த பலர், மும்பையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ராம்தாஸ் கப்பலில் வார இறுதி நாட்களில் கோவா போவார்கள். மறுபடி திங்கட்கிழமை, மும்பை திரும்பி வருவார்கள். எனவே தான் 'கணவன்மார்கள் ஸ்பெஷல்' என்கிற பெயர்.



சம்பவ தினத்தன்று சுமார் எழுநூறு பயணிகளுடன், வழக்கம்போல கப்பல் புறப்பட்டுக் கடலில் சென்று கொண்டிருந்தபோது, திடீரென கடும் புயல் வீசத் துவங்கியது. கடலில் மிதந்து கொண்டிருந்த காலி எண்ணெய் பேரல்கள், தாறுமாறாக வேகமாய் வந்து கப்பலில் மோத, நிலைமை மோசமானது. அந்த நாட்களில், ராம்தாஸ் போன்ற சாமானிய மக்கள் மட்டுமே பயணம் செய்கிற கப்பல்களில் தகவல் தொடர்பு சாதன வசதிகளும் கிடையாது. பயந்து போன பயணிகள் கப்பலில் பதற்றமடைந்து சிதறி ஓட, கப்பல் தத்தளிக்க ஆரம்பித்தது. உடனடி உதவி ஏதும் வராத நிலையில் கப்பல் கடலில் மூழ்கியது. ஆனாலும் 189 பயணிகள் தட்டுத் தடுமாறிக் கரை சேர்ந்தது அதிசயம்தான்.

1927 நவம்பரில் வீசிய கடும் புயலில் ஜெயந்தி, துக்காராம் என்ற இரு பயணிகள் கப்பல்களும் 'டைடானிக்' கதியாயின என்பதும் சுமார் ஆயிரத்து நூறு பயணிகள் அப்போது கடலில் மூழ்கினர் என்பதும் பலருக்கும் தெரியாத சோகங்கள்.

— கௌதம்

நன்றி: டைம்ஸ் ஆஃப் இந்தியா

ஒரு ஆதரவு வேணும் மஞ்சு."

"எல்லாம் சென்டிமெண்ட்ஸ். எனக்கு நம்பிக்கையில்லை விஜி."

விஜயலக்ஷ்மியிடம் சொன்னதைக் காப்பாற்றியாகி விட்டது. விஜயலக்ஷ்மியும் அவளது எண்ணம் போல திருமணம் செய்து கொண்டாள். அழைப்பிதழ் கூட அனுப்பியிருந்தாள். அப்போது மிகவும் பிஸியாக இருந்த நேரம். ஒரு நிமிடம் கூட ஓய்ந்திருக்க முடியாது. ஏதாவது ஒரு நிகழ்ச்சி இவளைப் பிடித்திருக்கும். சமூக சேவை, பெண்கள் மறுவாழ்வு, பெண்ணியம் என்று ஏதாவது ஒன்று. மைக் பிடித்துக் கொண்டு ஒவ்வொருவரும் மணிக்கணக்காய்ப் பேசுவதைக் கேட்பது ஒரு காலகட்டத்தில் அலுப்பைத் தந்தது. ஒரு சமயம் இவள் விளையாட்டாக மேடையிலேயே, "ரொம்ப நேரம் பேச விரும்புகிறவர்கள் பேசாமல் மைக்கை வீட்டுக்கு எடுத்திட்டுப் போயிடலாம்" என்று சொன்னது வினையாகிப் போனது.

திமிரெடுத்தவள் என்கிற பெயர் வந்து விட்டது. எதை விளையாட்டாக எடுக்க வேண்டும், எதை சீரியஸாக எடுக்க வேண்டும் என்கிற விஷயமெல்லாம் இப்போது எடுபடுவதில்லை. பிறகே இவளுக்குக் கூட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்புகள் குறைய ஆரம்பித்தன. அழைப்பிதழில் இவள் பெயரைப் போடுவது குறைந்து போய் அழைப்பிதழே இவளுக்கு அனுப்பப்படாமல் போயிற்று. அதற்குப் பிறகே தனிமை ஒரு பெரிய இருளைப்

## ஆட்டத்துக்குப் பிறகுதான் அறுவைச் சிகிச்சை!

தமக்கு இரண்டு நாளாக நெஞ்சு வலி என்று கூறிய ராமகாந்த் தேசாயைப் பரிசோதித்த டாக்டர், ''உடனடியாக உங்களுக்கு இருதய ஆபரேஷன் செய்தாக வேண்டும்!'' என்றார். அதற்கு தேசாய், ''சார்ஜாவில் நடக்கும் இறுதி ஆட்டத்தைப் பார்த்து விட்டுத்தான் நான் மருத்துவமனைக்கு வருவேன்!'' என்று பிடிவாதமாக மறுத்து விட்டார். அதன்படியே மேட்சை டெலிவிஷனில் பார்த்து, சச்சினின் ஆட்டத்தைப் பார்த்து மகிழ்ந்து விட்டுத்தான் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். இந்திய தேர்வுக் கமிட்டியின் தலைவராக இருந்து அண்மையில் காலமான ராமகாந்த் தேசாய்!

– சிம்மம்



போல இவளைப் போர்த்திக் கொண்டது. ஒரு பேய் தன் ராட்சச நகங்களோடு ஆக்ரமிப்பதைப் போல நிசப்தமும் அதன் பரிமாணங்களும் இவளைத் துரத்தியடித்தன.

அப்போதெல்லாம் இவளிடம் கூட ஒரு ஜோல்னா பை உண்டு. ஜோல்னா பை அறிவு ஜீவிகளின் அடையாளம். ஆண்களென்றால் கூடவே ஒரு தாடியும். எனினும் அவர்களோடு தன்னையும் ஒருமுகப் படுத்திக் கொள்ள இவளுக்கும் ஜோல்னா பை தேவையாயிருந்தது. அதனுள் பேனாக்கள், புத்தகங்கள், குறிப்பேடுகள் என்று நிறைய வைத்திருப்பாள். கூட்டங்களுக்குப் போய் வந்த பிறகு அந்தப் பையை இவள் ஹால் ஆணியில் மாட்டி விடுவாள்.

கூட்டங்கள் குறைந்த பிறகும் அந்தப் பை அந்த ஆணியிலேயே தொங்கிற்று. ஒருநாள் தூசி தட்டும் போது அந்தப் பையின் பின்புறம் பூச்சி கடித்ததில் ஏற்பட்ட பொத்தலொன்று இருந்தது. அதை அப்போதே தைத்திருக்க வேண்டும். ஏனோ செய்யவில்லை. அதனாலேயே அந்தப் பொத்தல், பை முழுக்கப் பரவி விட்டது. பூச்சிகளின் ரீங்காரம் கூட இரவு நேரம் பையிலிருந்து கேட்டது.

பூச்சிகளை எதுவும் செய்ய இயலாமல், இவள் பையையே தூரப் போட்டு விட்டாள். ஆனாலும் தூர எறியும் தருணம் இவள் கண்கள் ஏனோ கலங்கியிருந்தன.

திடீரென்று நாய்களின் குரைப்பு இவளை உலுப்பிற்று. ஜன்னல் வழியாக விஜயலக்ஷ்மி வருகிறாளா என்று எட்டிப் பார்த்தாள். இல்லை. பக்கத்து வீட்டு அரவிந்தன் நாய்களை வெளியே திறந்து விட்டிருந்தான். அவை அங்கிருந்தவர்களையெல்லாம் பார்த்து, குரைத்துக் கொண்டிருந்தன. ஆட்கள் நடக்கும் தெருவில் நாய்களைத் திறந்து விட்டு அவை குரைப்பதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது இவளுக்கு அசாதாரணமாகவே தோன்றிற்று.

இதுபோன்ற நாய்க் குரைப்புகள் இப்போதெல்லாம் கனவில் அடிக்கடி வருகின்றன. தொடர்பே இல்லாது. ஒன்றோடு ஒன்று பிணைக்கப்படாது. சங்கிலி இல்லாத நாயைப் போலவே, அப்படி கனவுகள் வரும் போது முழிப்பும் வந்து விடுகிறது. இருட்டும் மௌனமும் பீடித்திருக்கிற பிரதேசத்தில் மூச்சு முட்டிக் கொண்டு விடுகிறது. நேற்றுக் கூட ஆஹ்ஆஹ் என்று ஆஸ்துமாக்காரன் போல இளைத்தது. நல்லவேளை இன்று விஜயலக்ஷ்மி வருகிறாள்.

நினைக்கும்போதே கேட் திறக்கப்படும் சப்தம் கேட்டது. மஞ்சு ஓடிப் போய் கதவைத் திறந்தாள். இருவரும் ஒருசில கணங்கள் ஒன்றுமே பேசாமல் ஒருவரையொருவர் வெறித்தனர். பிறகு கிட்டே வந்து இறுக அணைத்துக் கொண்டார்கள்.

"எப்படிருக்கே விஜி?"

"ம். நீ."

"இருக்கேன். இது என் பொண்ணு."

அந்தப் பெண் கைகளைக் குவித்தாள். இவள் தன் கை விரல்களை வைத்து செல்லமாக அந்தப் பெண்ணின் தலையைச் சிலுப்பி விட்டாள். விஜயலக்ஷ்மி ஹோவென்று பெருமூச்சு விட்டுக் கொண்டு சோபாவில் விழுந்தாள். மஞ்சு உள்ளே போய் டீ தயாரித்து மூன்று கோப்பைகளில் எடுத்து வந்தாள். மூவரும் மௌனமாகவே அதைக் குடித்தார்கள்.

"அப்புறம்...?" என்றாள் விஜயலக்ஷ்மி.

"சொல்லு. ஏதாவது சொல்லு."

"வீட்டை முன்ன மாதிரியே சுத்தமா, வெகு சுச்சிதமா வச்சிருக்கியே மஞ்சு."

"மம்."

"அந்த ஆணில ஏதாவது படத்தை மாட்டியிருக்கலாம் நீ. இல்லே?"

"ம்."

"என்னடான்னு யோசிக்காதே. இண்டீரியர் டெக்கரேஷன் கோர்ஸ்லாம் படிச்சேன்."


"ஓஹோ."

"அந்த ஆணில நான் போறதுக்குள்ள ஏதாவது ஒண்ணு மாட்டிட்டுத் தான் போவேன். என்ன சரியா?"

"சரிதான். குளிக்கறியா?"

"வேணாம். முகம் கழுவினாப் போதும். சங்கரி, டவல் எடு" என்றாள் விஜயலக்ஷ்மி அவள் மகளைப் பார்த்து. அந்த சங்கரி அவள் தோளிலிருந்த பையைக் கழற்றி, மடியில் வைத்து ஜிப்பைத் திறந்து துண்டை எடுத்தாள். அந்தப் பை பாசிகளால் பின்னப்பட்டது. சிவப்பும் வெளிர் மஞ்சளும் கலந்த பாசிகளால் ஆனது. இவ்வளவு ஏன்? அது விஜயலக்ஷ்மியின் பை.

## வித்தியாசமான ஆட்டோகிராஃப்!



இளவரசி டயானாவின் நினைவாக யார்யாரோ எதையெல்லாமோ வைத்திருக்கலாம். ஆனால் லண்டனில் உள்ள இர்ஃபான் சையத் என்ற சிறுவன் வைத்திருக்கும் பொருள் மிக வித்தியாசமானது. காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் அவன் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது, அங்கு விசிட் செய்த டயானா அவனது வேண்டுகோளுக்கு இணங்க, அவன் காலைச் சுற்றியிருந்த பேண்டேஜின் மீது தமது கையெழுத்தைப் போட்டு விட்டுச் சென்றார். அதற்கு அடுத்த மாதமே இளவரசி இறந்து விட்டார் என்றாலும் அவரது நினைவாக அந்த பேண்டேஜை பத்திரமாகப் பாதுகாத்து வருகிறான் அந்தச் சிறுவன்.

– குல்லூர



# பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி நூற்றாண்டு 1899-1999 100

கல்கி கலெக்ஷன்

நாற்பதாம் அத்தியாயம்

## இருள் மாளிகை

காணாமற்போன வந்தியத்தேவன் என்ன ஆனான் என்பதை இப்போது நாம் கவனிக்கலாம். இருளடர்ந்த மாளிகைக்கு அருகில் சென்று அவன் மறைந்து நின்றான் என்பதைப் பார்த்தோம் அல்லவா? மந்திரவாதியும் நந்தினியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அவன் முதலில் காது கொடுத்துக் கேட்க முயன்றான். ஆனால் அவர்களுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் அவ்வளவாக அவனுக்குச் சிரத்தையும் இல்லை. நந்தினியுடன் பேசிக் கொண்டிருந்தபோது தன் அறிவு தன்னை விட்டு அகன்று ஒருவித போதை உணர்ச்சி உண்டாகியிருந்தது என்பதை இப்போது உணர்ந்தான். மறுபடியும் அவளைச் சந்திக்காமல் தப்பித்துக் கொண்டு போய்விட்டால் நல்லது. பழுவேட்டரையர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைக் காட்டிலும் இந்த இளைய ராணியிடம் அகப்பட்டுக் கொள்வதில் அபாயம் அதிகம் இருக்கிறது. அவர்கள் முன்னிலையில் தன் அறிவு நன்றாய் இயங்குகிறது; தோள் வலி ஓங்குகிறது; அரையில் உள்ள கத்தியில் எப்போதும் கை இருக்கிறது. யுக்தியினாலும் ஒரு கை பார்க்கலாம். கத்தியினாலும் ஒரு கை பார்க்கலாம். ஆனால் இந்த மோகினியின் முன்னால் புத்தி மயங்கி விடுகிறது; கையும் கத்தி பிடிக்கும் சக்தியை இழந்து விடுகிறது. மீண்டும் இவள் முன்னால் சென்றால், என்ன நேருமோ என்னவோ? போதும் போதாதற்கு மந்திரவாதி ஒருவனுடைய கூட்டுறவும் இவள் வைத்துக்

அமரர் கல்கி

கொண்டிருக்கிறாள்! இரண்டு பேரும் சேர்ந்து என்ன மாயமந்திரம் செய்வார்களோ? குந்தவைப் பிராட்டியிடந்தான் இவளுக்கு எவ்வளவு துவேஷம்? அந்தத் துவேஷம் இவளுடைய கண்களில் தீப் பொறியாக வெளிப்படுகிறதே! ஒருவேளை மனத்தை மாற்றிக் கொண்டு பழுவேட்டரையரிடம் தன்னைப் பிடித்துக் கொடுத்தாலும் கொடுத்து விடலாம்! பெண்களின் சபல சித்தமும் சஞ்சல புத்தியும் பிரசித்தமானவை அல்லவா? ஆகையால் மீண்டும் இவளைச் சந்திக்காமல் தப்பித்துக் கொண்டு போய் விட்டால் நல்லது. ஆனால் எப்படி? தோட்டத்துக்குள் புகுந்துதான் வழி கண்டுபிடித்துப் போக வேண்டும்! மதில் ஏறிக் குதிக்க வேண்டும்! மதிலுக்கு வெளியில் தன்னைத் தேடி வந்தவர்கள் காத்திருந்தால்?... வேறு ஏதேனும் உபாயம் இல்லையா? வந்தியத்தேவா! இத்தனை நாளும் உனக்கு உதவி செய்து வந்த அதிர்ஷ்டம் எங்கே போயிற்று? யோசி! யோசி! மூளையைச் செலுத்தி யோசி! கண்களையும் கொஞ்சம் உபயோகப்படுத்து! நாலாபக்கமும் பார்! இதோ இந்த இருள் அடைந்த மாளிகை இருக்கிறதே! இது ஏன் இருளடைந்திருக்கிறது? இதற்குள்ளே என்ன இருக்கும்? இதன் உள்ளே புகுந்தால் இதன் இன்னொரு வாசல் எங்கே கொண்டு போய் விடும்? எல்லாவற்றுக்கும் இதற்குள் புகுந்து பார்த்து வைக்கலாமா? இப்போது உபயோகப்படாவிட்டாலும் வேறு ஒரு சமயத்துக்கு உபயோகப்படலாம். யார் கண்டது?

ஆனால், இதற்குள்ளே எப்படிப் பிரவேசிப்பது? எவ்வளவு பெரிய, பிரம்மாண்டமான கதவு, இதற்கு எவ்வளவு பெரிய பூட்டு! அப்பப்பா! என்ன அழுத்தம்! என்ன கெட்டி! ஆ! இது என்ன? கதவுக்குள் ஒரு சிறிய கதவு போலிருக்கிறதே! கையை வைத்ததும் இந்தச் சிறிய கதவு திறந்து கொள்கிறதே! அதிர்ஷ்டம் என்றால், இதுவல்லவா அதிர்ஷ்டம்! உள்ளே புகுந்து பார்க்க வேண்டியதுதான்!

பெரிய கதவுக்குள்ளே, பார்த்தால் தெரியாதபடி பொருத்தியிருந்த சிறிய கதவைத் திறந்து கொண்டு வந்தியத்தேவன் அந்த இருளடைந்த மாளிகைக்குள் புகுந்தான். உள்ளே காலடி வைத்ததும் அவனுக்குத் தோன்றிய முதல் எண்ணம், தான் அம்மாளிகைக்குள் புகுந்தது நந்தினிக்குக் கூடத் தெரியக் கூடாது என்பதுதான். ஆகையால் சிறிய கதவைச் சாத்தினான். சாத்தியவுடன் உள்ளிருந்த இருள் இன்னும் பன்மடங்கு கனத்து விட்டதாகத் தோன்றியது. கதவு திறந்திருந்த ஒரு வினாடி நேரத்தில் சில பெரிய தூண்கள் நிற்பது தெரிந்தது. இப்போது அதுவும் தெரியவில்லை. இருட்டு என்றால், இப்படிப்பட்ட இருட்டைக் கற்பனை செய்யவும் முடியாது!... சீச்சீ! வெளிச்சத்திலிருந்து இருட்டில் வந்திருப்பதால் முதலில் இப்படித்தான் இருக்கும். சற்றுப் போனால் இருட்டின் கனம் குறைந்து பொருள்கள் மங்கலாகக் கண்ணுக்குப் புலப்படும். இதை எத்தனையோ தடவை அனுபவத்தில் கண்டிருந்தும், இருளைக் கண்டு கலக்கம் ஏன்? சும்மா நிற்பதற்குப் பதில் கொஞ்சம் நடந்து பார்க்கலாம். கையினால் தடவிக் கொண்டே போகலாம். முதலில் தெரிந்த தூண் இப்போது இல்லாமல் எங்கே போய்விடும்...? சற்றுத் தூரம் குருடனைப் போல் கையை முன்னால் நீட்டிக் கொண்டு வந்தியத்தேவன் நடந்தான். அவன் நினைத்தபடியே ஒரு தூண் கைக்குத் தட்டுப்பட்டது! ஆ! எவ்வளவு பெரிய தூண்! கருங்கல் தூண்! இதைச் சுற்றி வளைத்துக் கொண்டு மேலே போய்ப் பார்க்கலாம். மேலும் கொஞ்ச தூரம் நடந்ததும் இன்னொரு தூண் கைக்கு அகப்பட்டது. ஆனால் இன்னமும் கண்ணுக்கு ஏதும் தெரிந்தபாடாயில்லை. திடீரென்று கண் குருடாகப் போய் விட்டதா, என்ன? இது என்ன பைத்தியக்கார எண்ணம்! கண் திடீரென்று எப்படிக் குருடாகும்? இன்னும் கொஞ்சம் நடந்து பார்க்கலாம். மேலே தூண் ஒன்றும் கைக்கு அகப்படவில்லை! ஏதோ பள்ளத்தில் இறங்குவது போன்ற உணர்ச்சி உண்டாகிறது! ஆ! இதோ ஒரு படி! நல்லவேளை, விழாமல் தப்பினோம்! இப்படியே இந்த இருட்டில் ஒன்றும் தெரியாமல் எத்தனை நேரம், எத்தனை தூரம் போவது?... எதனாலோ வந்தியத்தேவன் மனத்தில் ஒரு பீதி உண்டாயிற்று. மேலே

போகத் துணிவு ஏற்படவில்லை. வந்த வழியில் திரும்ப வேண்டியதுதான்! கதவைத் திறந்து கொண்டு லதா மண்டபத்துக்கே போக வேண்டியதுதான்! இந்தப் பயங்கர இருட்டில் உழலுவதைக் காட்டிலும் நந்தினியை மீண்டும் சந்தித்து அவளுடைய யோசனைப்படி நடப்பதே நல்லது. என்ன வாக்குறுதி கேட்டாலும் இப்போதைக்குக் கொடுத்து விட்டால், பிறகு சமயம் போல் பார்த்துக் கொள்கிறது!



இவ்வாறு எண்ணி வந்தியத்தேவன் திரும்பினான். ஆனால் திரும்பிச் செல்லும் வழி வந்த வழியேதானா? எப்படிச் சொல்ல முடியும்!... நடக்க நடக்கக் கைக்கு ஒன்றும் தட்டுப்படவில்லையே! அந்தக் கருங்கல் தூண்கள் எங்கே போயின! கதவைக் கண்டுபிடிக்க முடியாமலே போய் விடுமோ? இரவெல்லாம் இந்த இருளில் இப்படியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க நேரிடுமோ? கடவுளே! இது என்ன ஆபத்து!...

ஆகா! இது என்ன ஓசை! சடசடவென்ற ஓசை! எங்கேயிருந்து வருகிறது? வௌவால்கள் சிறகை அடித்துக் கொள்ளும் ஓசையாக இருக்க வேண்டும். அவ்வளவு இருட்டில் வௌவால்கள் நிறையக் குடிகொண்டிருப்பது இயல்புதானே? இல்லை! இது வௌவால் இறகின் சத்தம் மட்டும் இல்லை! காலடிச் சத்தம்! யாரோ நடக்கும் சத்தம்!... நடப்பது யார்? மனிதர்கள்தானா? அல்லது.... வந்தியத்தேவனுடைய தொண்டை உலர்ந்து போயிற்று! நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது! திடீரென்று யாரோ அவன் முகத்தில் இடித்தாற் போலிருந்தது. வந்தியத்தேவன் தன் சக்தியையெல்லாம் காட்டி ஒரு குத்து விட்டான்! குத்திய கை துண்டிக்கப்பட்டது போல வலித்தது. இன்னொரு கையினால் தொட்டுப் பார்த்தான். இருட்டில் கருங்கல் தூணின் மேல் மோதிக் கொண்டதுமல்லாமல் அதைக் குத்தியதாகவும் தெரிந்து கொண்டான்! கையை அவ்வளவு 'விண், விண்' என்று வலித்திராவிட்டால் வந்தியத்தேவன் சிரித்தேயிருப்பான். ஆயினும் அதனால் அவனுடைய பயம் சிறிது அகன்றது. முழுதும் அகலவில்லை. காது கொடுத்துக் கேட்டபோது அந்தக் காலடிச் சத்தம் மேலும் மேலும் கேட்டது. ஒரு சமயம் எட்டிப் போவது போல இருந்தது! இன்னொரு சமயம் நெருங்கி வருவது போல் இருந்தது! வந்தியத்தேவன் நின்ற இடத்திலேயே நின்று உற்றுக் கேட்டான். அதே சமயத்தில் ஓசை வந்த திசையை நோக்கி அவனுடைய கண்களும் உற்றுப் பார்த்தன.

ஆ! வெளிச்சம்! அதோ வெளிச்சம்! கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி வருகிறது! நெருங்கியும் வருகிறது! வெளிச்சத்துடன் புகை! யாரோ தீவர்த்தியுடன் வருகிறார்கள். நந்தினிதான் தன்னைத் தேடிக் கொண்டு வருகிறாளோ, என்னமோ! அப்படியானால் நல்லது. வேறு யாராவதாயிருந்தால்? எல்லாவற்றுக்கும் சிறிது நேரம் ஒளிந்திருந்து பார்க்கலாம். ஒளிந்து நிற்பதற்கு இங்கே இடத்துக்குக் குறைவில்லை! தூரத்திலே வந்த தீவர்த்திக்

கொழுந்து அது ஒரு விசாலமான மண்டபம் என்பதைக் காட்டியது. அதில் பெரிய பெரிய தூண்கள் இருந்தன. தூண்களில் பயங்கரமான பூதங்களின் வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. கீழேயிருந்து ஒரு படிக்கட்டு மேலே வந்து அங்கே ஒரு வளைவு வளைந்து திரும்பி மேலேறிச் சென்றது. அந்தப் படிக்கட்டின் அடிப்பக்கத்திலிருந்துதான் தீவர்த்தி வெளிச்சம் வந்தது என்பதையும் அறிந்து கொண்டான். ஆகையால் வருவது நந்தினியாக இருக்க முடியாது. 'பாதாளச் சிறை' என்று தான் கேள்விப்பட்டது இந்த இருண்ட மாளிகையின் அடியிலேதான் இருக்கிறதோ? ஒருவேளை அங்கிருந்துதான் யாரேனும் வருகிறார்களோ? பாதாளச் சிறையின் பயங்கரங்களைப் பற்றி வந்தியத்தேவன் அதிகம் கேள்விப்பட்டிருந்த படியால், அந்த எண்ணம் அவனுடைய ரோமக் கால்களில் எல்லாம் வியர்வை துளிக்கும்படி செய்தது. அடுத்தகணம் ஒரு பெரிய தூணின் மறைவில் போய் நின்று கொண்டான். மகா தைரியசாலியான வந்தியத்தேவனுடைய கைகால்கள் எல்லாம் அச்சமயம் வெலவெலத்துப் போய் நடு நடுங்கின!

படிக்கட்டின் வழியாக மேலேறி மூன்று உருவங்கள் வந்தன. மூவரும் மனிதர்கள்தான். ஒருவன் கையில் தீவர்த்தியிருந்தது. இன்னொருவன் கையில் வேல் இருந்தது. நடுவில் வந்தவன் கையில் ஒன்றும் பிடித்திருக்கவில்லை. தீவர்த்தி வெளிச்சத்தில் அவர்கள் முகங்கள் புலப்பட்டதும் வந்தியத்தேவனுடைய பீதி அடியோடு அகன்றது. பீதியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான வியப்பு உண்டாயிற்று. அவர்களில் முன்னால் வந்தவன் வேறு யாரும் இல்லை; வந்தியத்தேவனுடைய பிரிய நண்பனாகிய கந்தமாறன்தான்! நடுவில் வந்த உருவம், முதலில், ஓர் அதிசயமான பிரமையை வந்தியத்தேவனுக்கு உண்டாக்கிற்று. பழுவூர் இளையராணியாகிய நந்தினி தான் வருகிறாள் என்று தோன்றியது. மறு கணத்திலேயே, அந்தப் பிரமை நீங்கியது. வருகிறவன் ஆண் மகன் என்று தெரிந்தது. கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அரை குறையாகத் தான் பார்த்த இளவரசர் மதுராந்தகத் தேவர் என்பதை அறிந்து கொண்டான். மூன்றாவதாக, கையில் தீவர்த்தியுடன் வந்தவனை வல்லவரையன் முன்னால் பார்த்ததில்லை. அவன் வாசற் காவலனாகவோ, ஊழியக்காரனாகவோ இருக்க வேண்டும்.

வந்தியத்தேவனுடைய மூளை அதிவேகமாக வேலை செய்தது. அவர்கள் அந்தப் பாதாள வழியில் படிக்கட்டு ஏறி வருவதன் மர்மம் என்னவென்பது வெகு விரைவில் அவனுக்கு விளங்கி விட்டது. பழுவூர் இளையராணி பல்லக்கில் ஏறி முதல் நாளே வந்து விட்டாள். பெரிய பழுவேட்டரையர் அன்றிரவு தஞ்சைக் கோட்டைக்குத் திரும்பி விட்டார். இருவரும் கோட்டை வாசல் வழியாகப் பகிரங்கமாக வந்து விட்டார்கள். ஆனால், மதுராந்தகத் தேவர் வெளியில் போனதும் தெரியக் கூடாது; திரும்பி வருவதும் தெரியக் கூடாது. அதற்காக இந்த இரகசியச் சுரங்க வழியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்த இருளடைந்த மாளிகையின் மர்மமே இதுதான் போலும்! கந்தமாறன் தன்னைக் கொள்ளிடக்





கரையில் விட்டுப் பிரிந்த பின்னர், வேறு எங்கேயோ ஓரிடத்தில் பெரிய பழு வேட்டரையருடன் சேர்ந்திருக்கிறான். இந்த அந்தரங்க வேலைக்கு அவனைப் பழுவேட்டரையர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மதுராந்தகத் தேவரைச் சுரங்க வழியில் அழைத்துச் செல்லத் துணையாக அனுப்பி வைத்திருக்கிறார். ஆகா! இப்போது நினைத்துப் பார்த்தால் ஞாபகம் வருகிறது. "எனக்குக் கூடத் தஞ்சாவூரில் ஒரு வேலை இருக்கிறது. நானும் அங்கே வந்தாலும் வருவேன்!" என்று கந்தமாறன் சொன்னான் அல்லவா?.... இப்போது இங்கே திடீர் என்று, தான் கந்தமாறன் முன்னால் போய் நின்றால், அவன் என்ன செய்வான்?... இந்த எண்ணம் தோன்றியவுடனேயே அதை வல்லவரையன் மாற்றிக் கொண்டான். இந்தச் சமயத்தில் கந்த மாறன் முன்னால் தான் எதிர்ப்பட்டால், அவன் செய்துள்ள சபதத்தை முன்னிட்டுத் தன்னைக் கொல்ல நேரிடும்; அல்லது தான் அவனைக் கொல்ல நேரும். அப்படிப்பட்ட தர்ம சங்கடத்தை எதற்காக வருவித்துக் கொள்ள வேண்டும்...?

இதற்குள் அந்த மூவரும் படிக்கட்டில் மேலேறிப் போய் விட்டார்கள். வெளிச்சமும் வர வர மங்கத் தொடங்கியது. அவர்களைப் பின்தொடர்ந்து போகலாமா என்று வந்தியத்தேவன் ஒருகணம் நினைத்து, அதையும் உடனே மாற்றிக் கொண்டான். அவர்கள் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்குப் போகிறார்கள் என்பது நிச்சயம். அங்கே தான் திரும்பிப் போவதில் என்ன பயன்? சிங்கத்தின் குகையிலிருந்து தப்பித்து வந்த பிறகு மறுபடியும் போய் சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பது போலத் தான்! இனித் திரும்ப நந்தினி இருந்த லதா மண்டபத்துக்குப் போவதிலும் பயன் இல்லை. ஒருவேளை பெரிய பழுவேட்டரையர் இதற்குள் அங்கு வந்திருக்கலாம். அதுவும் அபாயகரந்தான். வேறு என்ன செய்யலாம்?... ஏன்? இந்தப் படிக்கட்டு வழியாக இறங்கிப் போய்ப் பார்த்தால் என்ன? இவ்விதம் எண்ணி நம் வாலிப வீரன் அந்தச் சுரங்கப் படிக்கட்டில் இறங்கினான்.

### நாற்பத்தொன்றாம் அத்தியாயம்

## நிலவறை

இருண்ட சுரங்கப் பாதையில் வந்தியத் தேவன் காலை ஊன்றி வைத்து, விழுந்து விடாமல் நடந்தான். படிகள் கொஞ்ச தூரம் கீழே இறங்கின. பிறகு சமநிலமாயிருந்தது. மறுபடியும் படிகள். மீண்டும் சமதரை. இரண்டு


கைகளையும் எட்டி விரித்துப் பார்த்தான். சுவர் தட்டுப் படவில்லை. ஆகவே, அந்தச் சுரங்க வழி விசாலமானதாகவே இருக்க வேண்டும். மறுபடி சற்றுத் தூரம் போனதும் படிகள் மேலே ஏறின. வளைந்து செல்வதாகவும் தோன்றியது. அப்பப்பா! இத்தகைய கும்மிருட்டில் தட்டுத் தடுமாறி இன்னும் எத்தனை தூரம் நடக்க வேண்டுமோ தெரியவில்லையே!

ஆகா! இது என்ன! இருள் சிறிது குறைந்து வருகிறதே! மிக மிக மங்கலான ஒளி தோன்றுகிறதே! இந்த மங்கிய ஒளி எப்படி எங்கிருந்து வருகிறது? மேலே கூரையில் எங்கிருந்தாவது வரும் நிலவின் ஒளியா? அல்லது சுவர்களில் உள்ள பலகணி வழியாக வரும் ஒளியா? மறைவான இடத்தில் வைத்திருக்கும் விளக்கிலிருந்து பரவும் ஒளியா?....

இல்லை, இல்லை! இது என்ன அற்புதம்? நம் கண் முன்னால் தெரியும் இந்தக் காட்சி மெய்யான காட்சிதானா? அல்லது நமது மூளை கலங்கியதால் ஏற்பட்ட தோற்றமா?

அது ஒரு விசாலமான மண்டபம். கல்லைக் குடைந்து எடுத்து அமைத்த நிலவறை மண்டபம். அதனாலேதான் தலையை இடித்து விடும் போல் அவ்வளவு தாழ்வாகச் சமமட்டமான மேல் தளம் அமைந்திருக்கிறது. அந்த நிலவறையில் குடிகொண்டுள்ள மங்கிய நிலவொளி வெளியிலிருந்து வருவது அல்ல; கூரை வழியாகவோ பலகணி வழியாகவோ வருவதும் அல்ல. அங்கங்கே அந்த நிலவறையில் கும்பல் கும்பலாகவும் சில இடங்களில் பரவலாகவும் வருகிறது. ஆ! அப்படி நிலவொளி வீசும் அப்பொருள்கள் எத்தகைய பொருள்கள்! ஒரு மூலையில் மணி மகுடங்கள்; முத்தும் மணியும் வைரமும் பதித்த மகுடங்கள்; இன்னொரு பக்கத்தில் ஹாரங்கள்; முத்து வடங்கள்; நவரத்தின மாலைகள், அதோ அந்த வாய கன்ற அண்டாவில் என்ன? கடவுளே! அவ்வளவும் புன்னை மொட்டுக்களைப் போன்ற வெண் முத்துக்கள்! குண்டு குண்டான கெட்டி முத்துக்கள்! அதோ அந்தப் பானையில் பளபளவென்று மஞ்சள் வெயில் வீசும் பொற்காசுகள். இதோ இங்கே குவிந்து கிடப்பவை தங்கக் கட்டிகள். தஞ்சை அரண்மனையின் நிலவறைப் பொக்கிஷம் இதுதான் போலும்! தனாதிகாரி பழுவேட்டரையரின் மாளிகையையொட்டி இந்த இருள் மாளிகையும் அதில் இந்தப் பொக்கிஷ நிலவறையும் இருப்பதில் வியப்பில்லையல்லவா? அம்மம்மா! இந்த நிலவறைக்குள் நாம் வந்து சேர்ந்தோமே? பாக்கிய லக்ஷ்மியும் அதிர்ஷ்ட தேவதையும் சேர்ந்தல்லவா நம்மை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்? எப்படிப்பட்ட அதிசயமான, அபூர்வமான இரகசியத்தை, நம்முடைய முயற்சி ஒன்றும் இல்லாமலே நாம் தெரிந்து கொண்டோம்! இதை எப்படிப் பயன்படுத்துவது? பயன்படுத்துவது அப்புறம் இருக்கட்டும்; இங்கிருந்து போவதற்கே மனம் வராது போலிருக்கிறதே! இங்கேயே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கலாம் போலத் தோன்றுகிறதே! இங்கேயே இருந்தால் பசி, தாகம் தெரியாது! உறக்கம் அருகிலும் அணுகாது! நூறு வருஷ காலமாகச் சோழ நாட்டு வீர சைன்யங்கள் அடைந்த வெற்றிகளின் பலன்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன. நவநிதி என்று சொல்வார்களே; அவ்வளவும் இங்கே இருக்கிறது! குபேரனுடைய பொக்கிஷத்தையும் தோற்கடிக்கும் செல்வக் களஞ்சியம் இங்கே இருக்கிறது! இதை விட்டு எதற்காகப் போக வேண்டும்!

வந்தியத்தேவன் அந்த நிலவறையைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு மூலையில் கிடந்த மணிமகுடங்களைத் தொட்டுப் பார்த்தான். இன்னொரு பக்கத்தில் கிடந்த ரத்தின ஹாரங்களைக் கையில் எடுத்துப் பார்த்தான். அவற்றைப் போட்டுவிட்டு இன்னொரு பக்கம் சென்று செப்புப் பானையில் நிறைந்திருந்த முத்துக்களில் கைகளை விட்டு அளைந்தான். வேறொரு பானையில் கையை விட்டுப் பொற்காசுகளை அள்ளிச் சொரிந்தான். ஒரு மூலையில் தரையில் பளபளவென்று ஏதோ பரவலாக ஜொலிப்பதைக் கண்டு அங்கே சென்றான். முதலில் என்னவென்று தெரியவில்லை. பிறகு, குனிந்து உற்றுப் பார்த்தான். ஐயோ! ஆண்டவனே! அது ஓர் எலும்புக் கூடு! ஒருகாலத்தில் சதையும்




இரத்தமும் தோலும் உரோமமும் மூக்கும் முகமும் கண்ணும் காதுமாக இருந்த மனித உடலின் எலும்புக் கூடு!

ஆ! இந்த எலும்புக் கூடு அசைகிறதே! உயிர்பெற்று எழுகிறதே! பொற்காசுகளைப் போலவே சத்தமிடுகிறதே! நமக்கு ஏதோ சேதி சொல்ல எழுந்திருப்பதாய்க் காண்கிறதே!... வல்லவரையனுடைய உடம்பிலிருந்த ஒவ்வொரு ரோமமும் குத்திட்டு நின்றது. தனக்குப் பைத்தியந்தான் பிடித்து விட்டது என்று நினைத்தான். சீச்சீ! எலும்புக்கூடு எழுந்திருக்கவில்லை! அதற்குள்ளேயிருந்து ஒரு பெருச்சாளி ஓடி வருகிறது! நம் கால் மீது விழுந்து ஓடுகிறது!... ஆம்; இப்போது பார்த்தால் எலும்புக் கூடு தரையிலேதான் விழுந்து கிடக்கிறது! ஆனால் அது நமக்கு ஒரு சேதி சொல்லுகிறது என்பது உண்மை. "ஓடிப் போ! இங்கே தாமதியாதே! நானும் உன்னைப் போல் உடல் படைத்த மனிதனாயிருந்தேன். இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேன். இங்கேயே மாண்டு மடிந்தேன்! இப்போது எலும்புக் கூடாகக் கிடக்கிறேன்! ஓடிப் போ!" என்று அது நம்மை எச்சரிக்கிறது. இங்கிருந்து, உடனே தப்பிச் சென்றோமோ, பிழைத்தோம். இல்லாவிட்டால் அதோகதிதான்; அந்த மனிதனுக்கு ஏற்பட்ட கதிதான்.

வந்தியத்தேவன் அந்த நிலவறையிலிருந்து வெளியேற எண்ணினான். ஆனால் வெளியேறும் வழிதான் தெரியவில்லை. வந்த வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நிலவறையின் ஓரமாக எங்கே போனாலும் இருள் என்னும் பூதம் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. கீழே பார்த்தால் அதலபாதாளப் படுகுழியாகத் தோன்றியது. ஏறி வந்த படிக்கட்டு எங்கேயோ ஓரிடத்தில் இருக்கத்தான் வேண்டும். அதைக் கண்டுபிடிக்க வந்தியத்தேவன் மேலும் முயன்றான். தேடித் தேடி அலைந்தான். அப்படி அலையும் போது ஓரிடத்தில் சுவர் ஓரமாக ஒரு குப்பல் தங்கக் காசுகள் கிடப்பதைக் கண்டான். அந்தக் குப்பலின் மீது ஏதோ வலை பின்னியது போலிருந்தது. உற்றுப் பார்த்தபோது, அக்குவியலின் பேரில் சிலந்தி வலை கட்டியிருப்பதாகத் தெரிந்தது. சிலந்தியின் வலை அவனது சிந்தனையைத் தூண்டியது.

பெரியோர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளைச் சிலந்தி வலைக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். வலையை விரித்துக் கொண்டு சிலந்தி காத்திருக்கிறது. எங்கிருந்தோ பறந்து வந்து ஈ அதில் அகப்பட்டுக் கொள்கிறது. பிறகு சிறிது சிறிதாகச் சிலந்தி ஈயை இழுத்து விழுங்குகிறது. மூன்று வித ஆசைகளும் அப்படித்தான். மனிதன் வழிதவறிச் சென்று அந்த ஆசை வலைகளில் விழுந்து அகப்பட்டுக் கொள்கிறான்; அப்புறம் மீளுவதில்லை! மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்று ஆசைகளின் இயல்பையும் அன்று ஒரே

நாளில் நாம் அனுபவித்தாகி விட்டது. நந்தினி என்னும் பழுவூர் இளையராணி தன்னுடைய வலையில் நம்மை அகப்படுத்தப் பார்த்தாள். பழைய வாணர்குல ராஜ்யத்தை அடையலாம் என்னும் மண்ணாசையும் காட்டினாள். கடைசியாக, இங்கே இந்தப் பயங்கரமான பொன்னாசைப் பூதம் நம்மை அடியோடு விழுங்கப் பார்க்கிறது. முதல் இரண்டிலிருந்தும் தப்பினோம். இந்த மூன்றாவது அபாயத்திலிருந்தும் தப்ப வேண்டும். நமக்கு எதற்காக இந்த வம்பெல்லாம்? இராஜ்யம் எதற்கு? செல்வம் எதற்கு? பெண்களின் கூட்டுறவுதான் எதற்காக? வானத்தைக் கூரையாகப் பெற்ற அகண்டமான பூமியே நமது அரண்மனை! "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பண்டைத் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே! எல்லா ஊரும் நம்முடைய ஊர்தான். எல்லா




ஓ பத்மவாசன்...

மனிதர்களும் நம்முடைய உறவினர்கள் தான். ஊர் ஊராகப் போக வேண்டியது; புதுவெள்ளம் பொங்கி வரும் நதிகளையும், புதிய இலைகள் தளிர்த்து விளங்கும் மரங்களையும், பல வர்ணப் பட்சிகளையும், மகான்களையும், மயில்களையும் மலைகளையும் .மலைகளின் சிகரங்களையும், வானத்தையும், மேகத்தையும், கடலையும் கடல் அலைகளையும் பார்த்துக் களிக்க வேண்டியது; பசிக்கு உணவு கிடைக்கின்ற இடத்திலே உண்ண வேண்டியது; உறக்கம் வந்த இடத்தில் உறங்க வேண்டியது! ஆகா! இதுவல்லவா இன்ப வாழ்க்கை! எளிதில் கிடைக்கக்கூடிய இத்தகைய ஆனந்த வாழ்க்கையை விட்டு விட்டு, தொல்லைகளும் சூழ்ச்சிகளும் ஆசைகளும் அபாயங்களும் நிறைந்த வாழ்க்கையை ஏன் மேற்கொள்ள வேண்டும்? எப்படியாவது இந்த நிலவறையை விட்டு இப்போது வெளியேறி விட்டால் போதும்; பிறகு இந்த இருள் மாளிகையையும் தஞ்சாவூர்க் கோட்டையையும் விட்டு வெளியேறிவிட வேண்டும். பின்னர், இத்தகைய தொல்லைகளில் என்றைக்கும் அகப்பட்டுக் கொள்ளவே கூடாது....

ஆகா! கதவு திறந்து மூடும் ஓசை!.. மறுபடியும் காலடி ஓசை!... இன்றைய இரவின் அதிசயங்களுக்கு முடிவே கிடையாது போலும்! அதிசயங்களுக்கும் அளவில்லை; பயங்கரங்களுக்கும் எல்லையில்லை! இம்முறை வெகு தூரத்திலிருந்து அந்தக் காலடிச் சத்தங்கள் கேட்டன. இரண்டு பக்கங்களிலிருந்தும் வருவதாகத் தோன்றியது. வந்தியத்தேவன் காது கொடுத்துக் கவனமாகக் கேட்டான். பொக்கிஷ நிலவறையில் நாலுபுறமும் சூழ்ந்திருந்த இருளைக் கிழித்துக் கொண்டு பார்ப்பவனைப் போல் உற்றுப் பார்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் எதிர்பார்த்தது போலவே அபூர்வமான காட்சியைக் கண்டான்.

கூத்து மேடையிலிருந்து மிகத் தொலைவிலே உட்கார்ந்திருப்பவனுக்கு மேடையில் தோன்றும் காட்சிகள் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது வந்தியத்தேவன் அப்போது கண்ட காட்சி. அவன் அச்சமயம் இருந்த இடத்துக்கு உயரமான ஓர் இடத்தில், தொலை தூரம் என்று தோன்றிய தூரத்தில் அது நடந்தது.

கூத்து மேடையின் ஒரு பக்கத்திலிருந்து ஒரு தீவர்த்தி வந்தது. இன்னொருபுறத்துப் பக்கம் படுதாவை நீக்கிக் கொண்டு மற்றொரு தீவர்த்தி வந்தது. தீவர்த்திகள் இரண்டும் நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தன. ஒரு தீவர்த்தி வெளிச்சத்தில் இரு நெடிய கரிய உருவங்கள் தெரிந்தன. இன்னொரு தீவர்த்தியின் ஒளியில் மற்றும் இரு உருவங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று நெடிய கம்பீரமான உருவம்; மற்றொன்று சிறிது குட்டையான மெல்லிய வடிவம். இருதரப்பு உருவங்களும் ஒன்றையொன்று நெருங்கி வந்து கொண்டிருந்தன. வந்தியத்தேவன், மேலும் கண் விழிகள் பிதுங்கும்படி உற்றுப் பார்த்து அந்த உருவங்கள் யாருடையவை என்பதை ஒருவாறு தெரிந்து கொண்டான். இடது பக்கத்திலிருந்து வந்த இரு உருவங்கள் மதுராந்தகத் தேவரை அழைத்துச் சென்ற கந்தமாறனும் காவலனும்; வலது புறத்திலிருந்து வந்த உருவங்கள் பெரிய பழுவேட்டரையரும் அவருடைய இளையராணி நந்தினி தேவியும்.

இந்த இரு கோஷ்டியாரும் சந்திக்கும் போது என்ன நடக்கும்? ஏதாவது விபரீதமாக நடக்குமா? அல்லது ஒருவருக்கொருவர் வழி விட்டு விட்டுச் சாவதானமாகப் போய் விடுவார்களா?.... வந்தியத்தேவன் அந்தப் பரபரப்பில் மூச்சு விடுவதைக் கூட நிறுத்திக் கொண்டு அத்தனை கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரு கோஷ்டியாரும் சந்தித்தார்கள். அவர்கள் தடுமாறித் தயங்கி நின்றதிலிருந்து இரு சாராருக்கும் அச்சந்திப்பு வியப்பையும் திகைப்பையும் அளித்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் விபரீதம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. பழுவேட்டரையர் கந்தமாறனைப் பார்த்து ஏதோ கேட்டார். அதற்குக் கந்தமாறன் ஏதோ விடை சொன்னான்

கேள்வியும் விடையும் என்னவென்பது வந்தியத்தேவனின் காதில் விழவில்லை. பிறகு, பழுவேட்டரையர் கையினால் சமிக்ஞை செய்து சுரங்க வழியின் படிக் கட்டைச் சுட்டிக்காட்டினார். கந்தமாறன் அவரைப் பணிவுடன் வணங்கினான். வணங்கி விட்டுப் படிக்கட்டில் இறங்கி னான். அவனுக்குப் பின் கையில் தீவர்த்தி யுடன் வந்த காவலனைப் பார்த்துப் பழு வேட்டரையர் ஏதோ சமிக்ஞை செய்தார். அவனும் மறு மொழி சொல்லாமல் ஒரு கையினால் வாயைப் பொத்திக் கொண்டு வணங்கினான். பிறகு கந்தமாறனைத் தொடர்ந்து படிக்கட்டில் இறங்கினான். பழுவேட்டரையரும் இளையராணியும் இடதுபக்கம் நோக்கிச் சென்றார்கள்.

நிழலாட்டத்தையும் பொம்மலாட்டத் தையும் ஒத்த மேற்கூறிய நிகழ்ச்சிகள் எல்லாம் சில கண நேரத்தில் நடந்து விட் டன. இவ்வளவும் சுரங்க வழியில் இறங் கும் படிக்கட்டின் அருகில் நிகழ்ந்தன என்பதை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான். ஆகா! நாம் வழியில் எங்கும் நில்லாமல் இந்த நிலவறையில் வந்து சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! நாம் மட்டும் அந்த இரு கோஷ்டிக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டிருந்தால் நம் கதி என்னவாகியிருக்கும்? ஏதோ அந்த மட் டுக்கும் பிழைத்தோம். தப்பித்துக் கொள்ள வழி என்ன? கந்தமாறன் மதுராந்தகத் தேவரை அழைத்து வந்த சுரங்க வழியில் திரும்பிச் செல்கிறான் என்பதில் ஐய மில்லை. அந்த வழியிலிருந்து நாம் சிறிது விலகி இந்தப் பொக்கிஷ நிலவறைக்கு வந்திருக்க வேண்டும். இப்போது கந்த மாறன் போகும் வழியைத் தொடர்ந்து சென்றால், எப்படியும் வெளியேறும் வாச லைக் கண்டு கொள்ளலாம். பிறகு ஏதே னும் உபாயம் செய்து தப்பிக்கலாம். அப்படி அவசியம் நேர்ந்தால், கந்தமாறனி டமே உதவி கேட்கலாம். இல்லாவிட்டால் அவனையும் அந்தக் காவலனையும் ஒரு கை பார்த்து விட்டுத் தப்பிச் செல்லலாம். எனவே, கந்தமாறனை இப்போது பின் தொடரலாம்.

மு தலில், தீவர்த்தி வெளிச்சம் நில வறைக்கு அருகில் வருவது போலி ருந்தது. வந்தியத்தேவன் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றான். பிறகு அவ் வெளிச்சம் அகன்று செல்வது போலிருந் தது. அதற்குள் வந்தியத்தேவன் சுற்றுமுற் றும் பார்த்துத் தான். அந்த நிலவறைக்குள் பிரவேசித்த படிக்கட்டு எது என்பதை அறிந்து கொண்டான். அதன் வழியாகக் கீழே இறங்கி மீண்டும் மேலேறினான். தீவர்த்தி வெளிச்சத்தை விட்டு விடாமல்,



அதிகமாகவும் நெருங்காமல், காலடி ஓசை கேட்காதபடி மெதுவாக அடிவைத்து நடந்து சென்றான். வளைந்தும் நெளிந்தும் சுற்றியும் சுழன்றும் ஏறியும் இறங்கியும் சென்ற அந்தச் சுரங்கப் பாதையில் நாமாக இருளில் நடந்து வழி கண்டு பிடித்துப் போவது எவ்வளவு அசாத்தியமான காரியம்! வாழ்க கந்தமாறன்! அவன் இப்போது தன்னை அறியாமல் நமக்குச் செய்யும் உதவிக்கு எப்போது என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்!....

அதற்கு ஒரு சந்தர்ப்பம் அவ்வளவு சீக்கிரத்திலேயே கிடைக்கும் என்று வந்தியத்தேவன் எண்ணவேயில்லை!....

சுரங்கப் பாதையின் முடிவு வந்து விட்டது. எதிரில் ஒரு பெருஞ்சுவர் தெரிந்தது. அதில் ஒரு வாசலோ, கதவோ இருக்கும் என்று யாரும் கருத முடியாது. ஆயினும் இருக்கத்தான் வேண்டும்! சுரங்கப் பாதைக்கு ஒரு இரகசிய வாசல் இருந்தே தீர வேண்டுமல்லவா?

காவலன் தன் வலது கையிலிருந்த தீவர்த்தியை இடது கைக்கு மாற்றிக் கொள்கிறான். வலது கையினால் சுவரில் ஓரிடத்தில் கைவைத்து ஏதோ செய்கிறான். திருகாணியைத் திருகுவது போல் திருகுகிறான். சுவரில் மெல்லிய கோடுபோல் ஒரு பிளவு தோன்றுகிறது. அப்பிளவு வரவரப் பெரிதாகி வருகிறது. ஓர் ஆள் நுழையும்படியான பிளவாகிறது. காவலன் ஒரு கையினால் அதைச் சுட்டிக்காட்டுகிறான். கந்தமாறன் அவனிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சுவரில் தோன்றிய பிளவில் ஒரு காலை வைக்கிறான். ஒரு கால் இன்னும் சுரங்கப் பாதையிலேதான் இருக்கிறது. இப்பொழுது அவனுடைய முதுகுப் பிரதேசம் முழுதும் புலனாகிறது!

ஆகா! இது என்ன? இந்தக் காவலன் என்ன செய்கிறான்? அரையில் செருகியிருந்த கூரிய வளைந்த சிறு கத்தியை எடுக்கிறானே? கடவுளே! கந்தமாறனுடைய முதுகில் ஓங்கிக் குத்தி விட்டானே! படு பாதகன்! ஒருவனுக்குப் பின்னாலிருந்து முதுகில் குத்தும் சண்டாளன்!....



வந்தியத்தேவன் தான் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து வெளிவந்தான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்! அந்தச் சத்தத்தைக் கேட்டுக் காவலன் திரும்பினான்! தீவர்த்தியின் ஒளி வந்தியத்தேவனின் கோபாவேச முகத்தில் விழுந்தது!

(தொடரும்)

**கல்கி கலெக்ஷன்**

# நவீன கோவலன்

கோவலன் எவ்வாறு மரணமடைந்தான் என்பதைப் பற்றிக் கதை என்ன சொல்கிறது, ஞாபகமிருக்கிறதா? சிலம்பு திருடிய குற்றத்திற்காகப் பாண்டியன் அவனை வெட்டுப் பாறையில் வைத்து வெட்டி விடும்படி உத்தரவிடுகிறான். கொலையாளிகள் அவ்வாறே செய்து விடுகிறார்கள். இது சாதாரண பழைய மாமூல் காரியந்தான். அதிசயம் ஒன்றுமில்லை.

ஆனால் செயிட்டி தியேட்டரில் நான் பார்த்த கோவலன் டாக்கியில் இந்த இடத்தில் ஒரு மாறுதல் செய்திருக்கிறார்கள். கொலையாளிகள் கோவலனை வெட்டப் பார்க்கிறார்கள். ஆனால் எவ்வளவு முயன்றும் முடிய வில்லை. கத்திகள் மேலேயே நின்றுவிடுகின்றன. கோவலன் கழுத்தில் விழமறுத்து விடுகின்றன.

அப்போது கோவலன், "அடா கொலையாளிகளா! என்னை யாராலும் கொல்ல முடியாது. என்னை நானே மாய்த்துக் கொள்ளுகிறேன், பாருங்களடா!" என்று வீம்பு கூறி, ஒரு கொலையாளியிடமிருந்து ஒரு கட்டாரியை வாங்கிக் குத்திக் கொண்டு உயிர் விடுகிறான்.

எதற்காக இப்படி இவன் தற்கொலை செய்து கொள்கிறான் என்பது முதலில் எனக்கு விளங்கவேயில்லை. 'அட அசடே! சற்று நேரம் சும்மாவிருந்தால் கொலையாளிகள் ஓடிப்போய் அரசனிடம் சொல்வார்கள்; குருட்டு நம்பிக்கைகளின் பொக்கிஷமான அரசன், இதில் ஏதோ தெய்வீக சக்தி இருக்கிறதென்று அறிந்து விடுதலை செய்து விடுவானே!" என்று நினைத்தேன். பிறகு யோசித்ததில் உண்மை விளங்கிற்று.

கோவலனுடைய நிலைமையை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள். இரண்டு பெண்டாட்டிக்காரனுடைய திண்டாட்டத்தைப் பற்றி நாமெல்லாரும் பரிதாபப் பட்டிருக்கிறோமே? அதைவிட, ஒரு மனைவியும் ஓர் ஆசை நாயகியும் உள்ளவனுடைய நிலைமை எவ்வளவு சோகரஸம் பொருந்தியது? "மனமோ மாதவியின்பால் செல்கிறது; கடமையோ கண்ணகியின்பால் இழுக்கிறது. இரண்டு பேரும் பொய்யிலும் சூழ்ச்சியிலும் ஒருவருக்கொருவர் சளைக்காதவர்கள். இவள் 'ஐயோ! செத்துப்போய் விட்டேன்; வந்து பார்த்து விட்டுப் போங்கள்' என்று கடிதம் எழுதுகிறாள். அவளோ 'பாம்பு கடித்து விட்டது. செத்துக் கொண்டிருக்கிறேன்! உடனே வாருங்கள்' என்று சொல்லி அனுப்புகிறாள். அந்தோ! இதென்ன வாழ்வு!" என்று கோவலன் வருந்தியிருக்க வேண்டும். எனவே 'பாண்டியனுடைய உத்தரவைக் கேட்டதும், "நல்ல வேளை!

**அமரர் கல்கி**

உயிரைவிட்டு இந்தத் தொல்லையிலிருந்து தப்பலாம்' என்று அவன் சந்தோஷப்பட்டிருப்பான். ஆகவே தான் கொலையாளியின் கத்தி கழுத்தில் விழ மறுத்தும் அத்தகைய அரியசந்தர்ப்பத்தைக் கைநழுவ விடக் கூடாதென்று தானே குத்திக் கொண்டு சாகிறான்!

இதெல்லாம் சரிதான்! பொருத்தமாய்த்தான் தோன்றுகிறது. ஆனால் கண்ணகி வந்து கோவலனை உயிர்ப்பித்தபோது, "பாண்டியனைப் பழிக்குப் பழி வாங்கு!" என்று சொல்கிறானே, அது ஏன்? அடப்பாவி! சதிகாரா! உன்னை நீயே கொன்று கொண்டு, பாண்டியனைப் பழி வாங்கச் சொல்கிறாயே, அது தர்மமா? "உங்களுடைய தொல்லை பொறுக்காமல் தற்கொலை செய்து கொண்டேன்" என்று கண்ணகியிடம் உண்மையைக் கூறத் தைரியம் இல்லா விட்டால், அதற்காக இன்னொருவன் மேலா பழியைப் போட வேண்டும்?

"கதைக்குக் கால் இல்லை" என்பார்களே, அது கோவலன் சரித்திரத்துக்குத்தான் ஏற்பட்டது என்று தோன்றும். இந்தக் கதைக்குக் காலைப் பார்க்க வேண்டுமானால் பூர்வ ஜன்மத்துக்குப் போக வேண்டும். கதையே அப்படியென்றால், இந்த டாக்கிக்காரர்கள் கதையின் மூக்கு, காது இவைகளைக் கூடச் சிதைத்து விட்டுப் பொய் மூக்கு, பொய்க்காது வைத்திருக்கிறார்கள்.

இந்த டாக்கியில் மாதவியாக நடிக்கும் ஸ்ரீமதி டி.பி. இராஜலக்ஷ்மிக்கு நான் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். முதன் முதலாக வெளியான "காளிதாஸ்" என்னும் தமிழ் டாக்கியில் கதாநாயகியாக நடித்தவர் இவர்தான். மேற்படி டாக்கியைப் பார்த்த போதுதான் அதைப் பற்றி எழுதியே தீர வேண்டுமென்ற ஆவல் அடக்க முடியாமல் எனக்கு ஏற்பட்டு, "தமிழ்ப் பாட்டி" என்ற தலைப்புடன் "விகட"னில் ஒரு கட்டுரை எழுதினேன். எனவே "ஆடல் பாடல்' பகுதிக்கும், 'கர்நாடகம்' என்னும் பெயருக்கும் காரணகர்த்தா இந்த அம்மாள் அவர்களே என்று சொல்ல வேண்டும்.

அது நடந்து மூன்று வருடம் ஆகிறது. அதற்குப் பிறகு, ஸ்ரீமதி நடித்த டாக்கி எதற்கும் வேண்டுமென்றே நான் போகவில்லை. கொஞ்சம் அவகாசம் கொடுத்த பிறகே மறுபடி பார்க்க வேண்டுமென்று நினைத்தேன். கடைசியில், இப்போது கோவலன் பார்க்கச் சென்ற போது, நான் எதிர் பார்த்தது ஓரளவு நிறைவேறியிருந்தது. ஸ்ரீமதி இராஜலக்ஷ்மி நடிப்புத் திறமையில் வெகு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறார். இது வரையில் தமிழ் டாக்கிகளில் நடித்திருக்கும் நடிகைகளுக்குள், உருவத்தோற்றம், நடிப்புத் திறன், தெளிவான பேச்சு, பாட்டு இவைகளில் ஸ்ரீமதி இராஜலக்ஷ்மி சிறந்து விளங்குகிறார் என்றே சொல்லலாம். கதை அமைப்பு, சம்பாஷணை, பாட்டு இவையெல்லாம் இன்னும் அபிவிருத்தியடைந்து, மற்ற நடிகர்களும் பொருத்தமாக அமைந்தால் ஸ்ரீமதி இராஜலக்ஷ்மியின் திறமை இன்னும் நன்றாய்ச் சோபிக்கக் கூடும்.

கோவலனாக நடித்த ஸ்ரீமான் வி.ஏ. செல்லப்பா அவர்கள் "சங்கீத வித்வான்" என்று விளம்பரத்தில் போட்டிருப்பது சரியாயிருக்கலாம். இதை நிரூபிப்பதற்காகவே அவர் கோவலன்-மாதவி காதல் ஸீன்களுக்கு நடுவில் "சிவசிவசிவ என ராதா" என்னும் தியாகையர் கிருதி பாடுகிறார் போலும். ஆனால் அவரை எப்போது பார்த்தாலும் "தயவு செய்து திரைக்குள் போய்த் தும்மிவிட்டு வாருங்களேன்" என்று சொல்லலாம் போலிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் "இதோ அடுத்த கணத்தில் தும்மப் போகிறார்!" என்று எதிர் பார்க்கும்படி அவருடைய முகத்தோற்றம் அமைந்திருக்கிறது. இது அவருடைய தவறு என்று நான்

சொல்லவில்லை. பிரம்மாவினுடைய தவறாயிருக்கலாம். ஏதோ தோன்றியதைச் சொன்னேன்; அவ்வளவுதான்.

**கோ**வலன் மாதவியின் வீட்டுக்குப் போனபிறகு அவர்களுக்குள் நடந்த காதல் ஸீன்களைப் பார்க்கையில் பழைய கதை ஒன்று ஞாபகம் வந்தது. ஓர் அரசன் தான்போதும் என்று சொல்கிறவரையில் கதை சொல்கிறவர்களுக்குப் பாதி ராஜ்யம் தருவதாகச் சொன்னான். அநேகம் பேர் வந்து முயற்சி செய்து தோற்றுப் போனார்கள். கடைசியாக ஒருவன் வந்து சேர்ந்து பின் வரும் கதையைத் தொடங்கினான்:-

"ஒரே ஒரு ஊரில் ஒரு குருவி இருந்தது. அந்தக் குருவி இரை தேடச் சென்றது. வழியில் ஒரு களஞ்சியத்தைப் பார்த்தது. களஞ்சியம் நிறைய நெல் இருந்தது. அந்த நெல் முழுவதையும் கொண்டு போய்த் தான் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தது. ஒரு நெல்லை மூக்கால் கொத்திற்று. கொண்டு போய்த் தான் கூடு கட்டியிருந்த மரத்தடியில் போட்டது. மறுபடியும் திரும்பி வந்தது. இன்னொரு நெல்லை எடுத்தது. கொண்டு போய்ப் போட்டது..."




இந்த மாதிரி ஐந்தாறு தடவை திரும்பிச் சொல்லவே அரசன் "அப்புறம் என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

"அப்புறம் இன்னொரு நெல்லைக் கொண்டுபோய்ப் போட்டது."

"அட கஷ்டமே? அப்புறம்!"

"அரசே! இதற்குள் அவசரப் படுகிறீர்களே! களஞ்சியத்திலே உள்ள நெல் முழுவதும் ஆக வேண்டாமா?"

அரசன் பேசாமல் பாதி

ராஜ்யத்தைத் தத்தம் செய்தான்!

இந்தக் கதையைப் போல், மாதவியும் கோவலனும் சேர்ந்து வாழ்ந்த 12 வருஷ காலத்தில் ஒவ்வொரு நாளும் நடந்த காதல் ஸீன் ஒவ்வொன்றையும் காட்டி விடுவார்களோவென்று பயமாய்ப் போய்விட்டது.

"முத்தம் தருவாய்! முத்தம் தருவாய்!" என்று கோவலன் எத்தனை பாட்டுக்கள் பாடுவது? "அம்மா! அவர் கேட்பதைக் கொடுத்துத்தான் தொலைத்து விடேன். மேலே கொஞ்சம் கதை நடக்கட்டும்" என்று மாதவியிடம் தெரிவித்துக் கொள்ளலாம் போல் தோன்றிற்று.

என்னுடைய நண்பர் ஒருவர் சொன்னார்:- "மேனாட்டு டாக்கிகளில் இந்த உபத்திரவம் கிடையாது. அவர்கள் சட்புட்டென்று காரியத்தை முடித்துக் கொண்டு மேலே செல்கிறார்கள். இவர்களோ 'முத்தம் கொடு, முத்தம் கொடு' என்று கேட்பதிலும், 'ஆகட்டும் தருகிறேன்' என்று பதில் சொல்வதிலும் பொழுது போக்கி விடுகிறார்கள்!"

இந்த டாக்கியில் மாதவியின் மாமாவாக நடிக்கிறவர் ஹாஸ்யம் செய்து ஜனங்களுக்குச் சிரிப்பு உண்டாக்குவதற்குப் பல முயற்சிகள் செய்திருக்கிறார். ஆனால் அவர் முயன்று செய்த ஹாஸ்யங்களைவிட, அவரை அறியாமல் செய்த ஒரு ஹாஸ்யம்தான் மிகவும் சிரிப்பூட்டுவதாயிருந்தது. முதன் முதல் அவர் மாதவி வீட்டில் நம் முன் தென்படுவதற்கும், கடைசியில் மாதவி கோவலனைப் பிரிந்து புலம்பும்போது நம் முன்னால் வருவதற்கும் இடையில் 12 வருஷங்கள் கழிந்திருக்கின்றன.

ஆனால் இந்தப் பன்னிரண்டு வருஷத்தில் அவருடைய தலையில் ஒரு மயிர் நரைக்கவில்லை; நெற்றியில் இட்ட விபூதி அழியவில்லை; தோளில் போட்டிருந்த பழைய உருமாலை பன்னிரண்டு வருஷத்துக்குப் பிறகும் அதேமாதிரியிருந்தது.

துணிமணிகளைக் காப்பாற்றும் முறையை இவரிடமிருந்தல்லவா தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றிற்று. அதற்குச் சிநேகிதர் சொல்கிறார்:- "இது என்ன அதிசயம்? பிரஹ்லாத சரித்திரத்தின் இரணியன்பட்டு அங்கவஸ்திரத்தை எடுத்துத் தரையில் வைத்து விட்டுப் பத்து லட்சம் வருஷம் தவம் புரிகிறான். அவ்வளவு வருஷம் கழித்துத் தவம் பூர்த்தியானதும் பேசாமல் எழுந்திருந்து குந்தினாப்போல் பக்கத்திலிருந்த பட்டு வேஷ்டியை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு போகிறான்! துணிகளைக் காப்பாற்றும் இரகசியம் அவனிடமிருந்தல்லவா அறிய வேண்டும்?"

ஆனால் இவரிடமிருந்து அறிய வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது. "மூக்குக் கண்ணாடி முதன் முதல் எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது!" என்று விஞ்ஞான நிபுணர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. மாது ஸ்ரீ மாதவி அம்மாளின் மாமாவாய் இருக்கும் பாக்கியம் பெற்ற அந்தப் பரம புருஷனே மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாரென்றால் சிலப்பதிகார காலத்துக்கு முன்னமேயே அது சர்வ சாதாரணமாயிருந்திருக்கிறதென்று தெரிகிறதல்லவா?

கோவலன் டாக்கியில் ஒரு விசேஷத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். காட்சிகள் கண்ணுக்கு நன்றாய்த் தெரிந்தன; பேச்சும் பாட்டும் காதில் நன்றாய் விழுந்தன. காட்சியின் தெளிவிலும் ஒலியின் தெளிவிலும் ஏற்கெனவே நான் பார்த்திருக்கும் அநேக டாக்கிகளைவிட இது சிறந்து விளங்குகிறது என்பதில் சந்தேகமில்லை.

**– 21.10.1934 ஆனந்த விகடன் இதழில் கர்நாடகம் என்ற புனைபெயரில் அமரர் கல்கி எழுதிய விமர்சனம்**



வாழ்க்கையை எப்படி சந்தோஷ மயமாக்கிக் கொள்வது?
இந்தக் கேள்விக்குச் சுலபமாகப் பதில் சொல்வதுதான் ஜென்
('Zen'என்றால் ஜப்பான் மொழியில் தியானம் என்று அர்த்தம்)
என்கிற புத்தமதப் பிரிவு. இது பற்றி எளிமையாக விளக்கும்படி

**மனசுக்குள் இருக்கிறது**

**மலர்த்தோட்டம்!**

# எழுந்தும் ஓடும் தாத்தா பாட்டிகள்!

கவாலி பாடுகிற போஸில் இருக்கும் தாத்தாவின் பெயர் ஜோகிந்தர் சிங். வயது? அதிகமில்லை, நூற்று ஏழுதான்! இவர் கவாலி பாடவில்லை; ஷாட்புட் எறிகிறார். அண்மையில் மும்பை, தானேவில் நடைபெற்ற முதியவர்களுக்கான தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட இவர், ஷாட்புட்டில் சாம்பியன் பட்டத்தையும் தட்டிச் சென்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஜோகிந்தர்சிங்கின் உடம்பு வைரம் பாய்ந்த உடம்பு. இரண்டு முறை போரில் பங்கேற்ற ராணுவ வீரர். ஒருதடவை, குண்டு வெடிப்பில் சிதறிய ஒரு கை எறி குண்டின் சிறு பகுதி, இவரது தலையில் பட்டதன் வடு இன்னும் இருக்கிறது. இந்தத் தாத்தாவின் சொந்தக் கதை சோகமானது. ஆறு வருடங்களுக்கு முன் மனைவி இறந்து விட்டார். ஒரே மகன் படிக்கிறபோதே தற்கொலை செய்து கொண்டு விட்டான். ஏன்? பரீட்சையில் பெயில். இதைச் சொல்லும்போதே, தாத்தாவின் கண்களில் கண்ணீர், ''எனக்குப் பென்ஷன்கூட இன்னும் கிடைக்கவில்லை'' என்கிறார் இந்த சாம்பியன் தாத்தா.

இவ்வாண்டு முதியோர் தேசியப் போட்டிகளில் ஜோகிந்தர் சிங் போல பலர், பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து கலந்து கொண்டனர். அதிக பட்ச வெற்றிகளைப் பெற்றது பஞ்சாப். இரண்டாம் இடம்

---

## மனோதத்துவ டாக்டர் என். மாத்ருபூதத்திடம் கேட்டோம்...

சந்தோஷம் என்பது என்ன? மனம் சம்பந்தப்பட்டதுதான். எதையும் சந்தோஷம் என்று நினைத்தால் சந்தோஷம்தான். சந்தோஷத்தைக்கூட சந்தோஷம் என்று நினைத்து அனுபவிக்காவிட்டால் அது சந்தோஷமாக இருக்காது.


குழப்பமாக இருக்கிறதா? சிம்பிள் விஷயம்தான் இது.

உதாரணத்துக்கு சிகரெட் பிடிப்பதையே எடுத்துக் கொள்ளுவோம். சிகரெட் பிடிப்பது சந்தோஷமான விஷயம் என்று நினைத்துப் பிடித்தால் நிச்சயம் அந்த நேரத்தில் சந்தோஷத்தையே அனுபவிப்பீர்கள். ஆனால், 'இந்தப் பழக்கத்தை விட்டுத் தொலைக்க முடியவில்லை; இதனால் கேன்சர் வருமே' என்று குறைபட்டுக் கொண்டே சிகரெட் பிடித்தீர்களானால் நிச்சயமாக நீங்கள் சிகரெட்டால் சந்தோ...ஷத்தைப் பெற முடியாது. கேன்சர் பற்றிய பயம்தான் உங்கள் மனத்தை ஆக்ரமித்துக் கொண்டிருக்கும். ஆக, சிகரெட் பிடிப்பது தீங்கானது என்கிற விஷயம் எல்லோருக்குமே தெரிந்த ஒரு விஷயம் என்பதால் அதைப் பிடிக்கிற ஒவ்வொருவரும் ஒருவித குற்ற உணர்வுடனும் பயத்துடனும்தான் பிடிக்கிறார்கள். இதில் எப்படி சந்தோஷம் கிடைக்கும். எனவே அதை விட்டுத் தள்ளுங்கள். அப்படி விட்டு விட்டீர்களானால், சிகரெட் பிடிக்கிறபோது கிடைக்கிற சந்தோஷத்தை விட அதிக சந்தோஷத்தை சிகரெட் பிடிக்காதபோது அனுபவிப்பீர்கள்!

ஒருவர் வெகு நேர்மையானவர். எக்கச்சக்கமாக லஞ்சம் வாங்கக் கூடிய அரசாங்க வேலையில் இருந்த போதிலும் அவர் நெருப்பாக வாழ்ந்து ஓய்வு பெற்றவர்.

இன்னொருவர், லஞ்சம் வாங்காத நாளே கிடையாது. லஞ்சம் வாங்கி வாங்கியே கொழுத்த பணக்காரர் ஆனவர். தெருவுக்கு நாலு வீடுகளைக் கட்டியிருப்பவர்.

அந்த நேர்மையாளர் தமது நண்பரிடம், "இதோ பார்த்திங்களா... இந்த வீடு அந்தாளுடையதுதான். லஞ்சப் பணத்தில் இழைச்சு இழைச்சுக் கட்டியிருக்கான் பாருங்க. ஆனா நான்? ஒரு பைசா வாங்கியிருப்பனா... மூச்! ஆனா என்ன பிரயோஜனம்? கடைசிவரை வாடகை வீட்டிலதான காலந் தள்ள வேண்



கேரளாவுக்கு.

டெல்லியைச் சேர்ந்த 73 வயது சைகல், 1973ல் உலக தடகளப் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்றவர். இப்போது பத்து கி.மீ ஓட்டப் பந்தயத்தை ஒரு மணி முப்பத்தாறு நிமிடத்தில் ஓடியது ஒரு சாதனை! இன்றைய இளைய தலைமுறையால்கூட இது சாத்தியமா என்று மைதானமே வியந்தது. இவருக்கு டயாபடீஸ். கூடவே சிறுநீரகக் கோளாறும்!

ஆறு குழந்தைகள், பதினோரு பேரக் குழந்தைகள் கொண்ட டெய்சி விக்டர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். நெல்லைச் சீமையில் நாசரத்தில் பிறந்தவர். இதுவரை பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு 77 தங்கம், 15 வெள்ளி, ஒன்பது வெண்கலம் வென்ற சாதனைப் பாட்டி. இப்போதும் இருநூறு மீட்டர் ஓட்டத்திலும், 400 மீ ரிலேவிலும் தங்கம் வென்றிருக்கிறார் டெய்சி பாட்டி.

**— கௌதம்**

---

டியிருக்கு...'' என்று அலுத்துக் கொண்டாரானால், அவர் நேர்மையாக வாழ்ந்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடும்!

இது மட்டுமல்ல; அவர் லஞ்சம் வாங்குகிற 'சந்தோஷத்தை'யும் பெறவில்லை; 'நேர்மையாக வாழ்ந்தேன்' என்ற பெருமிதத்தையும் அடையவில்லை. ஆக, அவர் வாழ்க்கையே சந்தோஷமில்லாமல் போய்விட்டது!

இந்தத் தத்துவம் கொஞ்சம் குழப்பத்தை உண்டாக்குவது போல் இருக்கிறதா? ஒரு தவறைக்கூட தவறல்ல என்று நினைத்துக் கொண்டு செய்தால் சரியாகி விடும் போல் இருக்கிறதே; அதுவும் சந்தோஷம் தருகிற ஒரு விஷயமாகி விடும்போல் இருக்கிறதே! சந்தோஷத்தோடு லஞ்சம் வாங்குவது தவறில்லை போல் இருக்கிறதே என்று யாரும் நினைத்துவிட வேண்டாம்; குழப்பிக் கொள்ளவும் வேண்டாம்.

சந்தோஷமாக லஞ்சம் வாங்கும்போது ஏற்படுவது நிச்சயம் சந்தோஷம்தான். ஆனால் அது நிரந்தரமானதா என்றும் யோசித்துப் பார்க்க வேண்டும்.


லஞ்சம் வாங்கிப் பணக்காரராகி விட்டீர்கள். அருமையான கார் ஒன்றும் வாங்கி விட்டீர்கள். லஞ்சப் பணத்தில் வாங்கிய அந்த ஏ.சி. காரில் பயணம் செய்யும்போது ஒரு விபத்து! உங்கள் குடும்பமே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது...

அப்போது நீங்கள், 'லஞ்சப் பணத்தில் நாம் சந்தோஷம் அனுபவிப்பதற்கான தண்டனைதான் இந்த விபத்தோ...' என்று ஒரு கணம் உங்கள் மனம் நினைக்கும்; அது போதும்! நீங்கள் லஞ்சம் வாங்கியபோது அனுபவித்த சந்தோஷத்தைவிட பல மடங்கு குற்ற உணர்வை மனம் முழுக்க அனுபவிக்க ஆரம்பித்து விடுவீர்கள். அது வாழ்க்கை முழுக்கவும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

அதே சமயத்தில் நீங்கள் நேர்மையாளராக இருந்து இந்த விபத்து ஏற்படுகிறபோது, நீங்கள் என்ன நினைப்பீர்கள்? 'நான் மனதறிந்து யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ததில்லை. அதனால் எந்த நிலையிலும் ஆண்டவன் என்னைக் கைவிட மாட்டான்!' என்று எப்போதும் சந்தோஷமாகவே இருப்பீர்கள்.

சந்தோஷ மணம் பரப்பும் அந்த மலர்த் தோட்டம் நம் மனத்துக்குள்ளேதான் இருக்கிறது! அப்புறம் என்ன? சந்தோஷ மணத்தை அனுபவிக்க வேண்டியதுதானே!

தொகுப்பு: **எஸ்.வி.என்**



அருவி கொட்டியது. திருதிருவென்று பாலாய் நீர். பார்க்கப் பார்க்கக் கண்ணில் ஆவி பறந்தது. நீர்த்திவலைகள். தெறித்துப் புகையாய் மண்டியது. எழுபதடி உயரம். இரண்டு தட்டு. பாறையைச் செதுக்கி அருவியைத் தடுத்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் இந்த வேகத்திற்கு மண்டை பிளந்து விடும். 'ஹோ'வென்று முதல் தட்டில் விழுந்து சற்று தணிந்து அடுத்த தட்டிற்குத் தாவுகிறது. நீர் தெளிவு. தேங்காய்த் தண்ணீர் மாதிரி தெளிவு. வெயில் படுகின்ற இடத்தில் பளபளக்கிறது. கண்ணாடி மாதிரி பளபளப்பு. ஆனால் கால் வைக்க முடியவில்லை. ஜில்லென்று ஒரு கடி. 'இந்தா' 'அந்தா'வென்று பாய்ச்சல் காட்டிக் கொண்டிருக்கும் வரைதான் இந்தக் கடி. பரபரவென்று இறங்கி விட வேண்டும். இந்தா என்னை ஏற்றுக் கொள் என்று விழுந்து விட வேண்டும். அந்தக் கடி சற்று நேரத்தில் கனிவாகி விடும்.

சக்திவேல் சட்டென்று அருவிக்குள் பாய்ந்தான். அருவிக்குள் தலையைக் கொடுப்பது ஆனந்தம்தான். தலையைச் சிலுப்பாமல், மூச்சை அடக்கி உள்ளே நிற்க வேண்டும். கிர்ரென்று காதில் ஒரு இரைச்சல் ஓடும். குளிர் மிதப்பில் குரல் தானாய்க் கசிந்து ஒழுகும். மூச்சை விட்டாலோ, வாயைத் திறந்தாலோ 'ப்பே... ப்பே' என்று அலறடித்து விடும். பேயறைந்த மாதிரி ஒரு தவிப்பு. மூன்றாவது முங்கில் ராக வாத்தியார் வாய் பிளந்து விட்டார். 'ப்பே' என்று அவர் முகம் மாறிற்று!

எல்லாம் இரைந்து. இரைந்து பேசினார்கள். பாதிக் குரலை அருவித் தண்ணீர் அடித்துக் கொண்டு போயிற்று. அந்தக் குரல்களில்தான் எத்தனை உல்லாசம். எல்லோர் முகத்திலும் மலர்ச்சி. இந்த மலர்ச்சி இங்கு தண்ணீர் பட்ட பாடாய் இருக்கிறது. ஒரு மூஞ்சியில் கூட சிடுசிடுப்பில்லை. பொழுதைப் போக்க என்னடா பேசலாம் என்று இவர்களுக்கு அத்துபடி. பேசினார்கள். பேசினார்கள் பேசிக் கொண்டேதான் இருந்தார்கள். சக்திவேலுக்கு இதையெல்லாம கண்ணால் பார்த்துத்தான் அனுபவிக்க முடிந்தது. பொழுது போனதே தெரியவில்லை. பொழுது உச்சிக்கு வந்து நின்று விட்டது.

அதற்குப் பிற்பாடுதான் அடுப்பு மூட்டக் கல் தேடினார்கள். நல்ல கூட்டம். சுற்றுப் பட்டி தொட்டியெல்லாம் வந்து கூடி விட்டது. தைப்பூசம் என்றால் சொல்ல வேண்டுமா? கொத்துக் கொத்தாய்க் கூட்டம் கூடி விடும். ஆடு வெட்டுவதற்கும், கோழி வெட்டுவதற்கும், காது குத்துவதற்கும் மொட்டை அடிப்பதற்கும் அவர்களுக்கு இந்த தைப்பூசம்தான். முக்கால் மணி நேரம் 'அடுப்புக் கல்' தேடி அலைந்தனர்.

ஆற்றில் ஒன்று, மலையில் ஒன்று, நடையில் ஒன்று என்று மூன்று கற்கள் தேடி விட்டன. ஒவ்வொன்றாய் உருட்டிக் கொண்டு வந்தனர். வேலப்பர் கோவில் முன் பரந்த நிழற்பரப்பு. படபடவென்று அங்கு சாமான்களை இறக்கினர். வண்டி ஓட்டி வந்தவர்கள் படுக்க நிழல் தேடி அலைந்தார்கள்.


6

பாலகுமாரன்


செல்வந்தியின் அம்மாதான் சமையலுக்குச் சிப். ஒத்தாசைக்கு ஏழு எட்டுப் பெண்கள். பொட்டலங்களை எல்லாம் பார்த்துப் பார்த்துப் பிரித்து வைத்தார்கள். செல்வந்தியின் அம்மா மடமடவென்று மூன்று கற்களை 'ஃ' மாதிரி சேர்த்தாள். தகதகவென்று தணலை மூட்டி விட்டாள். காரியங்கள் முன்னேறின. ஆண்கள் மேல் வேலையில் இறங்கினார்கள். செல்வந்தியின் அம்மா சமையல் பொருள்களைச் சேர்த்துக் கொடுத்தாள். அடுப்புத் தணல் எவ்வளவு இருக்க வேண்டும். எதோடு எதைச் சேர்க்க வேண்டும் அரைத்து ஊற்றும் பொருள் எது. அள்ளித் தெளிக்கும் பொருள் எது? என்று பல பல விஷயங்களுக்கு

மாற்றுச் சொல்லிக் கொண்டிருந்தாள். சமையல் காரியங்கள் செய்வதில்தான் அவளுக்கு எவ்வளவு சுருக்கு! எவ்வளவு நறுவிசு. தலை கூடியிருக்கிறதே என்று அவள் எதையும் எடுத்தெறிந்து செய்யவில்லை. ஏதோ ஒரு அன்புக்குச் செய்கிறாற்போல் ஆழ்ந்துதான் செய்து கொண்டிருந்தாள். அப்படிச் செய்வதில் அவளுக்கு ஒரு பூரிப்பு!

செவ்வந்தி அம்மாவுக்குக் கைத் துணையாக இருந்தாள். சக்திவேலுக்கு ஒரு வேலையும் இல்லை. எதைத் தொட்டாலும் "நீங்க போய்ச் சும்மா உட்காருங்க..." என்று பத்திரப்படுத்தி விடுவார்கள். ஒரு மாட்டு







''தலைவர் ரொம்ப விரக்தி அடைஞ்சுட்டார்னு நினைக்கிறேன்..''

''ஆட்சியைக் கலைக்க முடியலை யேன்னுதானே?:''

''ஆமா, 'இந்த ஆட்சியிலே வெய்யில் ரொம்ப அதிகமாயிடுச்சு; அதனால் உடனே டிஸ்மிஸ் பண்ணணும்'னு லேட்டஸ்ட்டா அறிக்கை விட்டிருக்காரு!''

— ஜி. செல்லத்துரை

வண்டி நிழலில் நின்றது. அதில் போய் உட்கார்ந்து கொண்டான். அவனுக்குத் துணையாக ஓர் ஆட்டுக் குட்டி. அதுவும் சிறிது நேரம்தான். அது வெட்டுப்படுவதற்காகக் காத்திருக்கிறது.

''நீங்கதேன் வேலுப் பிள்ளை மவனா?'' கணீரென்று ஒரு குரல். சக்திவேல் சட்டென்று எழுந்தான். காப்பி ஹோட்டல் முத்துப்பிள்ளை. கூடவே ராசு வாத்தியாரும் வந்தார்.

''நீங்க உக்காருங்க.''

''பரவாயில்லை.''

''என்னை அடையாளம் தெரியுதா?''

சக்திவேல் சிரித்தான். அந்தச் சிரிப்புக்குத் ''தெரியாமலா?'' என்று அர்த்தம்.

''தம்பியைச் சின்ன வயசுல பார்த்தது!''

சக்திவேல் சிரித்தான்.

''சாஸ்தி வெளியிலெ வர்றதில்லை போல. நல்லதுதான். வெளியிலெ வந்தா நாலு காவாளிப் பயலுகளோடு சுத்தச் சொல்லும். வேண்டாம். உங்க ஜோட்டுக்கு அந்தக் கழுதப்பய ஊர்லெ யார் இருக்கா?''

இதற்கும் சிரிப்புதான். வேறென்ன செய்ய முடிகிறது. இதெல்லாம் பதில் எதிர்பார்த்துக் கேட்கப் படுகின்ற கேள்வி இல்லை.

''என்ன படிச்சிருக்கிங்க?''

''எம்.ஏ.''

''எங்க, மதுரையிலையா?''

''ஆமாம்.''

''வேலைக்கு எழுதிப் போட்டிருக்கா?''

''போட்டிருக்கேன்.''

''ஆமாம். விடப்படாது. எழுதிப் போட்டுக்கிட்டேதேன் இருக்கணும். இப்பவெல்லாம் நம்ம ஆளுங்களுக்கு வேலை கிடைக்கிறதுங்கிறது குதிரைக் கொம்பாவுலெ இருக்கு. அந்தக் காலம் எல்லாம் மலையேறிட்டது. இப்பவெல்லாம் எழுதிப் போட்டா மட்டும் காணாது. காசு பணம் வேணும்.''

''உங்க மூலியத்துலெ, எதுனா ஆனாலும் சரிதான்'' என்று குரலை இழுத்தார் ராசு வாத்தியார். அவர் ஏதோ ஒரு பிரியத்தில் அப்படிக் கேட்டு விட்டார். சக்திவேலுக்கு அது என்னவோ போல் இருந்தது.

முத்துப்பிள்ளை அந்த ஊரில் பிரபலம். மெயின் ரோட்டில் காப்பி ஹோட்டல் வைத்திருக்கிறார். நில புலன்கள் நிறைய உண்டு. அவர் கடை முன்புதான் பஸ் நிற்கும். அவர் கடை முன்பு எப்போதும் ஒரு கூட்டம். சாப்பிடுகிற கூட்டம் மட்டுமில்லை. அவரைப் பார்ப்பதற்கும் ஒரு கூட்டம். 'போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டும்; நிலத் தகராறு; வீட்டில் கரண்ட்டை பிடுங்கி விட்டுப் போய் விட்டான்; ஆட்டைக் காணோம்; மாட்டைக் காணோம் என்று எப்போது பார்த்தாலும் ஒரு கூட்டம் நின்று கொண்டுதான் இருக்கும். இது மட்டுமல்ல தாசில்தார் வந்திருக்கிறார். மலேரியா இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார்; என்று காரும் ஜீப்பும் வந்து போன மணியமாகத்தான் இருக்கும்.

''என்ன வேலைக்கு எழுதிப் போட்டிருக்கு?''

''க்ரூப்-டூ, எக்ஸ்ஸாம் எழுதியிருக்கேன்.''

''ரொம்ப ஒஸ்தியான வேலையா?''

அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. 'ஆமாம்' என்று தலையை ஆட்டி வைத்தான்.

''என் மூத்த மருமவன் மதுரையிலேதான் இருக்கார். கூட்டுறவு சொஸைட்டிலே உத்தியோகம். திருப்பரங்குன்றம் போற வழிதான். அங்க கூட ஒரு காலேஜ் உண்டு தானே?''

''ஆமாம். தியாகராசர் இஞ்சினியரிங் காலேஜ்.''

''தெரியும். செட்டியார்தானே? அங்க தான் படிச்சிங்களா?''

''இது வேற. தெப்பக்குளத்துக்குப் பக்கம்.''

''நம்ம ராசுப் பயல் எல்லாம் பள்ளிக்கூடத்துலெ போய் ஒண்டிக்கிட்டான்!'' என்று ராசு வாத்தியாரைத் தலை உயர்த்திப்

பார்த்தார்.

"எல்லாம் உங்க தயவு சின்னய்யா."

"போடாப் போ. நீ படிச்ச படிப்புக்கு அது தோதாப் போயிட்டது. எதுக்கு என்னைய இழுப்பானேன்?"

சக்திவேல் முத்துப்பிள்ளையைப் பார்த்தான். உடம்பு நல்ல மெருகு. முகத்தில் ஒரு மினுமினுப்பு. சந்தன நிறப் பட்டுச் சட்டை. இரண்டு அங்குல ஜரிகை போட்ட வேட்டி. ஆள்காட்டி விரலிலும், நடுவிரலிலும் தினுசு தினுசாய் மோதிரங்கள். சட்டையின் உள் பாக்கெட்டில் ஒரு டயரி. சரக் சரக் என்று இரைச்சலிடும் டயர் செருப்பு. சக்திவேல் முத்துப்பிள்ளையுடன் சரிசமமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதை அப்பா பார்த்தார். மடித்துக் கட்டிய வேட்டியும், முண்டாசுத் தலையுமாய் வாயில் வேப்பங்குச்சியை வைத்து இழுத்துக் கொண்டே வந்தார். அப்பாவுக்கு அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் பூரிப்பு. இதே பூரிப்பு முத்துப்பிள்ளைக்கும் இருந்தது!

"சாப்பாடு ஆயிட்டதா?" முத்துப்பிள்ளை எழுந்தார். அங்கவஸ்திரத்தை மாலை மாதிரி போட்டுக் கொண்டார்.

"தோ ஆச்சு..."

"என்ன மாயக்கா குனிஞ்சு நிமிர்ந்தாத் தானே?"

"போங்க மாமா!"

"எங்க போறதாம்?"

"மதினி என்ன பண்றீங்க" என்று ஆப்பக்கார அம்மாவிடம் போனார்.

"அம்புட்டுத்தான். தாளிச்சு இறக்க வேண்டியதுதான்."

"மதினி கைப்பக்குவம் அச்சு வெல்லமான்னு பாத்திடணும்." செவ்வந்தியின் அம்மாவுக்கு அந்தப் புகையிலும், முகத்தில் வெக்கம் தெரிந்தது.

"பூஜையை ஆரம்பிக்கலாமா?"

"தீர்த்தத்துக்குப் போற ஜனங்க போயிட்டு வரட்டும்!"

படபடவென்று கூட்டம் உதறி எழுந்தது. அந்த ஒற்றையடிப் பாதைக்குத் தாவிற்று. கல்லும் முள்ளும் மண்டிக் கிடக்கின்ற பாதை. பாதம் பட்டுப் பட்டுப் பாதை பழுத்து விட்டது. கல்லும் முள்ளும் முறிந்து புழுதியாய் மிதந்தது. நெளிநெளியாய் வடு மாதிரி ஓடிற்று. இருபுறங்களிலும் மரங்களும் பாறைகளும். நல்ல கூட்டம். எல்லோரும்



"அந்தக் கட்சி ஆதரவோட ஆட்சியமைக்க வேண்டாம்னு பல தடவை சொன்னேனே, கேட்டிங்களா?"

"ஏன்? என்ன ஆச்சு?"

"ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யணும், இல்லைன்னா ஆதரவை வாபஸ் வாங்கிடுவோம்'னு கடிதம் அனுப்பியிருக்காங்க!"

— ஜே. கண்ணன்

வேகம் காட்டினார்கள். ஒருவரையொருவர் முந்துகின்ற வேகம். இறங்குகிற கூட்டமும் ஏறுகின்ற கூட்டமும் மோதிக் கொண்டன. கிழவர்கள், குழந்தைகள், முப்பது வயதுகள், இருபது வயதுகள் தட்டித் தட்டி நடக்கும் நடை, துள்ளல் நடை, மூச்சு விட்டு விட்டு நடக்கும் நடை, எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டன. போதாது என்று குரங்குக் கூட்டம். வறுத்த கடலைக்கும் பொரிக்கும் பல்லைக் காட்டிக் கொண்டே வந்தது. ஒரு குறும்புக் கூட்டம் அதுகளைக் குத்திக் கொண்டும், கும்மாளமிட்டுக் கொண்டும் வந்தது.

உச்சிக்கு வந்தாயிற்று! கொத்துக் கொத்தாய் நிழல். உருட்டிப் போட்டாற்போல் பாறைகள். மொழுமொழுவென்று பாறைகள். சலசலப்பு இல்லாது ஓடும் நீர். நீருக்கு வேகமில்லை. குலைந்து குலைந்து ஓடுகிறது.

"தம்பி கொஞ்சம் தீர்த்தம் எடுக்கணும்!"

"பாத்திரம் கொடும்மா."

"இந்தக் கூஜாவைத் தரட்டுமா?"

"காசி செம்பு இருந்துச்சே!"

"இதோ இருக்கு."

"செவ்வந்தியைக் காணோம்?" என்று ஒரு

குரல்.

"தீர்த்தம் எடுக்கப் போயிருப்பா!"

"செம்பு இங்கே இருக்கே?"

"இப்பப் பார்த்தேனே!"

"இங்கதான் எங்கனா இருப்பா" என்று ஒரு குரல் சமாதானம் சொன்னது.

சக்திவேல் கண்ணாலே துழாவினான். கைலாசநாதர் குகையில் பார்த்தான். தீர்த்தத் தொட்டியில் பார்த்தான். விபூதி சாமியார் குகையில் பார்த்தான். அவள் இல்லை. எல்லோரும் தீர்த்தத் தொட்டியிலும், விபூதிச் சாமியார் குகையிலும் போய்க் கரைந்து விட்டனர். அவள் மட்டும் இல்லை.

கைலாச நாதர் குகைக்குக் கிழக்குப் பக்கம் ஒரு மரம். மகிழ மரம். மரத்தை ஒட்டி ஒரு வட்டப் பாறை. அந்தப் பாறை இடுக்கில் ஒரு நீண்ட நிழல். அதைத் தொட்டாற் போல் நீர் ஓடுகிறது. செவ்வந்தி அங்கு உட்கார்ந்து இருந்தாள். அங்கு ஒருவரும் இல்லை. அந்த இடம் சூன்யமாக இருந்தது. இப்படி ஓர் இடம் அவள் கண்ணில் எப்படிப்பட்டதோ? சக்திவேல் காசிச் செம்பில் தீர்த்தம் எடுக்கச் சென்றான். அந்தச் சின்ன இடைவெளியில் அவளை நெருங்கினான். சுற்றுமுற்றும் பார்த்தான். அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். ஏதோ கேட்க வாய் எடுத்தான். வாய் குழறியது. அவள் வேகமாக எழுந்தாள். சிறு ஓட்டமாகப் பாறை மறைவில் இருந்து வெளியேறினாள். அவளால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. குரலும் எழும்பவில்லை. கம்மித் தொய்ந்தது. அவளுக்கு உடம்பு உதறலெடுத்தது. ஒரே ஓட்டமாக ஓடி கைலாச நாதர் குகைக்குச் சென்று விட்டாள்.

"செவ்வந்தி நீ மனசால் ரொம்ப வேதனைப்படுவது மாதிரி இருக்கு. அதை என் கிட்டச் சொல்லும் தைரியம் உனக்கு இல்லை. அதைக் கேட்கின்ற வலுவும் என்னிடமில்லை. அப்படி இருந்தால் நாம் இப்படி இருக்கப் போவதில்லை. நாம் ஒருவருக்குள் ஒருவர் ஒளிந்து கொண்டிருப்பது, காலத்திற்குத்தான் விளையாட்டாகப் போய் விட்டது. போகட்டும். நிஜமாகச் சொல்கிறேன் நான் உன்னைப் பார்க்கத்தான் இத்தனை தூரம் வந்தேன். நான் இங்கே வந்தது இந்த அருவியைப் பார்க்க அல்ல; இந்தக் குகையைப் பார்க்க அல்ல; இந்தத் தீர்த்தத் தொட்டியைப் பார்க்க அல்ல; ஆனால் அருவியாகட்டும், குகையாகட்டும் எதைப் பார்த்தாலும் உன் நினைவுதான். இப்போது சற்று முன், ஒரே ஒரு நிமிடம் உன்னைக் காணோம். என மனசு வெறிச் சென்று ஆகி விட்டது. எல்லோர் முன்னிலையிலும் உன்னைப் பார்க்க முடியவில்லை. அப்படிப் பார்த்தாலும் அது என் பார்வையாக இல்லை. நான் என்ன செய்யட்டும்?" சக்திவேல் துவண்டு போய் நின்றான்.

அப்போது ஒரு கை அவன் தோளைத் தொட்டது. நிழலுக்கு இழுத்தது. சக்திவேல் நிமிர்ந்து பார்த்தான்.

(தொடரும்)

**தா**னமாகப் பெற்ற ஆண்–பெண் கருக்களை வாடகைத் தாயாரின் கருப்பையில் வைத்துப் பிறந்தவள்தான் ஜேசீ (JAYCEE). ஜேசீ பிறப்பதற்குள் புஜ்ஜங்கா தம்பதி விவாகரத்து செய்து விட்டனர்.




திருமதி ஜான் புஜ்ஜங்கா குழந்தையின் பராமரிப்புக்கான செலவை கணவரிடமிருந்து கோரியபோது, அவர், குழந்தை சட்டப்படி தன்னுடையது இல்லை என்று வாதாடினார்.

குழந்தைக்குப் பெற்றோர் யாருமே இல்லை என்று கலிஃபோர்னியா கோர்ட்டும் தீர்ப்பளித்து விட்டது!

குழந்தை இல்லாதவர்கள், இப்படி யாருடைய அணுக்களையோ யாரோ ஒருவருடைய கருப்பையில் வைத்துக் குழந்தை பெற்றுக் கொள்வதைவிட, எத்தனை ஆயிரம் அனாதைக் குழந்தைகள் பெற்றவர்களின் அரவணைப்பிற்காகவும், பாசத்திற்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்! அத்தகைய ஒரு குழந்தையை ஏன் தத்தெடுத்துக் கொள்ளக் கூடாது?

ஆதாரம்: ஹிந்து; தகவல்: கலா

Ruchi




ருசி ஊறுகாய்கள்
வீட்டில் செய்த
சுவை போல

**RUCHI AGRO PRODUCTS PRIVATE LIMITED**

50, GIRIAPPA ROAD, CHENNAI - 600 017. PH. 8269290, 8269438, 8241348



அன்புடனும் அக்கறையுடனும்
ஆரோக்கியத்தையும் கலந்து பரிமாறுங்கள்.



SMB

SMB ரவை. SMB மைதா மாவு. SMB கோதுமை மாவுகள். தனிச்சிறப்பான தரம். சுண்டியிழுக்கும் சுவை. உங்கள் குடும்பத்திற்கு ஊட்டச்சத்துமிக்க முழுமையான உணவு.

என்றும் கேட்டு வாங்கிடுங்கள். எல்லோருக்கும் பரிமாறிடுங்கள். சூடாக. சுவையாக.

- பரோட்டா • பப்ஸ் • கேக் • பிஸ்கட் • ரொட்டி • நான் • பாதுஷா • பூரி • அல்வா
- சப்பாத்தி • தோசை • கேசரி • உப்புமா • இட்லி • ரவாதோசை • ரவாலட்டு



*தயாரிப்பாளர்கள் :*

சக்தி முருகன் ரோலர் ப்ளவர் மில்ஸ் பி. லிட்.

தபால் பெட்டி எண். 15, அவினாசி - 641 654,
கோவை மாவட்டம், போன் : 52991, 52992, 52993, 52994

# அமெரிக்க அனுபவம்!

நம் உள்ளங்களிலே புகுகின்ற எண்ணங்கள்தான் நம்மைக் கவர்கின்ற கருத்துக்கள்தான் – நம் வாழ்வையே மாற்றி அமைக்கின்றன. இதுதான் உண்மை. இந்த விஷயத்தில் என் தாய்தான் எனக்கு முதல் ஆசான். அவர் எனக்குக் கொடுத்த தைரியம் இருக்கிறதே, அது எனக்கு துணிவைத் தந்தது. தைரியமாக எதையும் செய்யும் ஒரு மனோ பலத்தைத் தந்தது.

எல்லோர் வீட்டிலும் தந்தைதான் அறிவுரைகள் வழங்குவார்; கண்டிப்பார்; மேலே "இன்னது படி" என்பார். பாடஞ் சொல்லிக் கொடுப்பார். ஆனால் எங்கள் வீட்டிலோ எல்லாமே என் தாய்தான். துணிவு, வீட்டு நிர்வாகம்; வருகிறவர்களை உபசரிப்பது, வரவேற்பது; உறவினர்களுக்குச் செலவு செய்வது என்கிற எல்லாம் என் தாய்தான். என் தந்தை மிகுந்த சாது; அதிர்ந்து பேச மாட்டார். அன்பு என்றால் 'கனிவு' என்ற குணம் அவருடைய உடலிலிருந்து, பரவி எல்லோரையும் ஊடுருவிக் கொண்டிருக்கும் என்று சொன்னால் மிகையாகாது. அவருக்குத் தொழில் - கடை - வியாபாரம். அதில் கவனம். அதிலும் ஏதோ ஒரு நியாயமான தொழிலைச் செய்து வரும் திருப்தியோடு ஈடுபட்டிருந்தாரே தவிர, வேறெந்த உந்துதலும் அவருக்கு இல்லை. பெரிதாகப் புத்திமதி கூற மாட்டார்; கண்டிக்க மாட்டார். மயிலாடுதுறை உயர் நிலைப் பள்ளியில் படித்தபோது மதிப்பெண் பட்டியலைக் கொடுப்பார்கள்; அதைப் பெற்றோரிடம் காட்டி கையெழுத்துப் பெற்று வர வேண்டும். "நேற்று என் தந்தை பிச்சி வாங்கி விட்டார். நல்ல உதை" என்றெல்லாம் மதிப்பெண்களுக்கு நடந்த மரியாதையைக் கதை கதையாக மற்ற பையன்கள் பள்ளியில் கூறுவார்கள்!



• அமெரிக்காவில் படிக்கும் போது நண்பர்களுடன்...

என் தந்தையிடம் மதிப்பெண் பட்டியலைக் காட்டினால், "எங்கே கையெழுத்துப் போட வேண்டும்?" என்பார்.

"மதிப்பெண்களை எல்லாம் பார்த்தீர்களா? பாருங்கள் அப்பா!" என்று சொன்னால், "எனக்கென்னடா தெரியும்! எவ்வளவு வாங்க வேண்டுமோ அவ்வளவு வாங்கி இருக்கிறாய் அல்லவா?" என்பார்.

நான் மதிப்பெண்களைச் சுட்டிக் காட்டி 52, 61 என்று சொல்வதுண்டு. "சரி நல்லது" என்பார்.

மற்ற மாணவர்கள் தாங்கள் பெற்ற குறைந்த மார்க்குக்காக அடி உதை என்று சொல்லும்போது எனக்கு 'சப்'பென்று இருக்கும்! என் அப்பா கடுமையாக கோபித்துக் கொண்டார் என்று கூட என் நண்பர்களிடம் பெருமையாகக் கூற முடியாது!

அதாவது எங்கள் வீடு சற்று வித்தியாசமான குடும்பம்.

நான் அமெரிக்கா செல்வதற்கு ஓராண்டிற்கு முன் என் தாய் காலமாகி விட்டார்கள். அவர்கள் சொல்வார்கள். "நான் போன பிறகு நீங்கள் எல்லாம் நன்றாக இருப்பீர்கள்!" என்று வாழ்த்துவார்கள். ஏன் அப்படிச் சொன்னார்கள்? இருந்து பார்த்துவிட்டுப் போகக் கூடாதா?

நான் இப்போதெல்லாம் என் குழந்தைகளிடமும் நண்பர்களிடமும் "நடக்க வேண்டிய நல்லதை எல்லாம் இருந்து பார்த்து விட்டுத்தான் போகப் போகிறேன்!" என்று சொல்வதுண்டு!

நம் எண்ணங்கள்! நம் எண்ணங்கள்தான்

நம்மை வாழவைக்கின்றன!

அமெரிக்கா சென்றபோது என்னுள் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. என் மனோ பாவம், மாறியது. அமெரிக்காவுக்கு மேற் படிப்புக்குச் செல்ல, மூவாயிரம் பேரில், நூற்றி ஐந்து பேரை அகில இந்தியாவிலிருந்து தேர்தெடுத்திருந்தார்கள்.

அமெரிக்காவில் என்னை ஒரு அமெரிக்க மருத்துவர் வீட்டில் 15 நாட்கள் தங்க ஏற் பாடு செய்திருந்தார்கள். சர்வ தேச மாண வர்களுக்கு அமெரிக்காவை அறிமுகப்படுத் தும் பணியை, இப்படி ஒரு திட்டமாக ஏற் பாடு செய்திருந்தார்கள். அவர் தோல் நோய் சம்பந்தமான மருத்துவர். "ஏதாவது அவசர மாக மருத்துவமனைக்குப் போயிருந்தீர் களா?" என்று கேட்டால், "என் தொழிலில் தோல் வியாதியால் யாருமே அவசரமாகச் சாகமாட்டார்கள்!" என்பார்.




அவருடைய மனைவி என்னைப் பெரிய மளிகைக் கடைகளுக்கு அழைத்துச் சென்று எது வாங்க வேண்டும் என்று ஒவ்வொன்றை யும் காட்டி விளக்கிச் சொல்வார்.

ஒரு முறை வீட்டுக்கு வந்ததும் சொன் னார். "வேறு நிறத்தவன் ஒருவனுடன், ஒரு அமெரிக்கப் பெண்மணி சகஜமாகப் பழகிக் கொண்டு போவதை – கடைக்குப் போகும் வழியில் - பிறர் நம்மை உற்று நோக்கியதைக் கவனித்தாயா?" என்றார்.

"நான் கவனிக்கவில்லை. நான் கறுப்பாக

**டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி**




**நம்மைப் பற்றி நமக்குள்ளே ஓரளவு தெரியும். ஆனாலும் அதற்கு வெளி உலக அங்கீகாரம் கிடைக்கும் போதுதான், நமக்கு நம்மைப் பற்றிய பெருமை மகிழ்ச்சி பூரணமாகிறது.**



இருப்பதே எனக்கு மறந்து போய்விட்டது. அந்த நினைவே இல்லை" என்றேன்.

"வெந்த காய்கறிகளை மட்டுமே தின்று எப்படி ஒரு மனிதன் ஜீவிக்க முடியும்?" என்று சைவ உணவு பற்றி அங்கலாய்ப்பார். எங்களை விருந்துக்கு அழைக்கும் எல்லோருக்குமே அன்று இது பெரிய பிரச்னை.

கடைசியில் பார்த்தால் ஒரு பெரிய உணவு நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாகப் போய்ச் சேர்ந்தேன். அங்கே உணவு தயாரிப்பில் மாமிசம்தான் - மாட்டிறைச்சி, பன்றி இறைச்சிதான் முக்கிய அயிட்டம். நான் அதன் ருசி, மணம், வாயில் போட்டதும் ஏற்படும் மிருதுத்தன்மை, என்று எல்லாவற்றையும் தரம் பார்த்து அனுப்ப வேண்டும். பதம் பார்த்து அதன் தரத்தைத் தீர்மானித்தபோது எனக்கே ஆச்சரியம் ஏற்படும். பரம்பரை பரம்பரையாக சைவ உணவு சாப்பிட்டவனாகிய என் முகத்தைப் பார்த்து எனது நிறுவன நிர்வாகிகள் மாமிசத்தின் தரத்திற்குத் தீர்ப்புக் கூறுகிறார்களே என்கிற விஷயம்!

## போட்டி முடிவு!

**போட்டி 3-ல், 'செஞ்சி இராமச்சந்திரன்' என்கிற விடையைச் சரியாக எழுதி பட்டுப் புடைவை பரிசு பெறுபவர் :**
**டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி,**
**மெயின் ரோடு,**
**வீரப்பெருமாநல்லூர் - 607 101**

பள்ளிப் படிப்பின்போது என் மூத்த மகன் சித்தார்த்தன் பகுதி நேர வேலையாக ஒரு மளிகைக் கடை போன்ற பெரிய கடையில் சேர்ந்தான். சில நாட்களில் அவனைத் தூக்கி மாமிசப் பொருள்களை விற்பனைக்குத் தயார் செய்யும் மாமிச இலாகாவில் போட்டார்கள்!

மனம் உறுத்தியது.

கொங்கண முனிவர், ஒரு வீட்டுத் தலைவியிடம் மொத்துப்பட்டு கடைசியில் ஒரு கசாப்புக் கடைக்காரரிடம் போய் ஞானம் பெறும் சம்பவம்தான் நினைவுக்கு வருகிறது. "பற்று நீக்கித் தொழில் செய்" என்பார் திரும்பத் திரும்ப, பாரதியார், தமது பகவத் கீதை உரையில்.

எண்ணங்களும், நம்பிக்கைகளும், வாழ்க்கையும் எப்படி இணைக்கப்படுகின்றன என்று சிந்திக்கிறேன்.

என் மனைவிதான் இதில் விசேஷம்.

எங்காவது அமெரிக்கர்கள் வீட்டில் விருந்துக்குப் போனால் எதை எடுத்துக் கொள்வது என்பது அவளுக்கு நன்கு தெரியும். எனினும் சில சந்தேகத்துக்குரிய அயிட்டங்களும் அங்கே இருக்கும்.

"இந்த 'கேக்'கை எப்படிச் செய்கிறீர்கள்?" என்பாள்; ஆசையுடன் கேட்பவள் போல. அவர்கள் சர்வ சாதாரணமாக "ரொம்ப சுலபம்! இரண்டு முட்டை, நாலு கப் மாவு..." என்பார்கள். அவ்வளவுதான்! சிரித்து விட்டு அந்த 'கேக்' பக்கமே போக மாட்டாள்!

**1950**லும் சரி 60தின் ஆரம்ப ஆண்டுகளிலும் சரி, மேற்படிப்பு படிக்க வரும் மாணவர்கள், எல்லோரும் வேகமாகப் படித்துவிட்டு ஊர் திரும்பி விடுவார்கள். யாரும் தங்கள் மனைவியை அழைத்து வரும் பழக்கம் இல்லை.

முதன் முதலாக மேடிசனில் (பல்கலைக் கழகம் இருந்த நகர்) சமீபத்தில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருந்த டாக்டர் முத்துக் கருப்பன் அவர்கள்தான் 1963ல் தன் மனைவியை அழைத்துக் கொண்டு வந்தார். அவர் தம் மனைவியை அழைத்து வந்ததில் எல்லோருக்குமே சந்தோஷம். ஏனெனில் எல்லா தமிழ் மாணவர்களுக்கும் அவர்கள் வீட்டில் அருமையான தமிழ் விருந்தை அளிப்பார் அவர் மனைவி சரோஜா அவர்கள். அடுத்து என் மனைவி. அடுத்த ஆண்டு வந்தாள்.

அமெரிக்க வாழ்க்கை ஒன்றும் சொகுசான வாழ்க்கை அல்ல; தஞ்சாவூர் மிராசுதார் வாழ்க்கை - சுகவாசி வாழ்க்கை அல்ல. தஞ்சாவூரில் அந்தக் காலத்தில் தொழில் என்ற பகுதியில் 'சுகவாசி' என்று எழுதுவார்கள்!

அமெரிக்காவில் கடுமையான உழைப்பு, உழைப்பதற்கும் ஏராள வாய்ப்பு. உழைத்தால் நன்றாக வாழலாம். அடித்தள மக்கள் கூட சாப்பாட்டுக்குக் கஷ்டமின்றி போக்குவரத்திற்கு ஒரு பழைய காரை வைத்துக் கொண்டு திருப்தியுடன் வாழ்வார்கள்.

நான் இரண்டாண்டுகள் பாடப்படிப்பை எல்லாம் முடித்து டாக்டர் பட்டத்திற்கான - ஆராய்ச்சியை முழுநேரமாக மேற் கொள்ளும் தகுதிக்கான - பரீட்சையை எழுத வேண்டும். இதில் தேற வேண்டும். இதில் சில சமயம் சிலரை வடிக்கட்டி விடுவார்கள். "சராசரி மாணவனுக்கு மேலாகப் படிக்கி

றோம்" என்ற தன்னம்பிக்கை இருந்தாலும் "பரீட்சை என்ன ஆகுமோ?" என்கிற பயம் இருக்கத்தான் செய்தது. ஆனாலும் என் பேராசிரியர் அடுத்த ஆண்டும் நான் அங்கிருக்க ஆராய்ச்சி செய்ய அனுமதிக்கும் ஓர் ஒப்பந்தக் கடிதத்தை அளித்திருந்தார்.

அப்போதுதான் நான் என் மனைவியை அழைத்து வரத் தீர்மானித்தேன். "டாக்டர் பட்டம் எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் எப்படி இருந்தாலும் இன்னும் ஓராண்டு இங்கிருக்கலாம். எனவே மனைவியை அழைத்து வந்து அமெரிக்காவைக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. என் மனைவி அமெரிக்காவுக்கு வருகின்ற முதல் நாள்தான் எனக்குப் பரீட்சை.

வந்து சேர்ந்ததுமே, என் மாணவ நண்பர் அவளை ஒரு முதியோர் இல்லத்தில், உணவு பரிமாறும் பகுதியில் அமர்த்தினார். என் மனைவியின் வருமானத்தின் மூலமாகத்தான் நான் மாணவனாயிருந்த போதே என் இரண்டு மகன்களையும் அழைத்து வர முடிந்தது.

ஒரு புதிய கார் வாங்கவும் முடிந்தது. புதிய காரில் 1400 மைல் பயணம் செய்து என் மகன்களை நியுயார்க் விமான நிலையத்திலிருந்து அழைத்து வரவும் முடிந்தது.

என் பரீட்சை முடிவு வெளி வந்தது. எனது பேராசிரியர் ஆராய்ச்சிக் கூடத்தின் நடை பாதையில் என்னைப் பார்த்து, "நீ தேறிவிட்டாய்!" என்று மகிழ்ச்சியுடன் பாராட்டினார்.

எனக்கு ஒரே குதூகலம்!

நம்மைப் பற்றி நமக்குள்ளே ஓரளவு தெரியும். ஆனாலும் அதற்கு வெளி உலக அங்கீகாரம் கிடைக்கும் போதுதான், நமக்கு நம்மைப் பற்றிய பெருமை மகிழ்ச்சி பூரணமாகிறது.

இன்னும் என் நினைவில் நிற்கிறது. அது நல்ல குளிர் காலம். விஸ்கான்சின் பகுதியில் 7-8 மாதம் குளிர் இருக்கும். ஐந்து மாதம் பனிக்கட்டி இருக்கும், பூமியின் மீது.

என் மனைவிக்கு குளிருக்கான 'கோட்டு' வாங்க கடையின் மாடிக்குச் சென்றோம். வாங்கினோம். திரும்பி மாடிப்படியிலிருந்து இறங்கி வரும்போது இடதுபுறம் சுவர் பூராவும் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பதித்திருந்தார்கள். நான் அதைப் பார்த்தேன். என் உருவம் தெரிந்தது. என் மனைவியிடம் கேட்டேன்.

"இங்கே பார்! அங்கே என்ன பார்க்கிறாய்?" என்றேன்.

"ரொம்ப நாளைக்குப் பிறகு உன்னோட சமையல்ல இப்பத்தான் வித்தியாசம் தெரியுது கமலா!"

"என்னங்க... அது...!"

"முன்பெல்லாம் சாப்பாட்டுல கறுப்பு முடிதான் கிடக்கும். இப்ப வெள்ளை முடியும் கிடக்குதே!"

— சித்தோடு கே. சதீஷ்குமார்



"ஏன், நம் உருவம்தான் தெரிகிறது!"

"நீ அங்கே ஒரு சாதனையாளனைப் பார்க்கவில்லை?"

அவள் சிரித்தாள். "எப்போது போல்தான் இருக்கிறீர்கள்!" என்றாள்.

நான் பதில் பேசவில்லை. நானும் சிரித்துக் கொண்டேன். என்னுள் நிகழ்ந்திருக்கும் மாற்றம் எனக்கு மட்டுமே தெரியும். நான் கடந்த பாதை, பட்ட சிரமம், உழைத்த உழைப்பு நானே என்னை வளர்த்துக் கொண்டது, திருத்திக் கொண்டது.

அமெரிக்காவுக்குச் சென்றபோது மேடிசனில் எஸ்.எஸ். கிரெஸ்கி என்றொரு 'எதெடுத்தாலும் பத்துக் காசு' என்ற டைம் ஸ்டோர் இருந்தது. நான் மாணவன். உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வாழ்க்கை பற்றிய அறிவுரை கூறும் ஒரு பாட நூல் 57 காசுக்குப் போட்டிருந்தார்கள். நான் அதை வாங்கி வந்தேன். அதில் மாணவர்கள் எப்படி சமுதாயத்தில் பழகுவது, ஆண் பெண் சிநேகிதத்தில் கடைப் பிடிக்கும் விதிகள் என்ன என்பதிலிருந்து, தங்களுடைய 'பர்சனாலிட்டி'யையும், தங்களது கம்பீரத்தையும், தலைமைக் குணங்களையும் எப்படி வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது வரை எல்லாம் அற்புதமாக எழுதப்பட்டிருந்தது. படித்தேன்; பல முறை படித்தேன். அதற்குப் பின் 'ஸ்டேட்' தெருவில் பால் என்பவர் வைத்திருக்கும் பழைய புத்தகக் கடைக்கு அடிக்கடி போவேன். மணிக்கணக்கில் செலவிடுவேன். பழைய புத்தகங்களை வாங்குவதையும் படிப்பதையும் பழக்கமாக்கிக் கொண்டேன். என்னை நானே வளர்த்துக் கொண்டேன்; அந்த வளர்ந்த மனிதனைத்தான் அன்று அங்கு கண்ணாடியில் பார்த்தேன். என்னைச் செதுக்கிய நூல்களும் எண்ணங்களும்!

(தொடரும்)

"ஆரம்ப காலத்தில் மாசுக்கட்டுப் பாட்டு வாரியத்திடமிருந்து இது சம்பந்த மாய் ஒரு வழிமுறையோ நெறிமுறையோ காட்டப்படவில்லை. சுத்திகரிக்கப்பட்ட நீரில் உப்புத் தன்மை, 'கலர்' தன்மை இப் படியிப்படி இருக்க வேண்டும் என்கிற அளவு கோலோடு அது நின்று விட்டது. பாண்டி பொது சுத்திகரிப்பு நிலைய கூட்டுக் குழுவின் தலைவர் கே.எம். சுப்பிரமணியம்.

ஒரு நாளைக்குச் சுமார் ஒரு கோடி லிட்டர் தண்ணீரைச் சுத்திகரிக்கும் திற னுள்ள இந்தச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மட்டும் இதுவரை சுமார் ஐந்தே முக்கால் கோடி ரூபாய் செலவு பிடித்துள்ளதாம்!

• சி.கே. குப்புசாமி



• கந்தசாமி



• கே.எம். சுப்பிரமணியம்





# நீடிக்கும் பிரச்னை; நஷ்டமாகும் கோடிகள்!

*1991*-லிருந்து நாங்களாகவே முட்டிமோதி ஒரு திட்டம் தயாரித்து, திருப்பூர் சாயப்பட்ட றைகள் அனைத்துக்குமாக ஒரு சுத்தகரிப்பு நிலையம் அமைக்கத் திட்டமிட்டோம். அதற்கு விதிகளுக்குட்பட்ட இடம் தேர்வு செய்தோம். தொழில் நுட்பம், என்ன? செலவு விவரம் என்ன? அதை எப்படி ஒருங் கிணைப்பது என பல குழப்பமான சூழ லிலேயே காலம் நகர, சாயப்பட்டறைகளும் 'எக்ஸ்போர்ட்' நிமித்தம் பெருகிப் போயின. பிறகு—*1993*-ல் மூன்று சுத்திகரிப்பு நிலை யங்கள் கட்டுவதாக ஏற்பாடாகி அரசிடம் நிலம் கேட்டோம். முதலில் தருகிறோம் என்ற வர்கள் பின்னாளில் கையை விரித்து விட் டனர். இப்போது நாங்களே எங்கள் சக்திக்கு மீறி இடமும் விலைக்கு வாங்கி, *75* கம் பெனிகள் சேர்ந்து ஒரு சுத்திகரிப்பு நிலை யத்தை உருவாக்கி விட்டோம். இப்போது 'ட்ரயலுக்கு' ரெடியாய் இருக்கிறது. ஆனா லும் பாருங்க இன்னும் மின் இணைப்பு வந்த பாடில்லை...!"

– நாம் திருப்பூரில் இறங்கியதும் இப்படி நம்மிடம் காரணங்களை அடுக்கியவர் வீர


உடனடியாக உருவாக்கப்படாததற்குக் காரணம், தொழில் நுட்பக் குழப்பம் மட்டுமல்ல; கடந்த காலங்களில் அரசு அறிவித்த நிதி ஆதார - ஒதுக்கீடுக் குழப்ப மும்தான் என்கின்றனர் சாயப்பட்டறை உரிமையாளர்கள்.

இது போன்ற சுத்திகரிப்பு நிலையங் களைப் பொதுவில் அமைக்கும் சாயத் தொழில் பட்டறைகளுக்கு ஆகின்ற செல வில் சரிபாதித் தொகையை அரசு மான்ய மாக அறிவித்ததாம் (மாநில அரசு *25%* மத்திய அரசு *25%*). அதை நம்பி வேலையை ஆரம்பித்த பிறகு திடீரென்று மான்யத் தொகைக்கு உச்சவரம்பு நிர்ணயித்து விட்ட தாம். இதனால் குழம்பிப் போய் விட் டார்கள் சாயப்பட்டறை அதிபர்கள். சிலர் தனிப்பட்ட முறையிலேயே சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ஆரம்பித்து விட் டனர். (தனியார் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க, செலவு *5 - 10* லட்சம் பிடிக்கு மாம்). வங்கிகளும் தொழில் முதலீட்டிற்கு ஆர்வம் காட்டிய அளவு இந்தப் பொதுச் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கடன் வழங்கிட

முன் வரவில்லையாம்.

இங்குள்ள இரண்டு வகை சுத்திகரிப்பு நிலையங்களுள் (Common effluent

இன்னும் இயங்காத சுத்திகரிப்பு நிலையம்...




treating plant ''CETD'', Effluent treating plant ''ETP'') சுத்தமாக வேலையை முடித்து 'ட்ரயல்' காட்டியவை என்று ஒன்றுமில்லை. 115 தனியார் பட்டறைகள் ஆரம்ப கட்ட வேலையை மட்டும் முடித்துள்ளன. பொதுச் சுத்திகரிப்பு நிலையம் மொத்தம் எட்டு. அதிலும் இன்னும் ஆரம்ப கட்ட வேலைகளே நடைபெற்று வருகின்றன.

தனிப்பட்ட முறையில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதில் ஈடுபட்டுள்ள ஆலைகளின் புலம்பல் படு மோசமாக உள்ளது. பாதி கிடைத்தும், கிடைக்காது நின்றாலும் பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அரசு மானியம், வங்கிக் கடன் என ஏதோ அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஓரளவு கொஞ்சம் கொடுக்கப்பட்டும் இருக்கிறது. ஆனால் தனியார் நிலையங்களுக்கு அப்படி எதுவுமே இல்லை. அனைத்தையும் தங்கள் சொந்தச் செலவிலேயே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்!

சொந்தத்தில் ஒரு சுத்திகரிப்பு நிலையம் அமைத்துப் புண்பட்டு, பாக்டரியை இழுத்து மூடியுள்ள உரிமையாளர் முத்துசாமி என்பவர், ''எங்களை மாசுக் கட்டுப்பாடு வாரியம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்துகிறது. கடந்த வருடம் திருப்பூரில் 800க்கும் மேற்பட்ட சாயப்பட்டறைகள் சுத்திகரிப்பு செய்யப்படாமலே இயங்கிக் கொண்டிருந்த சூழலில், குறிப்பிட்ட 13 ஃபாக்டரிகளுக்கு மட்டும் மின் இணைப்பைத் துண்டித்தனர். (மாசுக் கட்டுப்பாடு வாரியம் சொன்னால் உடனே மின் இணைப்பு துண்டிப்பு!) காரணம் கேட்டபோது 'மற்ற ஆலைகளுக்கு ஓர் எச்சரிக்கை மணியாகவே' இதை அவர்கள் நடைமுறைப்படுத்தியதாக

• சாக்கடையான நொய்யல் ஆறு...



எங்களுக்கு தகவல்கள் வந்தன!'' என்று ரொம்பவும் நொந்து போய்ப் பேசினார்.

இப்படி தனியார் பொது என பிரச்னைகள் ஒரு பக்கம், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் நெருக்குதல் மறுபக்கமுமாய் இருக்க, இதனைத் தீர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்ட 'சாயப்பட்டறை அதிபர்கள் சங்கம்' என்ன செய்கிறது என அதன் தலைவரான கந்தசாமியிடம் பேசினோம்!

"சௌகர்யம் வரும்போது அசௌகர்யமும் வரத்தான் செய்யும். வளர்ந்த நாட்டுக்கு இணையாக நாம் இங்கு தொழில் நுட்பத்தைக் கொண்டு வருவதென்பது மிகச் சிரமமான விஷயம். இங்கே தொழில் முதலில் வந்தது. மாசு பிறகு வந்தது. அதன் பின்னரே கட்டுப்பாடு, சட்டம் எல்லாமே அணிதிரண்டன. வளர்ந்த நாடுகளில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் நம் போன்ற வளரும் நாடுகள் இதை இவ்வளவு தூரம் நெருக்குதலுக்கு உட்படுத்தக் கூடாது. காரணம், சுத்திகரிப்பதற்கான தொழில் நுட்பம் நம்நாட்டில் இன்னும் கரு நிலையிலேயே உள்ளது!" என்றார்.

"இருந்தாலும் திருப்பூர் சாயக் கழிவுகளுக்குச் சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்க வேண்டியது மிக அவசியம்தான் என்பதை எங்கள் தரப்பு நன்றாகவே உணர்ந்திருக்கிறது. அதை செயல்படுத்த கால அவகாசம் தேவையென்றுதான் நாங்கள் கோருகிறோம். அத்துடன் தெளிவான தொழில் நுட்பத்தை மாசுக் கட்டுப்பாட்டு வாரியமே வரையறுத்துத் தர வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. சுத்திகரிக்கப்பட்ட நீரில் உப்பின் தன்மை லிட்டருக்கு 2100 PPM (மில்லி கிராம்) இருக்க வேண்டும் என்பது அவர்கள் விதிகளுள் ஒன்று. திருப்பூரில் நிலத்தடி நீரில் உப்பின் அளவு 4000 PPM, 5000 PPM என நீள்கிறது! இப்படி யதார்த்தத்துக்குப் புறம்பாக வேண்டுமென்றால் எப்படி...?'' என்கிறார் அவர்.

சாயப்பட்டறைகளுக்கு நேரப் போகும் அவலம், அல்லது நேர்ந்திருக்கும் சுமைகளை விட சாயக்கழிவுகளின் பாதிப்பு மக்களிடம் நிறையவே இருக்கிறது. நிலத்தடி நீர் பாதிப்பு ஒரு பக்கம் என்றால் காணாமல் போனது நொய்யல் நதி! ஒரு சாக்கடை போலவே நகருக்கு நடுவே அது கோடு பரப்புகிறது.

இவற்றையெல்லாம் மீட்டெடுக்க வேண்டிய அவசியம் குறித்து பாமரரும் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக நொய்யல் நதிக்குக் குறுக்காக ஒரத்துப்பாளையம் அணை கட்டப்படும் போது (திருப்பூரிலிருந்து நூறு கி.மீ. தூரம்) நிலத்தடி நீர் நன்கு கிடைக்கும்; பாசன வசதிக்கு இனி கவலையில்லை என்றே நம்பிக்கை விதைகளை அப்பகுதி விவசாயிகள் மனத்தில் பதிய விட்டிருக்கின்றனர்.

பின்னாளில் அங்கு வந்து நாற்றத்தோடு தேங்கின நீர், செத்து விழுந்த மீன்கள்.. குடிக்க லாயக்கற்றுப் போனது மட்டுமல்லாது, பயிர் பச்சைகளைக் கூடச் சாகடிக்கிற நிலைமை. கொதித்துப் போய் விட்டனர் விவசாயிகள்.

விளைவு? நியாயம் கேட்க வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்.

சாயத் தொழிலை நேரடியாகத் தாக்கும் இச்சிக்கலால், அது சார்ந்து நிற்கும் பனியன், ஜவுளி, பருத்தித் தொழிலும் பாதிக்கப்படும். காரணம் இன்று பெரும்பான்மை ஏற்றுமதி வண்ண ஆடைகளே..! தொழில் பாதிப்பு ஒரு புறம் என்றால் அரசாங்கத்திற்கு ஈட்டித் தரும் அந்நியச் செலாவணி மட்டும் பல ஆயிரம் கோடிகள்! அதுவும் இனி அடி வாங்கும்! ஏற்கெனவே தொழில் சிக்கலில் – தேக்கத்தில் உழலும் உள்ளூர் வர்த்தகமும் சேர்ந்து இனி எல்லா இடங்களிலும் பாதிப்புகளை விளைவிக்கும்போது அரசுக்கு மேலும் பிரச்னைகள் விளையலாம்.

இதுகுறித்து டெக்ஸாஸ் பனியன் தொழில் அதிபரும் திருப்பூர் வாசியும் தொடர்ந்து மூன்று முறை கோவைத் தொகுதியில் எம்.பி.யாக (காங்கிரஸ்) இருந்தவருமான சி.கே. குப்புசாமியிடம் கேட்டோம்.

"நான் 1985 லேயே சுத்திகரிப்பு நிலையங்கள் வேண்டும் எனச் சொன்னேன். அன்று உள்ளூர் அரசியல்வாதிகள், சில தொழில் பிரமுகர்கள் தங்கள் சுயநலனுக்காக

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

**'உங்க ஓட்டல்ல எதுக்கு சைக்கிள் பம்போட ஒரு பொடியனை வேலைக்கு வெச்சிருக்கீங்க?''**

**''அவனுக்கு பூரிக்குக் காத்தடிக்கிற வேலை சார்!''**

**— கொங்கணாபுரம் வே. செந்தில்**



அதனை ஓரங்கட்டி விட்டு மக்களுக்குச் சுகாதாரக் கேடுகள் செய்ய ஆரம்பித்துவிட்டனர். அதிகாரிகளுடனும் அரசியல் வாதிகளுடன் சேர்ந்து வர்த்தகர்கள் செய்த குளறுபடி இது.

''தினமும் ஆயிரம் லாரி தண்ணீர் கொண்டு வந்து தொழில் நடத்துபவர்களுக்கு இந்தச் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதில் நஷ்டம் ஒன்றுமில்லை. அதேபோல் அவர்களும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உடன்பட்டு வேலையும் செய்து வருகின்றனரே... பன்னிரண்டு வருடங்கள் காத்திருந்த அரசு, இன்னும் ஒரு ஆறு மாத அவகாசம் கொடுப்பதில் என்ன தவறு...?'' என்றார்.

இன்னும் ஆறு மாத அவகாசம் கொடுத்தால் மட்டும் சுத்திகரிப்பு பணிகளை சிறப்பாக முடித்து விடுவார்களா? அது சாத்தியமா? என்று மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது சிரித்தார்.

''இது எப்போதோ நடைபெற்றிருக்க வேண்டிய வேலை. வருடம் இரண்டாயிரம் கோடிக்கு மேல் வர்த்தகம் செய்யும் முதலாளிகள், வெறும் 40 கோடி ரூபாய் செலவு செய்யத் தயங்குவது ஏன்? (மான்ய உச்சவரம்பு) என்பதெல்லாம் அவர்கள் கோர்ட்டிலேயே ஒப்புக் கொண்ட ஒரு விஷயம்தான். இத்தனை கால அவகாசம் கொடுத்தும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான ஆரம்பகட்ட வேலைகளையே இன்னும் முழுமையாக முடிக்காத இவர்கள், இன்னும் ஆறு மாத காலத்தில் சுத்திகரிப்பு நிலையங்களை முழுமையாக அமைத்துச் செயல்படுவதென்பது எப்படி சார்...?'' என்றார் அவர்!

மீண்டும் சிரிப்பு!

பக்கம் பக்கமாய் அவரவர்கள் பிடிவாதம் பிடிக்க, தொழிலுக்கு பதிப்பு, பல பேர் வருமானத்துக்கு வேட்டு....!

இறுதியில், கோவை எம்.பியும், முத்தரப்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவரும், திருப்பூர் நகர வாசியும், சாயப்பட்டறை - பனியன் அதிபருமான சி.பி. ராதாகிருஷ்ணனிடம் கேட்டபோது, ''ஆறு மாத காலத்திற்குள் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட முடியும். அமைத்திட வேண்டும்; இது பட்டறை அதிபர்களின் பொறுப்பு. அப்படி அமைத்திடாத பட்டறைகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்!'' என்றார்.

கட்டுரை, படங்கள் : கா.சு. வேலாயுதன்


# தமிழ்த் தென்றல் திரு.வி.க., பேராசிரியர் கல்கி நூல்கள் நாட்டுடைமையாக்கல் — பரிவுத் தொகை வழங்கும் விழா!





இடம்: கலைவாணர் அரங்கம், சென்னை.

நாள்: 15.5.98 மாலை 6 மணி.

தலைமை: மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

பரிவுத் தொகை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்

வாழ்த்துரை:

திரு. சா. விஸ்வநாதன் (சாவி)

திரு. குமரி அனந்தன்

அனைவரும் வந்து விழாவை சிறப்பிக்க வேண்டுகிறோம்!


# தண்ணீர் பிரச்சினைக்கு சுலபமான தீர்வு

SUGUNA

## "சுகுணா" மோட்டார்ஸ் & பம்புசெட்டுகள்



ஜெட் பம்ப்செட்



பிஸ்டன் பம்ப்செட்

## சுகுணா பம்ப்ஸ் பிரைவேட் லிமிடெட்

**160 & 174, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001.**

**போன் : 5340558, 5340056**

*With the Blessings of all Saints, Sages and Acharyals of different Mutts & Divine Mothers*

## GIRI TRADING AGENCY

*Happly & Humbly Announces Life Time Benefit Schemes to facilitate everyone*

### Salient Features

**Green Card Scheme**

You can become a Life Time Member of **Green Card Scheme.**

Life Time Membership Rs. 1000/- only

**BENEFITS**

1. 10% Off on all Items from the showroom
2. 25% Off on Our Publications.
3. 15% Off on Gitaa Cassettes.
4. Free Kamakoti subscription for One Year if enrolled before 16.6.98
5. Free Silver Coin - Shodasa Mahalakshmi Pooja Performed with Kumkum prasadam.

**Silver Card Scheme**

You can become a Life Time Member of **Silver Card Scheme.**

Life Time Membership Rs. 500/- only

**BENEFITS**

1. 5% Off on all items from the show room
2. 12.5% Off on Our Publications.
3. 7.5% Off on Gitaa Cassettes.
4. Free Kamakoti subscription for One Year if enrolled before 16.6.98
5. Free Copper Coin - Shodasa Mahalakshmi Pooja Performed with Kumkum prasadam.

**APPLICATION FORM**

To
SRI GIRI TRADING AGENCY
58/2, T.S.V. Koil Street,
Mylapore, Chennai - 600 004

Please register me as a Life Time Member under *GREEN / SILVER CARD SCHEME. I am sending herewith Rs. *1000/- / 500/- Cash / Cheque (Local only) M.O. DD (encashable at Chennai)

Please send me your receipt and *GREEN / SILVER Card for drawing supplies.

Shri/Smt. ..............................

* delete whichever not-applicable

**Payment can be made by cash, Money Order, Credit Card or Local Cheque. Supplies at showrooms**

GITAA

## SRI GIRI TRADING AGECNY

10, Kapaleeswarar Sannadhi Street,
Mylapore, Chennai - 600 004.
Ph : 494 0376 - 494 2530
495-3820

For Further Details Contact
58/2, T.S.V. Koil Street,
Mylapore, Chennai - 600 004.
494 3551, 495 3817

Modi Niwas, Opp. Post Office,
Matunga, Mumbai - 400 019.
Ph : 414 1344, Fax : 414 3140

## அட இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?



# மழைக்காலத்தில் உஷாராயிருங்கள்!

சாக்கடை நீரில் நடக்க யாருக்குத்தான் பிடிக்கும்? ஆனால் மழைக்காலத்தில் தெருக்களில் மழை நீரோடு கலந்து தேங்குவது சாக்கடை நீரும்தானே. வீட்டுக்குப் போனதும் ஒழுங்காகக் கால் முழுவதையும் கழுவிக் கொள்ளாவிட்டால் என்ன ஆகும்? உங்கள் ஜாதகம் சரியில்லை என்றால் லெப்டோஸ்பைராசிஸ் நோய் உங்களைத் தாக்கலாம்.

ஐம்பது வருடங்களுக்கு முன்பே இந்த நோய் இந்தியாவில் அறிமுகமாகிவிட்டது. என்றாலும் ப்ளேக் போல ஆங்காங்கே கொத்துக் கொத்தாய் இந்த நோயால் மக்கள் இறப்பது இங்கே சுமார் பதினைந்து வருடங்களாகத்தான் நடைபெறுகிறது.

எலிகள் மற்றும் நாய்கள் ஆகியவற்றின் சிறுநீரோடு நம் உடல் தொடர்பு கொள்ளும் போதுதான் குறிப்பிட்ட பாக்டீரியாக்கள் நம்முள் புகுந்து இந்த நோயை உண்டாக்குகிறது. இந்த மிருகங்களின் சிறுநீர், சாக்கடைக் கழிவு நீர் மூலமாகத்தான் நம்மிடம் வந்து சேருகிறது.

தொடர்ந்து காய்ச்சல், அடிக்கடி வாந்தி, தீவிர மஞ்சள் காமாலை, மூளை ஜுரம் - இவற்றில் ஒன்றோ அத்தனையுமோ இருந்தால் கூட அவை லெப்டோஸ்பைராஸிஸ் நோயின் அடையாளங்களாக விளங்க வாய்ப்பு உண்டு.

முக்கியமாக ரத்தப் பரிசோதனையை நான்கு விதங்களுக்கு உட்படுத்தி, இந்த நோய் தாக்கியிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளலாம்! எப்படி? விளக்கினார்கள் சென்னையின் முதல் தனியார் ஆய்வுப் பரிசோதனை நிலையம் என்ற சிறப்புக் கொண்ட, சமீபத்தில் வைர விழா கொண்டாடிய எர்லிஷ் லாபரேடரி அமைப்பைச் சேர்ந்த மருத்துவர்கள்.

சிறுநீரையும் ரத்தத்தையும் ஸ்பெஷல் மைக்ராஸ்கோப் மூலமாகப் பார்த்து குறிப்பிட்ட நோய்க் கிருமிகள் இருக்கிறதா என்று ஆராய்ந்து ஒரு வகை. இது மிகவும் கஷ்டமான காரியம்; இந்த முறையில் கண்டுபிடிக்க நிறைய அனுபவம் தேவை.

மிகக் குறைந்த அளவில் குறிப்பிட்ட உயிரினம் இருந்து தொலைக்கலாமே! தவிர சிபிலிஸ் கிருமியும் பார்ப்பதற்கு இதே போல இருக்குமாம். எனவே, இந்த இரு காரணங்களினால், மைக்ரோஸ்கோப்பின் மூலமாக மட்டுமே லெப்டோஸ்பைராசிஸைக் கண்டுபிடிப்பது கொஞ்சம் ரிஸ்கான விஷயம்தான். இதற்காக ஒரு யுக்தியைக் கையாளுகிறார்கள்.

ரத்தத்தில் குறிப்பிட்ட பாக்டீரியா செழித்து வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்குகிறார்கள். அவை இனப் பெருக்கம் செய்யத் தோதாக, 'உணவுப் பொருட்கள்' எல்லாம் அளிப்பார்கள். சிபிலிஸ் கிருமிகளை இந்த முறையில் அதிகரிக்க வைக்க முடியாது. அதிக அளவில் லெப்டோஸ்பைராசிஸ் கிருமிகள் பெருகும் போது அவற்றைக் கண்டு பிடிப்பது சுலபம்.

ஆனால் நடைமுறையில் இவற்றைவிட எளிதான ஒரு வழியைப் பின்பற்றுகிறார்கள். எதிர்க்கும் விதமாக உடலில் 'ஆன்ட்டி பாடீஸ்' சுரக்கும். நோயாளியின் ரத்தத்தைப் பல விதத்தில் சோதனை செய்து, லெப்டோஸ்பைராஸிஸ் நோய்க்கு எதிரான 'ஆன்ட்டி பாடீஸ்' ரத்தத்தில் உள்ளனவா என்பதைக் கொண்டு ஒரு முடிவுக்கு வருகிறார்கள். எலிசா பரிசோதனையும் இதற்கு உதவும். ●

— ஜி.எஸ்.எஸ்.





• மிரட்டினார்....

# அந்தியூராருக்கு ஒரு நியாயம், தமிழ்க்குடிமகனுக்கு ஒரு நியாயமா?

● செ. சல்மான் பாரீஸ், பாம்பன்.

*? எல்லா கட்சிகளும் ஆர்.எஸ்.எஸ்.ஸைக் குறை கூறுகிறார்களே...? அப்படியெனில் ஆர்.எஸ்.எஸ் ஸின் கொள்கைதான் என்ன?*

! ஆர்.எஸ்.எஸ்ஸிடம் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றனவென்றாலும் அதன் ஹிந்து தீவிரவாதம்தான் எல்லோரையும் அச்சுறுத்துகிறது.

● ஆர். திருமால், ஆறுபாதி.

*? மனிதனின் மனம் ஒரு குரங்கு என்று சொல்கிறார்களே...?*

! தாவிக் கொண்டேயிருப்பதனால் அப்படிச் சொல்கிறார்கள். ஆனால் தாவுவது குரங்கின் இயல்பு அதன் வாழ்க்கைக்கு அவசியமான இயக்கம். மனம் ஏகாக்கிர சித்தத்துடன் இருப்பதே மனிதனைக் காப்பாற்றும்.

• உள்ளேயிருப்பது மேல்!

● வீ. கண்ணன், சென்னை - 92.

*? சு. சுவாமியை வெளியே விட்டு வைக்கக் கூடாது என்பதற்காகத்தான் கூட்டணியில் சேர்த்துக் கொண்டதாக, தாமரைக்கனி விஜய் டீ.வி. பேட்டியில் கூறியது பற்றி...?*

! அரசியல் ரீதியாக சாமர்த்தியமான நடவடிக்கைதான். வெளியே விட்டுவைப்பதில் தனக்கு ஆபத்து இருப்பதை உணர்ந்து ஜெயலலிதா செயல்பட்டிருக்கிறார் என்று அர்த்தம்.

● இரா. திலீப், திருச்சி - 14.

*? டெண்டுல்கரை ஸ்டீவ் வா மற்றும் ஷேன் வார்ன் பாராட்டியிருப்பதைப் படித்தீர்களா?*

! 'என் கனவில் வந்து மிரட்டுவார்' என்று வார்னும் டான் பிராட்மனுக்குக் நிகராகச் சொல்லலாம் என்று வாவும் சொல்லியிருப்பது இந்தியாவுக்கே பெருமை. இறுதி ஆட்டத்தில் சச்சின் அடித்த straight drive சிக்ஸரின் கவித்துவத்தைப் பார்த்த யாருமே இந்த ஆஸி ஆட்டக்காரர்களின் புகழாரம் மிகை இல்லை என்று ஒப்புக் கொள்வார்கள். இந்த நூற்றாண்டின் இந்தியப் பெருமைகளுள் ஒன்று: சச்சின் டெண்டுல்கர்!

● ஷோபனாதாசன்,
நாட்டரன்கோட்டை.

*? 'ம.தி.மு.கவுக்குப் பம்பரச் சின்னம் பெற்றதில் என் நீண்ட நாள் ஆசை நிறைவேறி இருக்கிறது' என்று வை.கோ சொல்கிறாரே?*

! சாட்டையாக ஜெ. இருப்பதும் கூட அவரது நீண்டநாள் ஆசையோ என்னவோ!

● குன்ஸ் என்ற ஜீவா,
கல்லல்.

*? சினிமாவே இல்லாமல் ஒரு கல்கி இதழ் தயாரிக்க முடியுமா?*

! பருப்பே இல்லாமல் கல்யாணம் பண்ண முடியுமா?



• ஆளுக்கொரு

● கல்லுக்குழி
எம். இரவீந்திரன், திருச்சி - 20.

*? திருவாரூர் ஆழித்தேரோட்டத்தை வடம் பிடித்துத் தொடங்கி வைத்தார் அமைச்சர் தமிழ்க்குடிமகன். இது குறித்து முதல்வர் கண்டனம் தெரிவிக்கவில்லையே? அந்தியூர் செல்வராஜுக்கு (தீமிதி) ஒரு நியாயம், தமிழ்க்குடிமகனுக்கு ஒரு நியாயமா?*

! செல்வராஜ் தீ மிதியில் பங்கேற்றதால்தான் முதல்வர் ஆட்சேபித்தார். என்னதான் நேர்த்திக் கடன் என்றாலும் உடலைத் துன்புறுத்திக் கொள்வது ஆபத்தில் முடியக்கூடும். தீமிதியால் பலர் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வருவதாக மருத்துவர்களே கூறியுள்ளார்கள். வடம்

**தராசு**

பிடித்தல் அப்படியல்ல... ஊர் சேர்ந்து வடம் பிடித்தல் என்பது ஆரோக்கியமானது. ஒற்றுமை வளர்ப்பது. உடல் வருந்தினாலும் துன்புறுத்தல் கிடையாது. செல்வராஜ் விஷயத்தில் கருணாநிதி பயன்படுத்திய காட்டமான மொழிதான் பிரச்னையைக் கிளப்பி விட்டது.

● கே. ராஜேந்திரன், கோவிலூர்.

*? 'கும்பாபிஷேகம் கோவிலுக்குத்தான்; குப்பம்மா எடுத்தான் மாவிளக்குத்தான்...' இந்தத் திரைப்பாடல் பற்றித் தங்கள் கருத்து..?*


! முன்பெல்லாம், இசையில்லாமல் கூட திரைப் பாடல்களைப் படித்து அவற்றின் கருத்தை ரசிக்க முடிந்தது. இப்போது, இசையில்லையேல் ஒன்றுமே இல்லை என்ற நிலைதான் பெரும்பாலான பாடல்களுக்கு. அத்தகைய பாடல்கள் பற்றி சிந்தித்துக் குழம்பிக் கொள்வானேன்!

● கே. ராஜபாலு, சேலம் - 1.

*? ராஜ் டி.வியில் சிவசங்கர் பாபா நிகழ்ச்சிகளைப் பார்ப்பதுண்டா? (இல்லையென்றால் அவசியம் பாருங்கள் – வாய்விட்டு அரைமணி நேரம் சிரிக்கலாம்...)*




• மின்சினார்...



• அறைகூவல்!

! நீங்களே பதிலையும் சொல்லி விட்டு அப்புறம் என்ன கேள்வி? குசும்புதானே!



• ...நியாயமா?

● மீனா பாலு, ஹூப்ளி.

*? என் கணவருடன் சண்டை போடும் போது எதிர்ப் பேசினாலும் தப்பு; வாயை மூடிக் கொண்டிருந்தால் திமிர் பிடித்தவள் - என்கிறார்... என்ன செய்ய?*

! 'எதிர் பேசாமல்' 'எடுத்துச் சொல்லிப்' பார்க்கலாமே; வாயை மூடிக் கொண்டிராமல் அளவாகப் பேசலாமே!

● பாலசுப்ரமணியன், ஹூப்ளி.

*? பெண்டாட்டிக்கு நாம் சொல்வதெல்லாம் புரியணுமா என்ன?*

! அவசியமில்லை; அது காதல் மொழியாய் இருக்கும் பட்சத்தில்...!

**ரூ. 50/- பரிசு பெறுபவர்:**

**கே. ஜகந்நாதன்**
**9, மூன்றாவது கிராஸ்,**
**நாராயண நகர்,**
**சேலம் - 15.**

● கே. ஜகந்நாதன், சேலம் - 15. ❑

*? மிஞ்சும் அரசியல், மிரட்டும் அரசியல், மிரளும் அரசியல், மிடுக்கான அரசியல்... உதாரணம் தாருங்கள்.*

! மிஞ்சும் அரசியல்: சீனாதான் நம் முதல் எதிரி என்று பேசி பிரதமரை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருக்கும் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸின் இங்கிதமின்மை.

மிரட்டும் அரசியல்: சொல்ல வேண்டுமா...?! போயஸ் தோட்டத்திலிருந்தும் பையனூர் பங்களாவிலிருந்தும் அனுப்பப்படும் அறிக்கைகள், கடிதங்கள்!

மிரளும் அரசியல்: 'பா.ஜ.கவிடம் எங்களுக்கு ஒன்றும் அன்பு கிடையாது. தேச நலன் கருதி மட்டுமே ஆட்சிக்கு ஆதரவு அளித்து வருகிறோம்' என்று, ஜ.மு.வால் தாக்கப்பட்ட தெலுங்கு தேச பொதுச் செயலாளர் விடுத்துள்ள அவசர அறிக்கை.

மிடுக்கான அரசியல்: 'பயம், பசி, பகிரங்க ஊழல் என்ற மூன்றையும் ஒழித்து, எதிர்காலம் குறித்து நம்பிக்கையூட்டுவோம்' என்று பிரதமர் தம் கட்சித் தொண்டர்களுக்கு விடுத்த அறைகூவல். ●



• இந்த நூற்றாண்டின் பெருமை!

## மதுக்கடைகள் ஏலம்:

**அனைத்து மசாலா அம்சங்களும் நிறைந்து, ஏ, பி, ஸி, சென்டர் என்று ஒரு இடம் விடாமல் ஓடக்கூடிய திரைப்படம் எடுக்க வேண்டுமா...? இன்ஸ்பிரேஷனுக்கு மதுக்கடை ஏலத்தைப் பார்வையிட்டு விட்டு வந்தால் போதும்!**

"இவ்வாண்டுதான் உன் ஏலம் எந்தவிதப் பிரச்னையுமில்லாமல் சுமுகமாக நடக்கிறது சார்..." - சந்தோஷப்பட்டவர் பன்னீர். மதுக்கடை ஏலம் எடுக்க ஜாபர்கான்பேட்டை வந்தவர். "போட்டியா வரக் கூடிய வங்க வீட்டுக்கே போய் முன்னாலேயே பேசி முடிச்சுக்கிட்டோம். ஏற்கெனவே அவங்கவங்க நடத்திட்டு வர கடையைத் தொடர்ந்து அவங்கவங்களே வைச்சுக்கற மாதிரி ஒப்பந்தமாகிப் போச்சு" என்றார்.

அரசுக்குக் கட்டிய பணம் போக, கடை பராமரிப்புக்கு பத்து லட்சமும் சரக்கு வாங்க மேலும் இருபது லட்சமும் தேவையாம்... "அப்புறம் எப்படிங்க லாபம் பார்க்க முடியும்...?" என்று கோபப்பட்டார் பன்னீர். "போலீஸ் கெடுபிடி அது இதுன்னு அதிகமாகிறபோது பாதியில விட்டுட்டு ஓடிடவா முடியும்?.... மொத்த தொகையையும் கட்டித்தானே கடையை ஏலம் எடுக்க வேண்டியிருக்கு... அதனால 'பார்' நடத்த அரசு அனுமதி கொடுத்தால்தான் கட்டுப்படி ஆகும்... வீட்டுக்கு



* ஏலம் எடுக்கும் இடத்தில்...



# நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று!




எடுத்துப் போய் சரக்கு சாப்பிடறவங்க கம்மி.... குடும்பத்துக்குத் தெரியாம குடிக்கறவங்கதான் அதிகம்..." என்றார்.

ஏலத்துக்கு வந்து இறங்கியவர்களைப் பார்த்தால் அப்படியொன்றும் நஷ்டப்படக்கூடியவர்களாகத் தெரியவில்லை. ரத-கஜ-துரக பதாதிகளாகத்தான் வந்தார்கள்! பணப்பெட்டிகளைத் (எல்லாம் கேஷ்தான்) தூக்க ஆட்கள், வலது பக்கம் ஒருத்தர், இடது பக்கம் ஒருத்தர் என்று உதவியாளர்கள், செல்லுலர் போன், டாடா சுமோ... உடுத்தியது மட்டும் தூய வெள்ளையில் முடமுடவென்று கதர்!

கதர் நீங்கலாகப் பரிவாரங்களுடன் வந்திறங்கிய சண்முகவேல் என்பவரைப் பார்த்து மரியாதை தொனித்த குரலில் பேசிக் கொண்டார்கள். "அவரு இலேசுப்பட்ட ஆளில்லீங்க... தான் நினைச்ச கடையை எடுக்காம விடமாட்டார்...."

சண்முகவேல் சொன்ன கதையோ வேறு! "எங்க தலைவர் ஆட்சிதாங்க... ஆனாலும் என்னை மாதிரி கட்சிக்காரங்க முன்னேறிட முடியுதா...! இந்தத் தொழில் கட்டுப்படியே ஆகலை.... எடுத்தா லாபமில்லை... ஆனால் விட்டா கௌரவமில்லையே...!" என்றார்.



**நா**ம் பார்த்தவரையில், ஏலத்தில் எண்பது சதவிகிதம் கடைகள் கைமாறாமல் பழைய ஏலதாரர்களிடமே தங்கின. அடுத்த தலைமுறை உரிமையாளர்களான இளம் எம்.பி.ஏக்களும் எம்.ஏக்களும் நல்ல 'பயிற்சிக் காலமா'கக் கருதி ஏலத்தில் வந்து குழுமியிருந்தனர்.

மனைவி, மகள், பேரன் – பேத்தி சகிதம் வந்திருந்தனர் சிலர். மனைவி பெயரில் கடை வைத்துள்ள முருகேசன் இரண்டு பெட்டிகள் நிறைய பணத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு வந்திருந்தார். உடன் வந்த மனைவி லட்சுமி, "என்ன ஆனாலும் எடுத்துட்டுத்தாங்க வரணும்" என்று ஏலக்களத்தில் நுழைவதற்கு முன் வீரத் திலகம் இட்டு அனுப்புவது போல் வாழ்த்தி அனுப்புவதைப் பார்க்க முடிந்தது!

சந்தானம் என்பவரிடம் ஒப்பந்தம் போட முயன்றார் ஒருவர். "இருபதாயிரம் கொடுத்தால் அந்தக் கடையை எடுக்காம விட்டுடறேன்..."

சந்தானம் மசியவில்லை. போட்டி ஆரம்பித்து தொகை உயர்ந்து கொண்டே போயிற்று... "ஒன்பது லட்சத்து அறுபதாயிரம்" என்று போட்டியாளர் வீம்பு பண்ண, சந்தானம் சிரித்துக் கொண்டே வாக் அவுட் செய்து அவரை சிக்கலில் மாட்டி விட்டு விட்டார்!

**தே**ர்தல் முடிவுக்காகக் காத்திருப்பது போல் வெளியே காத்திருந்த தொண்டர்படை, புறநகர்ப் பகுதிகளில் ஏலம் சக்கைபோடு போடுவதாக செல்லுலரில் செய்தி பெற்று பரிமாறிக் கொண்டது.

"அவுட்டர்ல கட்டி வருமுங்க.." என்றார் பாலு. "நாட்டுச் சரக்கையும் ஈஸியா உள்ளே ஏத்திடலாம்... இங்க சிடிக்குள்ளே சிக்கலாயிடும்..."

அவசரத் தேவைக்கு வாசலில் பணம் கிடைத்தது. வட்டி : நூற்றுக்குப் பத்து முதல் பதினைந்து வரை...!

கட்சி பேதங்களைக் கடந்து வியாபாரிகள் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டனர் இந்த ஏலத்தில்!

ஜி. அன்பழகன் என்பவர் கடை எண்ணை கவனிக்காமல், புறநகர்ப் பகுதி என்று

## நினைவிருக்கிறதல்லவா?

அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டிக்கான சிறுகதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

முழு விவரங்களுக்கு சென்ற வார இதழையோ அல்லது வரும் வார இதழையோ பாருங்கள்.

---

நினைத்து ஏதோ ஒரு மூடில் ஒன்பது லட்சத்து ஓராயிரத்துக்கு ஒரு கடையை எடுத்து விட்டார். பிறகு அதிகாரியிடம் தமது தவறை விளக்கி "மறு ஏலம் விடுங்க" என்று கெஞ்சத் தொடங்கினார். அவருடைய தவிப்பைக் கண்ட ராமசாமி என்பவர், "மறு ஏலமெல்லாம் கிடையாது..." என்று நியாயமாகக் கோபப்பட்டுப் பேசிய தாசில்தாரை வற்புறுத்தி மறு ஏலத்துக்கு இணங்கச் செய்தார். அந்த ஏலத்தில் அக் கடையை ராமசாமியே ஒன்பது லட்சத்தி இரண்டாயிரத்துக்கு எடுத்துக் கொண்டார்! இதிலென்ன வேடிக்கை என்றால், அன்பழகன் தி.மு.க.காரர்; ஆபத்பாந்தவனாகி அவரைக் காத்த ராமசாமி அ.தி.மு.க.!

121 ஆவது டிவிஷனில் ஏலம் தாமதமாகிக் கொண்டிருந்தது. டெபாஸிட் கட்டிய காளிமுத்து என்பவர் வரவில்லை. மற்றவர்கள் கத்த ஆரம்பிக்க, ஏல அறையிலிருந்த ஒருவர் தமது செல்போன் மூலம் காளிமுத்துவைப் பிடித்தார். காளிமுத்து ஐந்து லட்சம் பணத்துக்காக அலைந்து கொண்டிருப்பது தெரியவர, அவர் டெபாஸிட் கட்டிய அந்த ஒரு கடை தவிர மற்றவற்றை ஏலம் விடப் பணித்தார் செல்லுவர்க்காரர். மற்ற கடைகள் ஏலம் போவதற்குள் சோர்ந்து போய் வந்து சேர்ந்த காளிமுத்துவைத் தேற்றினார். தம் பெட்டியைத் திறந்து அவருக்கு மூன்று லட்சம் சுளையாகக் கொடுத்தார்... இப்படி இடுக்கண் களைந்த செல்லுவர் பாலமுருகன் அ.தி.மு.க.காரர்... காளிமுத்துவோ தி.மு.க.!

அதிகாரிகள் எவ்வளவோ சொல்லியும் சில இடங்கள் குறைந்தபட்ச ஏலத் தொகையான ஒன்பது லட்ச ரூபாய்க்கு மேல் விலை போகவில்லை. ஆயிரம் இரண்டாயிரம்தான் கூடுதலாக விலை நிர்ணயமானது!

ஏலம் எடுத்த நபர்களையும் கடை எண்களையும் கவனமாக உடனுக்குடன் குறிப்பெடுத்தவண்ணம் இருந்தனர் இரு போலீஸ்காரர்கள். முறைகேடுகளைத் தடுக்கத்தான் இந்த ஏற்பாடு போலும் என்று நாம் மகிழ்ந்தபோது சலிப்புடன் பேசினார் ஐ.ஐ.டி. ஏரியாவில் கடை எடுத்த செல்வம் : "அட நீங்க வேற... குறிச்சு வைச்சுக்கறது எதுக்குத் தெரியுமா...? நாளைக்குக் கடை முன்னாடி வந்து 'டாண்'ணு நிப்பாங்க... முதல் மொய்யா ஐயாயிரம் ரூபாய் எழுதணும். எடுத்துட்டுப் போயி பங்கு போட்டுக்குவாங்க..."

காவல் துறையைச் சமாளிக்கும் வழிகளை, தி.மு.க. பிரமுகர் ஒருவர் பா.ம.க. பிரமுகர் ஒருவருக்கு விளக்கினார் :

''போலீசுக்கெல்லாம் மாமூல் கட்டாதிங்க... அப்புறம் அவங்க தொல்லை தாங்க முடியாம போயிடும். நேரா எஸ்.ஐ., எஸ்.பியைப் பார்த்து மாசத்துக்கு இவ்வளவுன்னு பேசிக்குங்க... இல்லைன்னா கட்டி வராது. அப்புறம் ஓல்டு மஸ்க், சிவா ஐட்டங்களில் விண்டேஜ் லேபிள் ஒட்டி 'சைஸ்' பண்ணிக்குங்க... இல்லாட்டி அம்பேலாயிடுவீங்க..."

கட்சி பேதம் கடந்த இந்த உபதேசம் 'புல்லரிக்க'ச் செய்ததென்றால், ஏலம் முடிந்து வண்டியில் ஏறிய ராஜாவை போலீஸ் வளையம் சூழ்ந்து கொண்டு அடித்த லூட்டி... ஆஹா! காணக் கண் கோடி வேண்டும்!

"என்ன தலைவா! கவனிக்காம போனா எப்படி...? ராமதுரை சரவணபவன்ல பத்துப் பேருக்கு டோக்கன்னு கையிலே திணிச்சிட்டு போறாரு... இது நியாயமா? அவருதான் அப்படின்னா நீங்களும் தப்பிக்கப் பார்க்குறீங்களே... என்று கைகோத்து ராஜாவை வட்டமிட்டுக் கொண்டனர்.

கையால் முழம் போட்டுக் காட்டி "இதுவும் இதுவும்" என்று மது பாட்டிலையும் சிக்கன் பிரியாணியையும் நினைவூட்டியது ஒரு கும்பல்.

வேறு வழியின்றி, "சரி சாயந்தரம் உதயம் தியேட்டருக்கு வாங்க..." என்று அந்த நபர் சொல்லவும்தான் வண்டி நகர வழி கிடைத்தது.

உற்சாகத்தில் லத்தியைச் சுழற்றி ஒரு போலீஸ்காரர் போட்ட சலாம் இனி எந்த போலீஸ்காரரைப் பார்த்தாலும் ஞாபகம் வந்து தொலைக்கும்! ●

படம் : ஸ்ரீஹரி

# "எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை; அவ்வளவுதான்!"



கடந்த பிப்ரவரி குண்டு வெடிப்பின் பின்னணியில் இருந்த ஒரே சொத்தான இவரது மரக்கடை இவர் கண் முன்னால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. பாதிப்புக்குள்ளான முஸ்லீம்கள் இன்றளவும் வாய் திறந்து பேசாத நிலையில் நம்மிடம் மனம் திறந்து பேசினார், ஹாஜி முகம்மது அலி. கோவை மாவட்ட மத நல்லிணக்க அமைதிக் குழுவில் அங்கம் வகிப்பவர். மாவட்ட அனைத்து ஜமாத் அமைப்பின் பொதுச்செயலாளர்...

**கல்கி:** 'பாப்ரி மஸ்ஜித் இடிப்புக்கு' முன்னரே ஹைதராபாத்தில் இஸ்லாமியர் மாநாடு கூடியதாகவும், அதில் 'சிறுபான்மையாய்' இருக்கும் முஸ்லீம் சமுதாயத்தைப் பெரும்பான்மையாக்க இன்று இந்தியா முழுக்க இருக்கும் ஆதி திராவிட வகுப்பினரை முஸ்லீமாக மதம் மாற்றம் செய்ய ஒரு தீர்மானம் போட்டதாகவும் சொல்லப்படுகிறது... அனைத்து ஜமாத் செயலாளர் என்கிற முறையில் உங்களுக்கு இது தெரிந்திருக்க வேண்டுமே...?

**ஹாஜி முகம்மது அலி:** அது பற்றி எங்களுக்குத் தெரியாது. சுருக்கமாகச் சொல்லப் போனால் தமிழ்நாட்டு முஸ்லீம்களுக்கு ஒன்றிணைந்த அமைப்பே கிடையாது. மாவட்ட அமைப்புக்கள்கூட அந்தந்த ஊர் என்ற அளவிலேயே உண்டு. சில அரசியல் அமைப்புகள் வேண்டுமானால் மாநில அளவில் அப்படிச் செய்யலாம். ஜமாத் அந்த வழியில் போகவே இல்லை. ஓட்டுப் போடுவதுக்கூட யாருக்கும், எதற்கும் நிர்ப்பந்தித்தது கிடையாது. ஆனால் கடந்த 1996-ல் மட்டும் ஒரு முடிவு செய்தோம். மதவாத சக்திகளுக்கு எதிராக, வோட்டளிப்பது என தீர்மானித்தோம். 'பாப்ரி மஸ்ஜித் இடிப்புக்கு' ஒரு கண்டனத் தீர்மானம்கூட போடாத அ.தி.மு.க.வை நாங்கள் அந்த வகையிலேயே ஒதுக்கினோம்.

**கல்கி:** கோவை குண்டு வெடிப்பிற்கும் சராசரி முஸ்லீம் சமுதாயத்திற்கும் சம்பந்தமில்லை என்பது ஒரு பொதுவான வாதம். ஆனால் குண்டு வெடிப்பு நடக்கப் போவது முன்கூட்டியே முஸ்லீம் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனாலேயே கடை வீதியிலும், கோட்டை மேட்டிலும் பலரும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர்..." என இன்னொரு தரப்பில் குற்றச்சாட்டு வைக்கப்படுவது

குறித்து...?

**ஹாஜி:** அது சுத்தப் பொய். உதாரண மாக, நானே என் கடையில் அப்போது இருந்தேன். ஒரு ஆட்டோக்காரர் சொல்லித் தான் குண்டு வெடித்ததும், அதன் பின்னால் வன்முறைக் கும்பல் ஒன்று முஸ்லீம் கடை களைக் கொளுத்தி வருவதாகவும் தெரிந்தது. இங்கே ஜமாத்தில் தீ வைத்த கும்பல் நேரி டையாகத் தாக்கியது... தீ வைத்தது என் கடையைத்தான்... என்னைப் பத்திரப்படுத்தி காப்பாற்றி வெளியேற்றியது அந்த ஆட்டோக்காரர்தான்... எனக்கு முன்கூட் டியே தெரிந்திருந்தால் என் குடும்பத்தை, என் பொருள்களை பாதுகாப்பான இடத் திற்குக் கொண்டு போயிருப்பேனே...?

**கல்கி:** அல் உமா, ஜிகாத் நடமாட் டம் – நவம்பருக்கு முன்னும் பின்னும் எப் படி...? உங்களுக்கு... குறிப்பிட்ட சிலருக்கு (ஜமாத்துகளுக்கு) தெரிந்திருக்கக் கூடுமே...?

**ஹாஜி:** இதுதான் என்று எங்களால் எது வும் சொல்ல முடியாது. யாரோ சில பேர் நடமாடிக் கொண்டுதான் இருந்தனர். இது குறித்து அரசுக்குக் கடிதம் எழுதியும் உள் ளோம். ஆனால் கோவையில் மதக் கல வரம் என்பது ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்கு ஒருமுறை வாடிக்கையாகி விட் டது. 1994–ல் (ஏப்ரல்) கலைமான் எனும் வாலிபர் குத்தப்பட்டார். கடந்த 97– செப் டம்பரில் கிருஷ்ணசாமி வாத்தியார், குனிய முத்தூரில் யூசுப்... 97 பிப்ரவரியில் சம்சுதீன்... பழனிபாபா கொலையை அடுத்து, இது குறித்து கவனிக்கச் சொல்லி – கண்டிக்கச் சொல்லி கடிதம் எழுதியும் பேசியும் இருக் கிறோம். தீவிரவாத அமைப்புகள் இரு பக் கமும் இருப்பதால் இவை நடக்கிறது. இதன் பின்னணி என்ன? இயக்குபவர் யார் எனக் கண்டுபிடித்தாலே இதை முழுமை யாக ஒடுக்க முடியும்...!

**கல்கி:** குண்டு வெடிப்புகளின் பின்னணி யில் யார் இருக்கிறார்கள்?

**ஹாஜி:** புலனாய்வு செய்யும் போலீஸ் தான் சொல்ல வேண்டும். நம்மைப் பொறுத்த வரை இதன் பின்னணியில் மதவாத சக்தி கள் ஒன்றுக்கொன்று எதிரான பழி வாங்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவே தெரிகிறது. இந்த இடத்தில் ஒன்று மட்டும் சொல்லுவேன். 'ஓர் அநீதி இழைக்கப்பட்ட மனிதன், அதன் பின்னரும் பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் இருப்பானாயின் அவனுக்கு அல்லா கண்ணியத்தை அதிகப்படுத்திக் கொடுக்கிறார் இதைத்தான் நபிகள் நாயகம் கூறியிருக்கிறார். தீவிரவாதத்தை இஸ்லாம் வெறுப்பதற்கு நபிகள் நாயகம் கூறின இந்த உதாரணமே போதும்.

**கல்கி:** ஒட்டுமொத்தமாய் இங்கு பாதிக் கப்பட்டவை என்னென்ன...?

**ஹாஜி:** வியாபாரிகள் வியாபாரப் பொருள்களை இழந்து விட்டனர். கடை களை இழந்து விட்டனர். புறநகர்ப் பகுதி களில் ஏராள முஸ்லீம்கள் வெளியேற்றப் பட்டு விட்டனர். இதற்கு ஒரு குறிப்பிட்ட பிரிவினரே காரணம். அரசு இந்தக் குறிப் பிட்ட பிரிவினர் மீது அப்போதே நட வடிக்கை எடுத்திருந்தால் இந்தப் பின் விளைவுகளைச் சந்தித்திருக்காது. நான் அமைதிக் குழு கூட்டத்தில் பேசும்போது கூறியதையே இங்கும் குறிப்பிடுகிறேன். மறைமுகமான சதி வேலையான குண்டு வெடிப்பை காவல்துறை கண்டுபிடித்திருக் கிறது; குற்றவாளிகளைக் கைது செய்திருக் கிறது. பாராட்டுகிறோம். இன்னும் குற்றச் செயல் புரிந்தவர்கள் இருந்தால் அவர் களைப் பிடிக்க நாங்கள் ஒத்துழைக்கிறோம். இதே போன்று அதே தினத்தில் பகிரங்க மாக நடந்த – தீப் பந்தங்களுடன் – உருட் டுக் கட்டைகளையும் ஏந்தி முஸ்லீம் களுக்குச் சொந்தமான கடைகளை, வீடு களை தீ வைத்து – நொறுக்கியது குறித்து காவல்துறை நடவடிக்கை எடுக்காதது பற்றி வேதனையடைகிறோம். எதிர்காலத்தில் முஸ்லீம்கள் இங்கு நிம்மதியாக வாழ்வதற் கான நம்பிக்கையை அரசு இன்னும் ஏற் படுத்தவில்லை. குண்டுவெடிப்பில் ஒரு பிரி வினர் ஈடுபட்டிருந்தது போலவே தீ வைப் பிலும் ஒரு பிரிவினர் ஈடுபட்டிருந்தது நிஜம். அவர்களின் மீது... அக் குறிப்பிட்ட அமைப் பின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கல்கி:** உங்கள் கடை எரிந்து சாம்பலான போது உங்கள் மனம் என்ன பாடுபட்டது?

**ஹாஜி:** அதை என்னவென்று சொல்லு வேன். என்னுடைய தாத்தா ரங்கூனில் இருந் தவர். உலக யுத்தத்தின்போது, அப்போதைய குண்டு வீச்சில் தமது மரக்கடை எரிந்து சாம் பலானது கண்டு அப்படியே பைத்தியமாகிப் போனாராம் கடைசிக் காலம் வரை, எங்கள் குடும்பம் இந்தியாவுக்கு வந்த பிறகும்கூட அவருக்குப் பைத்தியம் நீங்கவில்லை. அந் நிலைதான் எனக்கும். என்ன, அந்த மாதிரி எனக்குப் பைத்தியம் பிடித்து விடவில்லை. அதற்காக அல்லாவிற்கு நன்றி சொல்ல வேண்டும். ●

பேட்டி, படம்: **ரோகிணி**

# வட்டமேஜை

✉ ஜெ.வின் அடாவடித்தனமான அரசியல் அழிச்சாட்டியங்களை இவ்வார தலையங்கம் துணிச்சலாகச் சுட்டிக் காட்டியது பாராட்டத் தக்கது.
சேலம்-2, சூர்யநிலா.

✉ முதலில் காவல்துறை, அடுத்து போக்குவரத்துத் துறை... இப்போது மெடிக்கல் ரெப்... ஆண்களுக்கு இணையாக மகளிரும் படுவேகத்தில் போட்டியில் இறங்கி விட்டார்களே.... பலே! பலே!
நெய்வேலி - 3, ப. உத்தண்டராமன்.

✉ சங்கீதா பிஜ்லானி பேட்டியில் உங்களின் கடைசிக் கேள்வியில் குறும்புத்தனத்தைக் காட்டினாலும் சங்கீதா கடைசியில் நன்றாகவே சுதாரித்துக் கொண்டார்!
மதுரை- 16, நெல்லை வி.சிவா.

✉ கடைசிப் பக்கம் ஸ்கோர் போர்டு... ஜெயலலிதாவிற்கு நீங்கள் கொடுத்த இனிப்பு மாதிரி இருந்தது!
சென்னை - 39, சுகந்தி நாராயண்.

✉ சுஷ்மிதா சென் என்ற உலக அழகியைத்தான் எங்களுக்குத் தெரியும். உலகம் புகழும் அழகி பின்னால் இவ்வளவு கொடுமையான அனுபவமா! அப்பப்பா அவற்றைப் படித்த பின் அவர் அழகு மேலும் கூடவே செய்கிறது.
மணப்பாறை, து. ஆனந்திராஜா.

✉ மேற்கு வங்காள அரசியலில் இன்று விஸ்வரூபம் எடுத்து வரும் மம்தா பானர்ஜியின் சந்திப்பு... ரொம்ப தித்திப்பு!
திருவண்ணாமலை, என். சண்முகம்.

✉ ஒவ்வொரு நூலகரும் பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும்போது, தங்கள் பொறுப்பில் இருந்து காணாமல் போன நூல்களின் விலையாக ஆயிரக்கணக்கான ரூபாய், அவர்களின் வைப்புத் தொகை மற்றும் பணிக் கொடைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுவதாக அறிகின்ற போது, மனம் மிக வேதனைப்படுகிறது. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் பக்கம் கடை நடத்தும் பழைய புத்தக வியாபாரிகளிடம் உள்ள நூல்களின் குவிப்பில் தேடிப் பார்ப்போமானால் பல நூலகங்களிலிருந்து 'ஜூப்பி' வந்தவைகளாகவே இருக்கும். நம் தமிழ் வாசகர்களின் நாணயம்; நேர்மை, பண்பு அப்படி!
மணவாள நகர், பொன். இளங்கோ.

✉ பொது நூலகத் துறை ஊழியர்களின் குறைகளைத் தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்ற கல்கி வார இதழுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
சென்னை -21, என். அகிலன்.

✉ பா. ராகவனின் 'காரணம் சொல்லவா?' சிறுகதையின் ஒவ்வொரு வரியிலும் பாதிக்கப்பட்ட ஒரு இளைஞனின் 'இதயவலி' தெரிந்தது. கதை முடிவில் ப்ரியாவின் செய்கைக்குக் காரணம் தெரிந்த போது ஓர் இளம் பெண்ணின் 'இதயவலி'யை அனுபவிக்க முடிந்தது.
கோவை-14, ஏ.எஸ். இராமசாமி.

## ஜெவுக்குக் கொடுத்த இனிப்பு!

✉ ரமாமணி சுந்தரின் 'நம்பிக்கை', கதையோ, உண்மை நிகழ்ச்சியோ! நாட்டில் நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பதைப் புரிய வைத்த கதை. இப்பேர்பட்டவர்களால்தான் நாடு பெருமையடைய வேண்டும்.
சென்னை-91, புழுதிவாக்கம் சீனு.

✉ "'ஜீன்ஸ்' படம் பார்த்தேன். உடன் 'கல்கி'யின் விமர்சனமும் படித்தேன். உண்மையில் ஏகப்பட்ட பரப்பரப்புக்கு ஆளான ஒரு படம் எந்த அளவில் ரசிகர்களின் உள்ளத்தை ஈர்த்திருக்கும் என்பதை உங்கள் விமர்சனமே சொல்லி விட்டது. கதையில்லாமல் பிரமாண்டத்தினை மட்டுமே நம்பி 'கோடி'களைச் செலவழித்தால் பலன் என்ன என்பதும் புலனாகிறது!"
குடந்தை , ஆர். ஷம்மு.

# நான் உன்னை சுவாசிக்கிறேன்

19

**காதல் டைரிக் குறிப்பு:**

**என் காதல் உணர்வுகளை அப்படியே**
**உன்னை உணரச் செய்ய**
**நான் என்ன செய்ய வேண்டும்?**
**சொல்!**

சூபர்வைசர் வேலைக்கென்று சேர்த்திருந்த சீனிவாசனும், அலுவலக கிளார்க் வேலைக்கென்று சேர்த்திருந்த மாதவனும் ஒரே மேஜையில் எதிரெதிர் நாற்காலிகள் போட்டு அமர்ந்து பிரிண்ட்டிங் பிரஸ்ஸின் துவக்க விழா அழைப்பிதழ்களில் அரவிந்த் கொடுத்திருந்த டைரியில் டிக் செய்யப்பட்டிருந்த விலாசங்களை எடுத்தெழுதிக் கொண்டிருந்தார்கள்.

தன் மாடிப் பகுதி அறையிலிருந்து முழுக்கை சட்டையின் கைமுனை பட்டன்களைப் போட்டபடி இறங்கிய அரவிந்த் அலுவலக அறைக்குள் வந்தான்.

"இன்னும் முடியலையா?" என்ற அவன் குரல் கேட்டு இருவரும் எழுந்து, "குட் மார்னிங் சார்" என்றார்கள்.

"இன்னும் நாலு அட்ரஸ்தான் இருக்கு சார்."

"எழுதின கவர் எல்லாம் கொடுங்க. இதில நானே நேர்ல கொண்டு போய்க் கொடுக்க வேண்டியதைப் பிரிச்சிடறேன். மத்ததை எல்லாம் லோக்கல் கொரியர்ல சேர்த்துடுங்க."

அரவிந்த் அவனுக்கான தனி மேஜையின் முன்னால் சுழலும் நாற்காலியில் அமர்ந்தான்.

விலாசம் எழுதப்பட்ட அழைப்பிதழ்கள் அவன் முன்னால் வைக்கப்பட்டன.

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

அவற்றை ஒவ்வொன்றாய்ப் பெயர் பார்த்து, பலவற்றைத் தனியாகப் பிரிக்கத் துவங்கினான்.

தொலைபேசி ஒலித்தது. எடுத்தான்.

"ஹலோ... நான் லால்சந்த் பேசறேன். அரவிந்த் இருக்காரா?"

"வணக்கம் சார். நான் அரவிந்த்தான் பேசறேன். சொல்லுங்க சார்."

"இன்விடேஷன் பார்த்தேன் தம்பி. நேத்து நீங்க வந்தப்ப நான் இல்லை."

"நானே போன் செஞ்சிட்டு மறுபடி உங்களை நேர்ல வந்து பார்க்கணும்னு இருந்தேன் சார். அதுக்குள்ளே நீங்களே போன் செஞ்சிட்டிங்க. மத்தியானம் மூணு மணிக்கு வந்தா நீங்க வீட்ல இருப்பிங்களா சார்?"

"நேர்ல பார்த்துச் சொல்லணும்னு அவசியம் இல்லைங்க அரவிந்த். பிரஸ் ஓபனிங் அன்னிக்கு நான் ஊர்ல இருக்க மாட்டேன். பாம்பே போக வேண்டியிருக்கு. எல்லாம் அமோகமா நடக்கும் தம்பி. என் வாழ்த்துக்களை முன்கூட்டியே சொல்லிடலாம்னு தான் கூப்பிட்டேன்."

"ரொம்ப நன்றி சார். குத்துவிளக்கு ஏத்தி மிஷினை நீங்கதான் ஸ்டார்ட் செய்யணும்னு ஆசைப்பட்டுத்தான் சார் நான் பத்திரிகைல உங்கப் பேரைப் போட்டேன். நீங்க இருந்து ஆரம்பிச்சி வைச்சா நல்லாருக்கும் சார்."

"ரொம்ப சந்தோஷம் என் பேரைப் போட்டதுக்கு. ஆனா இந்தப் பயணம் திடீர்னு வந்துடுச்சி. எக்ஸ்போர்ட் பிசினெஸ் ஒண்ணு பிளான் பண்ணிட்டிருக்கேன். அது சம்பந்தமா ஒரு முக்கியமான புள்ளியை அன்னிக்கு பாம்பேல பார்க்க

வேண்டியிருக்கு. அன்னிக்கு விட்டா அந்தாளு ஸ்டேட்ஸ் போயிடறான். மறுபடி ஒரு மாசமாகும் வர. நீங்க ஒண்ணும் நினைச்சுக்காதிங்க. என்னோட ஆசீர்வாதம் எப்பவும் உண்டு. ஜோரா வியாபாரம் பாருங்க. வெச்சிடட்டுமா?"

"சரி சார்" என்று சற்றே ஏமாற்றத்துடன் போனை வைத்த அரவிந்த், சிந்தனைக்குப் பிறகு சந்துருவை போனில் தொடர்பு கொண்டான். லால்சந்த் சொன்னதைச் சொல்லி, "ஏதாச்சும் ஐடியா கொடு சந்துரு" என்றான்.

"என்ன ஐடியா?"

"இப்ப வேற யாரை விட்டு குத்து விளக்கேத்தச் சொல்றது?"

"உங்கம்மாவை விட்டு குத்து விளக்கு ஏத்தச் சொல்லக் கூடாதா?"

"அவங்க வரமாட்டாங்க சந்துரு."

"ஏன்?"

"அப்பா வராம அம்மா மட்டும் எப்படி வருவாங்க?"

"நீ அப்பாவைக் கூப்புட்டியா இல்லையா?"

"இல்லை."

"கூப்புடலைன்னா எப்படி வருவாங்க?"

"நேத்து என் தங்கை நிர்மலா இங்க வந்திருந்தா. என் மேல அவருக்குக் கொஞ்சம் கூட கோபம் குறையலையாம். என்னைக் கேக்காம ஆரம்பிக்கிற அந்த பிரஸ்சுக்கு யாரும் போகக் கூடாதுன்னு உத்தரவு போட்டிருக்காராம். இந்தச் சூழ்நிலையில நான் எப்படி அவரைப் போய்க் கூப்புடறது, சந்துரு?"

"தப்புடா! அவர் எப்படி வேணும்னாலும் இருந்துட்டுப் போகட்டும். நீ நேர்ல போயி பத்திரிகையைக் கொடுத்து 'நீங்க வந்து இருந்து ஆரம்பிச்சிக் கொடுங்கப்பா'ன்னு கூப்புட வேண்டியது உன் கடமைன்னு நான் நினைக்கிறேன்."

அரவிந்த் மௌனமாக டெலிபோன் வயர்சுருளை ஒற்றை விரலில் சுற்றிச் சுற்றி விடுவித்துக் கொண்டிருந்தான்.

"ஹலோ அரவிந்த், என்ன பதிலைக் காணோம்? உங்கப்பாவும் அம்மாவும் திறப்பு விழாவுக்கு வர்றதில உனக்கே இஷ்டம் இல்லையா?"



"சேச்சே! என்னடா இப்படிக் கேக்கறே?" என் மேல கோபமா இருக்கிற அவர்கிட்ட..."

"உனக்கு அவர் மேல கோபம் இல்லையே?"

"கோபம் கிடையாது. என்னைப் புரிஞ்சுக்க மாட்டேங்கறாரேன்னு வருத்தம் உண்டு."

"அப்பா – பிள்ளைக்குள்ளே ஈகோ தேவையில்லை அரவிந்த். ஏதோ அவசரப்பட்டு வீட்டை விட்டு வந்துட்டே. அதைப் பத்தி மறுபடி பேச வேணாம். உன்னை பெட்டியைத் தூக்கிட்டுப் போய் அந்த வீட்லயே இருன்னு நான் சொல்லலை. அது சூழ்நிலை பார்த்து நீயா எடுக்க வேண்டிய முடிவு. ஆனா உன் வாழ்க்கையில ஒரு பெரிய புராஜெக்ட்ல இறங்கறே. இப்போ உன் பேரண்ட்சோட ஆசீர்வாதம் உனக்குக் கண்டிப்பா வேணும் அரவிந்த். போய்க் கூப்புடறது பெட்டர்."

"அவர் இல்லாத நேரமாப் பார்த்துப் போயி அம்மாகிட்ட கொடுத்துச் சொல்லிட்டு வந்துடட்டுமா?"

"இது என்னடா மரியாதை? உங்கப்பாவைச் சந்திக்கறதுக்கு உனக்கு என்ன இவ்வளவு தயக்கம்? இனிமே ஜென்மத்துக்கும் அவரைப் பார்க்கவே போறதில்லைன்னு ஏதாச்சும் அசட்டுத்தனமா மனசிலே சபதம் போட்டு வெச்சிருக்கியா?"

"சேச்சே! அதெல்லாம் இல்லை. அவர் என்னை மதிச்சிப் பேச மாட்டார் சந்துரு. சுள்ளுன்னு நாலு வார்த்தை உறைக்கிற மாதிரி சொல்வாரு. அநாவசியமா மறுபடி எங்களுக்குள்ளே ஒரு வாக்குவாதம் வரலாம்."

"அவர் எப்படி ரியாக்ட் பண்ணாலும் நீ உணர்ச்சி வசப்படாம, பதில் பேசாம இருக்க முடியாதா? உன் மனசைத் தொட்டுச் சொல்லு. நீ தொழில் ஆரம்பிக்கிறப்போ அவர் உன் பக்கத்தில இருக்கணும்னு உனக்கு ஆசையா இல்லையா?"

"இருக்கு."

"அப்போ போய்ப் பேசு. கூப்பிடு. வாதம் பண்ணாதே. நீ போய்ட்டு வந்து அவர் என்ன சொன்னார்ன்னு சொல்லு, என்ன?"

"சரி."

"பெங்களூருக்குப் பத்திரிகை அனுப்பிச்சிட்டியா?"

"இல்லை."

"ஏன்? அண்ணன் வேணாமா உனக்கு?"

"இளங்கோவுக்கு எல்லா மேட்டரும் அப்பா மூலமா போயிருக்கும். அவன் எப்பவுமே அப்பா சப்போர்ட்டுதான். அப்பாவே போகாதப்போ நான் எதுக்குப் போகணும்னு அவன் இருந்துடுவான். அப்படியே வந்தாலும் அவன் வாய்தான் ஒப்புக்கு வாழ்த்துமே ஒழிய மனசுக்குள்ளே பொறாமைப் படுவான்."

"அப்போ யாமினியையும் கூப்பிடப் போறதில்லையா?"

"இல்லை."

"அவங்களுக்கு உன்மேல உண்மையான பாசம் இருக்கா இல்லையாங்கற மேட்டருக்கு நான் போக விரும்பலை. ஆனா ஒரு சுமூகமான சூழ்நிலையை நீ கெடுத்துக்கறது சரியில்லை. என்ன இருந்தாலும் உன் அண்ணன்! உன் அக்கா! கூப்பிடாம அவங்களை ஒதுக்கறது நல்லதில்லை."

"என்னை அவங்கதான் ஒதுக்கி வைச்சிருக்காங்க."

"அவங்களுக்குப் பத்திரிகை அனுப்பிச்சிட்டு நேர்ல போகலைன்னாலும் போன்லயாவது சொல்லிடறது நல்லதுன்னு எனக்குப் படுது. அப்புறம் உன் இஷ்டம். வெச்சிடறேன்."

போனை வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தான் அரவிந்த்.

"ஹலோ இளங்கோ ஹியர்" என்றான் இளங்கோ எதிர்முனையில்.

"அண்ணா, நான்தான் அரவிந்த், மெட்ராஸ்லேர்ந்து பேசறேன்."

"அரவிந்த், நீயா? ரொம்ப நாளாச்சு உன் குரலைக் கேட்டு. எப்படி இருக்கே?"

"நல்லாருக்கேன். அண்ணி, குழந்தைங்க எல்லாம் நல்லாருக்காங்களா?"

"நல்லாருக்காங்க. அவங்க எல்லாம்

---

"உங்க பையனுக்குப் பொது அறிவு ஜாஸ்தி!"

"எப்படி?"

"'கூண்டோட கைலாசம்'னு எழுதச் சொன்னா, 'குண்டோட கைலாசம்'னு எழுதறான்!"

இயன்



ஊர்ல இல்லைப்பா. என் மாமனார் வீட்லேர்ந்து கோவா டூர் போனாங்க. எங்களையும் கூப்புட்டாங்க. எனக்கு நிறைய வேலை இருந்திச்சு. அதனால அவளையும், குழந்தைங்களையும் மட்டும் அனுப்பி வைச்சிருக்கேன்."

"எப்ப வர்றாங்க?"

"இன்னும் ஒரு வாரம் ஆகும்."

"அப்புறம்... அண்ணா... உனக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சிருக்கும். இப்ப நான் நம்ம வீட்ல இல்லை."

"அம்மா விவரமா தபால் எழுதியிருந்தாங்க. யாமினியும் போன்ல சொன்னா, நானே அடுத்த வாரம் மெட்ராசுக்கு வந்து உன்னோட பேசணும்னு இருந்தேன். ஏன் அரவிந்த் இப்படி எல்லாம்?"

"எல்லாத்தையும் போன்ல பேச முடியாதுன்னா. இப்ப எதுக்குக் கூப்புட்டேன்னா... இன்னிக்குக் கொரியர் தபால்ல இன்விடேஷன் அனுப்பி வைச்சிருக்கேன். நீ கண்டிப்பா வரணும்."

"எப்போ பங்ஷன்?"

"நாளைன்னைக்குக் காலைல."

"அப்பா கலந்துக்கறாரா?"

"தெரியலை. என் மேல கோபமா இருக்கார். இன்னிக்கு ஈவினிங் அவரைப் பார்த்துப் பேசப் போறேன்."

"எதுக்குப்பா அப்பாவை எதிர்த்துக்கிட்டு இப்படி..."

"இனிமே இதில யாரும் எந்த யோசனையும் சொல்றதுக்கு இல்லை. அந்த ஸ்டேஜ் தாண்டியாச்சு. நீ வந்து திறப்பு விழால கலந்துக்கணும்னு கூப்புடறேன்."

"இப்படி லாஸ்ட் மினிட்ல சொல்றியே அரவிந்த்."

"ஏன், வர்றது கஷ்டமா? முக்கியமான வேலை இருக்கா?"

"வேலை என்னைக்கு இல்லை? முக்கியமான வேலைகள் இருந்ததாலதானே கோவா டூருக்கு நான் போகாம தங்கிட்டேன். கொஞ்சம் முன்கூட்டி சொல்லிருந்தா பிளான் பண்றதுக்கு சௌகரியமா இருக்கும். யாமினியைக் கூப்பிட்டிருக்கியா இல்லையா?"

"அதெப்படி கூப்புடாம இருக்க முடியும்? அவ ஆபீசுக்குப் போய் நேர்லயே கூப்புடறதா இருக்கேன்."

"எல்லா ஏற்பாடும் முடிஞ்சிடுச்சா?"

"முடிஞ்சிடுச்சி."

"எவ்வளவு இன்வெஸ்ட்மெண்ட் மொத்தம்?"

"பத்து லட்சம்."



**"'கொஸ்டின் பேப்பர்' அவுட் ஆயிடுச்சாமே... பையன் சந்தோசப்படாம ரொம்ப சோகமா இருக்கான்?"**

**"'ஆன்சர் பேப்பர்' அவுட் ஆகலியாம்!"**

**— கோமாகுடி இராசரத்தினம்**

"சோர்ஸ் எப்படி அரேன்ஜ் பண்ணிருக்கே?"

"இதெல்லாம் எஸ்.டி.டி.ல பேசணுமாண்ணா? நேர்ல பார்க்கறப்போ சொல்றனே. வருவியா?"

"பிளான் பண்ணிட்டுச் சொல்றனே..."

"என் பிரஸ்லேர்ந்துதான் பேசறேன். போன் இருக்கு நான் தங்கி இருக்கறதும் இங்கதான். நம்பர் சொல்றேன். எழுதிக்கிறியா?"

போன் நம்பர் சொல்லிட்டு வைத்தான் அரவிந்த்.

**மா**லை ஏழு மணிக்கு தன் ஃபிளாட்டின் அழைப்பு மணியை ஒலிக்கச் செய்து கையில் அழைப்பிதழுடன் காத்திருந்தான் அரவிந்த்.

கதவைத் திறந்த நிர்மலாவின் முகம் பிரகாசமாகி, "அட! வாண்ணா, வா உள்ளே!" என்றுவிட்டு, "அம்மா, சின்ன அண்ணன் வந்திருக்கு" என்று குரல் கொடுத்தாள்.

அம்மா உள் அறையிலிருந்து வேகமாக வந்து, "வாடா!" என்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கண் கலங்க, "எப்படிப்பா இருக்கே?" என்றாள்.

மௌனமாகத் தலையசைத்து, "அப்பா எங்கம்மா?" என்றான்.

"ஆபீஸ்லேர்ந்து இப்பதான் வந்தாரு. குளிச்சிட்டிருக்காரு. உக்காரு. டிபன் சாப்பிடறியா? இன்னிக்குத் தக்காளி தோசை. ஊத்தித் தரட்டுமா?"

"ஊத்தித் தர்றதோட அப்படியே ஊட்டியும் விடேன்" என்றபடி தன் அறையிலிருந்து வெளியே வந்தார் அப்பா.

(தொடரும்)

பிரசாந்தைக் கதாநாயகனாகப் போட்டு அமர்க்களமில்லாமல் பூஜை போட்டார், காதலுக்குப் பெயர் போன சிவசக்தி பாண்டியன். ஜீன்ஸ் படம் பற்றிய 'டாக்' ரொம்ப மோசமாக இருப்பது தெரிந்ததோ இல்லையோ, பிரசாந்தை ஓரங் கட்டிவிட்டு அஜீத்துக்காக அலைகிறார். அட்டையில் இருப்பவருக்கு அதனால்தான் கோபமோ?

●● பிரம்மாண்டத்தின் இன்னொரு அர்த்தம்,' வெளிநாடுகளில் போய் நாயகனையும், நாயகியையும் டூயட் பாட வைப்பது. இந்த லிஸ்டில் கார்த்திக் – மீனா நடிக்கும் அரிச்சந்திராவும் சேர்ந்திருக்கிறது. இரண்டு பாடல் காட்சிகளை ஸ்விட்சர்லாந்தில் சுடுவதற்காக விமானமேறியிருக்கிறார்கள்!

●● அட்வான்ஸ் கொடுத்தாலே போதும், கால்ஷீட் தரத் தயாராய் இருக்கிறார் சத்யராஜ். அதாவது நிலைமையைப் புரிந்து கொண்டு அட்ஜஸ்ட் செய்கிறார். இதைத் தெரிந்து கொண்டு இரண்டு தயாரிப்பாளர்கள் புக் செய்து விட்டார்கள். ஒன்றை பி. வாசுவும், மற்றொன்றை சுந்தர். சியும் இயக்கப் போகிறார்கள்.

●● அஜீத்துக்கு அப்படியொரு கார் ரேஸ் பைத்தியம்! இப்படி ரேஸில் கலந்து கொண்டபோதுதான் அந்த விபத்து நடந்தது. விளைவு? முதுகெலும்பில் பாதிப்பு. பல மாதங்கள் படுக்கையிலேயே இருக்க வேண்டியதாயிற்று. இது நடந்து முடிந்ததெல்லாம் அவர் திரையுலகில் அறிமுகமானபோதுதான் என்றாலும் பழைய விபத்தின் மிச்ச சொச்சங்களால் இப்போது மீண்டும் உடல்நிலை பாதிக்கப்பட்டது. இருந்தாலும் 'அவள் வருவாளா?' 'உயிரே உயிரே' படங்களை சிரமம் பார்க்காமல் முழுமையாக முடித்துக் கொடுத்த பிறகே சிகிச்சைக்காக அமெரிக்கா போயிருக்கிறார். ஒரு மாதத்துக்கு மேல் அங்கே சிகிச்சை பெற வேண்டும் என்பதால், ஒத்தாசைக்காக அஜீத்துடன் போயிருப்பவர் ஹீரா!

●● சரத்குமார் + கே.எஸ். ரவிக்குமார் கூட்டணி தோல்வியே கண்டதில்லை. இப்போது இந்த இருவர் கூட்டணியில் 'நட்புக்காக' உருவாகிக் கொண்டிருக்கிறது. "இந்தப்

• 'அரிச்சந்திரா'வில் மீனா - கார்த்திக்



படத்தில் ரவிக்குமார் ஓர் உயர்ந்த நட்பைச் சொல்லியிருக்கிறார்!'' என்று சரத்குமார் சந்தோஷத்தோடு கூறுகிறார். இந்தப் படத்தில் சரத்தோடு முதல் முறையாக சிம்ரன் ஜோடி சேர்கிறார். ஏனோ தெரியவில்லை, இதில் நடிப்பதாக இருந்த சிவாஜி பின் வாங்கி விட, அந்த கேரக்டரில் விஜயகுமார் நடிக்கிறார்.

# கவர் ஸ்டோரிகள்



• 'அவள் வருவாளா'வில் அஜித் - சிம்ரன்

●● தமிழில் தலை காட்டாமல் இருக்கிற நடிகைகளிடம் போய்க் காரணம் கேட்டால், "இப்போது நான் இந்தியில் ஏக பிஸி!'' என்பார்கள். இப்போது செண்பகாவும் இப்படித்தான் சொல்கிறார். இந்தியில் இவர் பெயர் ஸ்நேகாவாம்!

●● 'காதலர் தினம்' படத்தில் நடிக்கும் இந்தி நடிகை சோனாலி பாந்த்ரே ஏற்கெனவே தமிழ்ப் படமொன்றில் தலை காட்டியவர்தாம்! பம்பாய் படத்தில் 'ஹம்மா ஹம்மா' பாடலுக்காக நடனமாடியிருக்கிறார். விஷயம் இதுவல்ல; இவர் அமிதாப் மகன் அபிஷேக்கோடு நெருக்கமாய்ப் பழகுகிறார் என்பதுதான் மும்பை பத்திரிகைகளில் பரபரப்பான செய்தி!

●● மணிவண்ணனின் லேட்டஸ்ட் சினிமா ஜோடி கே.ஆர். வத்சலா. கேள்விப்பட்ட மாதிரி இருக்கிறதா? ஆமாம், புன்னகையரசியின் சொந்தத் தங்கைதான்!

●● சேரனின் தேசிய கீதத்தில் ரம்பாவின் அப்பாவாக நடிக்கப் போகிறவர் நாசர். இதுவொரு பெரிய செய்தியில்லைதான்! ஆனாலும் சினிமாவுக்காக நிஜமாகவே நாசர் மொட்டையடித்துக் கொள்ளவிருக்கிறார் என்பது ஒரு செய்திதானே!

●● கவிதாலயாவின் அடுத்த படத்தின் டைரக்டர் யார் தெரியுமா? 'தலைவாசல்' செல்வா. ஹீரோ: கார்த்திக்!

— மஹந்த்


# நடக்குமென்பார்

## மே 13 முதல் 19 வரை




**மேஷம் :** *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

கொஞ்சம் கஷ்டமான காலகட்டத்தைக் கடந்துட்டிருப்பீங்க. ஆனா, உங்களோட அபாரமான துணிச்சலும் தன்னம்பிக்கையும் உங்க செயல்திறனைப் பளிச்சிட வெச்சிடும். சில முக்கியமான முடிவுகள் எடுக்க அவசரப்படாதீங்க. கூடிய சீக்கிரம் உங்க ஆபீஸ்லயும் வீட்டுலயும் நீங்க வெச்சதுதான் சட்டம்ங்கற நிலைமை வரப்போவுது. அப்ப உங்க கனவுகளை நிஜமாக்கிக்கலாம். இந்த வாரம் கடும் அலைச்சல் காரணமா லேசான உடல் உபாதைகள் இருக்கும். ஆனாலும் பெரியவங்க ஆசியும் பாராட்டும் உங்களுக்கு யானை பலம் தரும்ங்கறதால உடம்பு கஷ்டம் பெரிசா தெரியாது.




**ரிஷபம் :** *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

திடமான முடிவுகள் எடுத்து, காரியங்களைத் துணிச்சலா சாதிப்பீங்க. உங்க வேகம் பார்த்து எல்லாரும் மலைப்பாங்க. ஆனா சில தடைகள் எப்பவும் எதிலும் இருக்கும். தடையை உடைக்கறதுலதான் நீங்க சூரர் ஆச்சே? குறிப்பா பெண்களுக்கு இது சவாலும் சாதனையுமான வாரம்னு சொல்லலாம். தவிர, புதிய ஆடை ஆபரணங்கள் வாங்கற யோகம் உங்கள்ல சிலருக்கு இருக்கு. வீட்டுல இருந்து வந்த கஷ்டங்கள் நீங்க, சந்தோஷம் பெருகும். சிலருக்குப் புண்ணியத்தல யாத்திரை யோகம் இருக்கு. கணவன் - மனைவி உறவுல சிறு சலசலப்புகள் இருந்தாலும் வாரக் கடைசில சரியாப் போயிடும். ஒரு நடை திருப்பதிக்குப் போயிட்டு வாங்க. பிறகு தொட்டதெல்லாம் வெற்றிதான்!



**மிதுனம் :** *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

வாழ்க்கை வசதிகள் பெருகற நேரம் இது. ஃப்ரிட்ஜ், டீவின்னு வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீங்க. சிலருக்கு எதிர்பாராத இடங்களிலேருந்து திடீர் பண வரவு இருக்க சான்ஸ் இருக்கு. கொஞ்ச நாளா கிடப்புல இழுத்த உங்க அரியர்ஸ் பாக்கி, வராத கடனெல்லாம் கூட இப்ப வரும். இயந்திரப் பணியாளர்களுக்கு லாபகரமான வாரம். யோசிச்சிச் செய்யற முதலீடுகள் கண்டிப்பா இப்ப நல்ல பலன் கொடுக்கும். கலைத்துறைல இருக்கறவங்களுக்குப் பிரகாசமான எதிர் காலத்துக்கான அஸ்திவாரம் இப்ப விழும்! தூர தேசப் பயண வாய்ப்பு இளைஞர்களுக்கு உண்டு!



**கடகம் :** *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

சில்லரைப் பிரச்னைகள் பூச்சாண்டி காட்டினா பயந்துடாதீங்க. இப்ப உங்களுக்கு நல்ல காலம் கூடி வருது. எடுத்த காரியம் வெற்றி பெற எல்லா கிரகமும் துணை நிக்கும். சிலருக்கு அரசாங்கத்துலேருந்து ஏதாவது நல்ல செய்தி வரும். சங்கீதம், சினிமா துறையைச் சேர்ந்தவங்களுக்கு வீடு, மனை வாங்கற யோகம் உண்டு. சிலர் டூவீலர் வாங்கலாம். பயணத்துல எச்சரிக்கையா இருங்க. சிறு விபத்துகள் அல்லது, மயக்கம் மாதிரி உடல் உபாதைகள் ஏற்படலாம். வீட்டுல பெரியவங்களோட வீண் வாக்குவாதங்கள் வேணாம். சில சுப நிகழ்ச்சிகள் நடக்கப் போவுது. ஜாலியா என்சாய் பண்ணுங்க.




**சிம்மம் :** *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

மதிப்பும் கௌரவமும் உயரும் நேரம் இது. சமூகத்துல ரொம்பப் பெரிய இடத்துல இருக்கற யாராவது இந்த வாரம் எதிர்பாராத சூழ்நிலையில உங்களுக்கு உதவ வருவாங்க. தெய்வ காரியங்களில் ஈடுபடும் வாய்ப்பு சிலருக்கு இருக்கு. பெண்களுக்கு இது 'எவர், சில்வர் வாரம்!' பாத்திரமா வாங்கித் தள்ளுவீங்க! சகோதரர்களால நன்மை நடக்கும். சிறு மருத்துவச் செலவு வரலாம். (உடல் உஷ்ணம் சம்பந்தமாக) பொறியாளர்கள், சட்டம், ராணுவத் துறையினரின் திறமைக்கு சவாலான காரியங்கள் சில காத்திருக்கின்றன.



**கன்னி :** *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


லைஃப்ல என்னடா இத்தனை ஸ்பீட் ப்ரேக்கர் வருதேன்னு கவலைப்படறீங்களா? கொஞ்சம் பொறுத்துக்கங்க. இப்ப டைம் அப்படி. உடல் நலன் கூட பாதிக்கப்பட்டு, ரெண்டு மூணு நாள் படுக்கைல இருக்க வேண்டி வரலாம். சிலருக்கு வயித்து வலி மாதிரி சின்ன - ஆனா பிராணனை வாங்கற உபாதைகள் இருக்கும். முக்கிய முடிவுகள், புதிய பணிகள் எதுவும் இப்ப வேணாம். ஷேர், ஸ்பெகுலேஷன் மாதிரி சமாசாரங்கள்ல இப்ப ஈடுபடாம இருக்கறது நல்லது. வீட்டுல குழப்பங்கள், சண்டை சச்சரவு இருக்கும். மௌனமா, எதிலும் அபிப்பிராயம் சொல்லாம இருங்க. பத்து நாள்ல நிலவரம் சீராயிடும்.



**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

குரு சப்போர்ட் பண்றதால செயல் திறன் ஓங்கி, காரியங்கள்ல வெற்றி கிடைக்கும். சிலர் சமூகப் பணிகள்ல ஆர்வம் காட்டி, லோக்கல்

ஏரியா லெவல்லயாவது நல்ல பேர் வாங்குவீங்க. திடீர்ப் பண வரவு, திடீர்ப் பிரயாணம் சிலருக்கு இருக்கும். கடல் வாணிபம், ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்யறவங்களுக்கு வளமான நேரம். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உடன் பிறந்தவர்களால ஆதாயம் உண்டு. உஷ்ண சம்பந்தமான வியாதிகள் சிலருக்கு ஏற்படலாம். வீண் வாக்கு வாதங்கள்ல சிக்கி, நல்ல நண்பர்களை இழக்கும் அபாயம் உண்டு; உஷார்!



**விருச்சிகம் :** *(விசாகம் 4 – ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்களுக்கு இருந்து வந்த மறைமுக எதிரிகள் பலம் குறைந்து மறையற காலம் வந்தாச்சு. திட மனசோட காரியங்கள்ல ஈடுபடுங்க. வெற்றி நிச்சயம். வீட்டுல ஏதாவது பிரச்னை, கவலைக்குரிய சூழ்நிலை இருக்கலாம். நீங்க கலங்காம மத்தவங்களை உற்சாகப்படுத்தி வழி நடத்தணும். ஏன்னா, உங்களை முதன்மைப் படுத்தித்தான் உங்க ஃபேமிலி நடக்குது, இல்லியா? விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிகள் சேரும் வாரம் இது. வீடு வாங்கற யோகம் சிலருக்கு இருக்கு. அம்மணிகளுக்கு அதிர்ஷ்டப் பரிசுகள் (லாட்டரி, சீட்டு) ஏதாவது விழலாம், என்சாய்!

**டக்கும்!**




**தனுசு :** *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

கிரகங்கள் அனுகூலமா இல்லை. மனக் கஷ்டம், அலைச்சல், விரயம் எட்ஸட்ரா. ஸோ, ரொம்ப யோசிச்சி, நிதானமா எந்தக் காரியத்தையும் செய்யணும். கொடுக்கல் வாங்கல்ல கவனமா இருங்க. கடன் வாங்காதீங்க. பஸ்ல போகும் போது கவனமா இருங்க. பிக்பாக்கெட்ல பணம் போக வாய்ப்பு இருக்கு. கணவன் - மனைவி உறவுலயும் சில சங்கடங்கள், பிரச்னைகள் வரலாம். விட்டுக் கொடுத்து நடந்துக்கறது மூலம் வீணான மனஸ்தாபங்களைத் தவிர்க்கலாம். சிலருக்கு வேண்டாத இடமாறுதல்கள் வரும். பண நெருக்கடி இருக்கும். வாரக் கடைசில ரிலீஃப் கிடைக்க ஆரம்பிச்சிடும்.




**மகரம் :** *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

புதிய நண்பர்கள் சிலர் கிடைப்பாங்க. ஆக்கபூர்வமான பணிகள்ல ஈடுபடுவீங்க. பண வரவு திருப்தியா இருக்குங்கறதால மனசுல உற்சாகம் பொங்கும். பித்துக்குளித்தனமான பேச்சுனால சங்கடங்களை சமாளிப்பீங்க. ஷேர்ல முதலீடு செய்ய இது நல்ல நேரம். சிலருக்கு உல்லாசமா ஊட்டி, கொடைக் கானல்னு போக வாய்ப்பு உருவாகும். (LTC!) பெண்கள் வீண் வம்புல சிக்கிலேசா அவமானப்படறாப்பல ஒரு சந்தர்ப்பம் வரலாம். பீ கேர்ஃபுல்! அக்கம் பக்க விவகாரங்கள்ல தலையிட வேணாம்!



**கும்பம் :** *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உடல் நலன் கெட்டு இருக்கறவங்களுக்கு, இனி அது மெல்ல மெல்ல சீராகும். மனசுல நம்பிக்கையும் தெய்வ பக்தியும் பெருகும். உங்க உறவுக்காரங்க, தக்க சமயத்துல வந்து உதவுவாங்க. அது, பண உதவியாகவும் இருக்கலாம். அலைச்சலை மட்டும் இப்ப தவிர்த்துடுங்க உஷ்ண சம்பந்தமான நோய் வரலாம். வெயில்ல அலையாதீங்க. சிலருக்குத் தொலை தூர இடமாறுதல்கள், அல்லது வெளிநாடு சான்ஸ் இருக்கு. புதிய வியாபார ஒப்பந்தங்கள் மூலம் நலன் கூடும். பிள்ளைங்க, மருமகப் பொண்ணு இவங்க மூலம் மனதுக்கு இதமான காரியங்கள் சிலது நடக்கும்.



**மீனம் :** *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

தோற்றப் பொலிவு கூடும். அதனால எங்க போனாலும் முதல் மரியாதை உங்களுக்குத்தான். உங்க புத்தி சாதுர்யத்தால சில முக்கியமான காரியங்களை மேலதிகாரிகளிடமிருந்து சாதிப்பீங்க. பண கையிருப்பும் சீரா இருக்கு. விருந்து, கேளிக்கை அனுபவங்களுக்கு வாய்ப்பு உண்டு. சிறு நன்மை வரும். வீட்டுல ஏதாவது சுப காரியம் வரும். 'நல்ல செலவு' இருக்குதுன்னு கிரகங்கள் சொல்லுதே? ●



மேஷ ராசிக்காரரான சினிமா ஒளிப்பதிவாளர் கே.வி. ஆனந்தின் துணிச்சலும் தன்னம்பிக்கையும் அவரது செயல்திறனைப் பளிச்சிட வெச்சிடுமாம்!



# ஆயிர

கட்டிலருகே நின்று, தூங்கிக் கொண்டிருக்கும் அம்மாவைப் பார்த்தேன்.

பள்ளிகொண்ட பெருமாள் சயனித்திருப்பது போல கம்பீரமான உருவம் அம்மாவினுடையது.

ஐந்தடி, ஐந்தேகாலடிப் பெண்களையே கண்ட கண்களுக்கு, அம்மாவின் ஐந்தே முக்காலடி உயரம் விநோதமாய்த்தான் தெரியும். உருவத்திற்கேற்ற, உழைத்து, உரமேறிய உடம்பு. இந்த ஐம்பத்தெட்டு வயதிலும் நரைக்காத தலைமுடி, சுருக்கம் விழாத தோல்.

என் பௌருஷதமும், கம்பீரமும் அம்மா கொடுத்த பிச்சைதான்.

"எந்தக் கூட்டத்திலும் தனியாத் தெரியற உசரமும், நிறமும்டா உனக்கு."

நண்பன் சேகர் அடிக்கடி சொல்லும்போது, அம்மாவின் ஞாபகம்தான் வரும்.

"உங்கம்மா விநோதமான பிறவிடா."

எங்கள் குடும்பம் பற்றி விவரம் தெரிந்தவர்கள் சொல்லும்போது பெருமையாயிருக்கும். கூடவே, அம்மா பட்ட கஷ்டங்கள் மனசுக்குள் சடுகுடு விளையாடி, இம்சைப் படுத்தும்.

அம்மாவின் திருமணமே விநோதம்தான்.

அந்தக் காலத்தில் காதல் திருமணம் என்பதே கெட்ட வார்த்தை. அதிலும் ஜாதிவிட்டு ஜாதி என்றால் கேட்கவே வேண்டாம். கோடையிடியே இறங்கியது போல ஊரே கலகலத்துப் போனதாம்.

ஒரே வருடத்தில் நான்!

"இன்னிக்கு நம்ம பையன் முதல் பிறந்த நாள். வேலைக்குப் போகணுமா?"

அப்பா, ஒரு செட்டியார் வீட்டில் கணக்குப்பிள்ளை வேலையில் இருந்தார்.

"முக்கியமான கணக்கு இருக்கு இன்னிக்கு. செட்டியார் காத்துக்கிட்டு இருப்பார்."

"அப்ப, சீக்கிரமே வந்துடுங்க."

அம்மாவின் கோரிக்கைக்கு பலமாய்

தலையாட்டிவிட்டுப் போனவர்தான் அப்பா.

சீக்கிரம் என்ன, தாமதமாய்க் கூட வரவில்லை. அப்போது கிளம்பிப் போன வர்தானாம். செட்டியார் வீட்டுக்குக் கூட போகவில்லையாம்.

ஊருக்குள் ஆயிரம் வதந்திகளாம். கைக்குழந்தையுடன் தனியே அம்மா. பிறந்த வீட்டிலும் சேர்த்துக் கொள்ள முன்வர வில்லை. புகுந்த வீட்டிலும் முகம் கொடுத் துப் பேசவில்லை.

ஆறுமாதம் போல காத்திருந்து, அப்பா வரவு பற்றி ஏதும் நம்பிக்கை இல்லாமல் போகவே, டவுனுக்குக் குடிபெயர்ந்தாள்.

வெங்கிட்டு மாமா. அப்பா வழி தூரத் துச் சொந்தம். சமையல் பரிசாரகர். பெரிய குடும்பஸ்தர். நண்டும், சிண்டுமாய் ஆறு குழந்தைகள். இது போதாதென்று மாமியின் வயிற்றில் ஒன்று. ஆனால் மனசு தாராளம்.

"இதோ பாரும்மா, என் வீட்டு முன் பக்கம் ஒரு ரூம் காலியாயிருக்கு. தாராளமாய்த் தங்கிக்க."

தங்குமிடம் பற்றிய பிரச்னை தீர்ந்தது. அப்பாதான் போய் விட்டாரே தவிர, அவர் காணாமல் போனதால், அம்மாவுக்கு 'நிரந்தர சுமங்கலி' என்ற சௌகர்யம் கிடைத்தது.

சமையல் வேலை, கல்யாண காரியம் என்று உழைக்க ஆரம்பித்தாள்.

# ரூபாய்ப் புடவை

அருகிலுள்ள பள்ளியில் நான் சேர்ந்து விட்டேன்.

பதினோராவது பாஸ் செய்த தும் கல்யாண காண்ட்ராக்டர் என்னைக் கேட்டார்.

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் உங்கம்மாவே உழைப்பா? ரெஸ்ட் கொடு அவளுக்கு."

அவர் சொல்வதும் நியாயமாகப் பட சமையல் செட்டுடன் ஐக்கியமாக முயன் றேன்.

நடு கல்யாண மண்டபத்திலேயே அம்மா என் கையிலிருந்த சாம்பார் வாளியைப் பிடுங்கி வைத்தாள். தரதரவென வீட்டுக்கு இழுத்து வந்தாள்.

"இதோ பாருடா, என் மகனை நான் அட்வகேட்டாகவோ, ஆடிட்டராகவோ, ஆபீசராகவோதான் பார்க்க விரும்பறேன். சாம்பார் வாளி பிழைப்பு உனக்கு வேண் டாம். கிளம்பு நீ."

சென்னையில் கல்லூரிப் படிப்பு. ஹாஸ் டல் வாழ்க்கை என என் வாழ்க்கை திசை மாறியது.

அம்மா ஆசைப்பட்டபடி ஆடிட்டராகி விட்டேன். ஓரளவு நல்ல சம்பாத்யம். ஊருக்கே சமைத்துப் போட்ட அம்மா, இப்போது எனக்கு மட்டும் சமைக்கிறாள்.

அம்மாவை பார்க்கப் பார்க்க என்னுள் ஊற்றெடுக்கும் நன்றியை எப்படி வெளிப் படுத்துவது என்று திண்டாடுவேன்.

அதற்கு வடிகாலாய் அவள் கையை எடுத்து, என் இரு கைகளுக்குள்ளும் பொத்திக் கொள்வேன். சொரசொரப்பான அவளின் உள்ளங்கையும், மிருதுவான என் உள்ளங்கையும் உரசும் போது எனக்கு வெட்கமாக இருக்கும். அம்மா மேலுள்ள பாசம் மிகுதியாகும்.

"என்னடா?"

தடால் என எழுந்து அமர்ந்து கொண்டாள் அம்மா.

''காப்பி குடிக்கலாம்

போலிருந் தது."

"அடாடா, தூங்கி னவளை எழுப்பக் கூடாதா?"

பரபரவென உள்ளே சென்றாள். சுமகம காப்பியோடு திரும்பினாள்.

"இதுக்குத்தான் உனக்குன்னு ஒருத்தி யைத் தேடறேன். நீதான் பிடிகொடுக்க மாட்டேங்கறே."

நான் மௌனமாய் காபியை ருசித்தேன். பதமான சூடு, இதமான சர்க்கரை.

"வக்கீல் வீட்டிலிருந்து ரெண்டு தரம் ஆள் வந்தாச்சு."

வக்கீல் சாரங்கபாணி. லீடிங் லாயர்.

**கிருஷ்ணா**

அவரது இரண்டாவது பெண்ணுக்கு, என்னைக் கேட்கிறார்கள்.

"அம்மா, அவங்க பரம்பரைப் பணக்காரங்க."

"இருக்கட்டுமே! உனக்கு மட்டும் என்ன குறை? நாமாகவே போகலையே? வலிய வரும் ஸ்ரீதேவியை ஏன் வேண்டாங்கறே?"

நான் காப்பியைக் குடித்துவிட்டு, தம்ளரை சமையலடியில் கொண்டு போய் வைத்தேன்.

"என்னடா, சட்டையை மாட்டிக்கறே? என் கேள்விக்கு பதிலையே காணோமே?"

"நாளைக்குக் கட்டாயம் பதில் சொல்றேம்மா" என்றபடி வெளியே கிளம்பினேன்.

என் மனத்தில் வேறு எண்ணங்கள். அம்மாவுக்கு எப்படிப் புரிய வைப்பது?

அடுத்த நாள் மாலை நான் வீடு திரும்பும் போது, என் கையில் புடைவைப் பார்சல்.

"என்னடா இது?"

"கிழக்கே பார்க்க நில்லு. நமஸ்காரம் பண்றேன்."

அம்மா கையில் டபுள் பார்டர் போட்ட மாம்பழக் கலர் தேவேந்திரா புடைவையைக் கொடுத்து நமஸ்கரித்தேன்.

"எதுக்குடா இது?"

"இன்னிக்கு என்ன நாள்?"

யோசித்த அம்மாவின் முகத்தில் பூரிப்பு.

"என் 'குடியிருந்த கோவிலுக்கு' இன்று பிறந்த நாள். இந்தா ஸ்வீட். அசல் நெய்யிலே செஞ்சதாக்கும்."

"விலை எவ்வளவு?"

"கிலோ நூத்தி இருபது ரூபாய்."

"நான் புடைவை விலையைக் கேட்டேன்."

"ஆயிரத்து நூறு ரூபாய்."

"ஏண்டா? எதுக்குடா இவ்வளவு விலை கொடுத்து வாங்கினே?"

அம்மாவின் குரலில் அதட்டல், படபடப்பு.

"நான்தான் கைநிறையச் சம்பாதிக்கறேனே அம்மா. உனக்கு இது கூட செய்யக் கூடாதா?"

"அதுக்காக? புடைவையிலே போய் இவ்வளவு ரூபாயைப் போடுவியா?"

அம்மா குரலில் ஆதங்கம்.

"கலர் பிடிச்சது."

"இருக்கட்டுமே! இவ்வளவு ஓட்டைக் கை கூடாது. எனக்கு இதைக் கட்டிக்கும் போதெல்லாம் விலைதான் ஞாபகத்துக்கு வந்து உறுத்தும்.

மெல்லிய கோபம், குரலில் வெளிப்படப் பேசும் அம்மாவைப் பார்த்துச் சிரித்தேன்.

"என்னடா?"

"வக்கில் சாரங்கபாணி பொண்ணு சில்வர் ஸ்பூனோட பிறந்தவ."

அம்மா புரியாமல் பார்த்தாள்.

"புடைவைன்னா நாம யோசிக்கற விலை இருநூறிலிருந்து, ஐநூறு ரூபாய்க்குள்ளேதான். ஆனால் வக்கிலோட பொண்ணுக்கு குறைந்தபட்ச விலையே ஆயிரம் ரூபாய்தான். அவள் வளரும், வளர்ந்த விதம் அப்படி. ஹோட்டலுக்குப் போனா நாம குடிக்கறது நாலு ரூபாய் காப்பிதான். பதினைந்து ரூபாய்க்கு ஒரு காப்பி வாங்கிக் குடிச்சா நமக்கு ஜீரணமாகுமா? என்னதான் நம்மிடம் இப்ப ஓரளவு வசதி இருந்தாலும், மனசளவிலே நானும் சரி, நீயும் சரி, மிடில் கிளாஸ்தான்ம்மா, இன்னும். நமக்கு




**கும்பமேளா**

ஜனவெள்ளத்தில்
இன்று குளித்தது—
கங்கை.

**ஆர்ட்டிகிள் 356**

இந்திய ஜனநாயகத்திற்கு
சட்டரீதியாய்—
ஒரு 'அபார்ஷன்'.

**நம்பிக்கை வாக்கெடுப்பு**

இருநூற்று எழுபத்திநாலாவது
எம்.பி.யின் தும்மல் கூட
இன்று சட்டம் ஆனது.

**சுப்பிரமணியம் சாமி**

இந்தத் தடவை
இந்திய ஜனநாயகமுகத்தில்
ஆசிட் வீசிய 'சுர்லா' யார்?

— ருத்ரா

ஆடம்பரச் செலவாய்த் தெரியற தெல்லாம், அவங்களுக்கு அவசிய மான செலவு. ஸ்டேட்டஸ் சிம்பல். யோசிச்சுப் பாரும்மா இந்தக் கோணத்திலும்."

பாத்ரூம் பக்கம் நகர்ந்தேன். குளித்து முடித்து, சாப்பிட்டு விட்டு, ஹாலில் டி.வி. முன் வந்து அமர்ந்தேன்.

கொஞ்ச நேரத்தில் அம்மாவும் என்னருகில் வந்து அமர்ந்தாள்.

"யோசிச்சேன்டா. நீ சொல்றதும் புரியறது."

அம்மாவின் கையை எடுத்து என் இரு கைகளுக்குள் பொத்திக் கொண்டேன்.

"வருத்தம் ஏதும் இல்லையேம்மா."

தனது மற்றொரு கையால் அம்மா என் தலையை வருடினாள். அம்மாவும் இளகியிருப்பது புரிந்தது.

"ஏம்மா, வெங்கிட்டு மாமா இப்ப எப்படி இருக்காராம்?"

அம்மா என்னை உற்றுப் பார்த்தாள். எதற்கு இந்த திடீர் விசாரிப்பு?

"பாவம்டா, பெரிய சம்சாரி. பசங்களும் இப்ப அவரை மாதிரியே சமையல் கட்டுல வேகறாங்க. ஆறு பசங்களுக்குமே படிப்பு வராமப் போனது அவர் துரதிர்ஷ்டம்தான். கடைசியாய்ப் பிறந்ததே ஒரு பொண்ணு. அவ கல்யாணம் பற்றிய கவலைதான் மாமாவுக்கும், மாமிக்கும். எதுக்கு இந்த விசாரிப்பு?"

கேள்வி முடியும் முன்னேயே அம்மாவின் கண்கள் பனிச்சிட்டன. என்னைப் பார்த்த அவள் பார்வையில் பெருமை விரிந்தது.

"நாம தெருவிலே நின்னப்ப, நிழல் கொடுத்து தங்க வைச்சதுக்கு கைம்மாறுன்னும் வைச்சுக்கலாம். நம்ம இருநூறு ரூபாய் ரேஞ்சுல தான் அவளும் யோசிப்பான்றதும் ஒரு சௌகர்யம். இல்லேம்மா."

அம்மா சந்தோஷமாய்ச் சிரித்தாள், என்னைப் பார்த்து. ●

# அனஸ்டேஷியா

ஏதோ மயக்க மருந்தனைத்தான் படத் தலைப்பாக வைத்து விட்டார்களோ என்று எண்ண வேண்டாம். அது ஒரு ரஷ்ய இளவரசியின் பெயர்.

குழந்தைத்தனமான கதை (படமே குழந்தைகளுக்கானதுதான்) என்றாலும் இந்த முழுநீள அனிமேட்டட் கார்ட்டூன் திரைப்படத்தில் தொழில் நுட்பம் அசத்துகிறது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெறுவதாகக் கதை. ரஷ்யப் பேரரசு மாபெரும் விழாவைக் கொண்டாடுகிறது. அரண்மனையில் கொண்டாட்டம். சிறுமியான இளவரசி அனஸ்டேஷியாவை விட்டுப் பிரிய வேண்டிய கட்டாயம், அவளது பாட்டியான பாரிஸ் நகரில் வசிக்கும் ராணிக்கு. தனது பரிசாக ஓர் பொம்மை இசைப் பெட்டியையும், "விரைவில் பாரீஸில் சந்திப்போம்" என்று பொறிக்கப்பட்ட சங்கிலியையும் பரிசாக அளிக்கிறாள். அந்தச் சமயத்தில் அரச வம்சத்தின் மீது கடும் வன்மம் கொண்டிருக்கும் ரஸ்புடின் தன் தீய சக்திகளை அனுப்பி அரண்மனையை முற்றுகையிடுகிறான். டெம்ப்ட்ரி என்ற சமையற்காரச் சிறுவன் ஒருவனின் உதவியுடன் இளவரசியும் அவளது பாட்டியும் தப்பி ரயில்வே ஸ்டேஷனை அடைகின்றனர். ஆனால் பாட்டி ஏறிக் கொண்டவுடன் ரயில் கிளம்பிவிடுகிறது.



ரஷ்யா முழுவதும் தீய சக்திகள் தலைவிரித்தாட, ரயில்வே ஸ்டேஷனில் கீழே விழுந்த இளவரசிக்குத் தன் பழங்காலம் மறந்து விடுகிறது. அனாதை விடுதி ஒன்றில் பத்து வருடங்கள் கழித்த பின், சங்கிலியில் உள்ள வாசகத்தைக் கொண்டு பாரிஸ் நகரில் உள்ள "ஏதோ" உறவினரை நோக்கிப் பயணம் செய்ய முடிவெடுக்கிறாள். தற்செயலாக அவளைப் பார்த்துவிடும் இளைஞன் டெம்ப்ட்ரி அவளுக்கு உறுதுணையாக பாரிஸ் செல்கிறான். வழியில் ரஸ்புடின் சாத்தான் செய்யும் பலவித இடையூறுகளையும் தாண்டி பாட்டியை அடைகிறாள் இளவரசி. பின்னர் ஒரு கைகலப்பில் தீயசக்தி அழிய, ராஜ வாழ்க்கையைத் துறந்து தனக்கு உதவிய இளைஞனுடனேயே தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகிறாள்.

கார்ட்டூன் படங்கள் என்றால் வால்ட் டிஸ்னி நிறுவனம்தான் என்ற விதிக்கு சமீபகாலமாகத் தோன்றியுள்ள விலக்குகளில் ஒன்று இந்தப் படம். காட்சிகளின் பிரம்மாண்டமும், அழகும் பெரியவர்களையும் கட்டிப்போடுகிறது. அற்புதமான ஓவியங்களின் பின்னணியில் (நியூசெஞ்சுரி ஃபாக்ஸின் அரிசோனாவில் உள்ள ஸ்டுடியோவில் இதற்கென்றே முந்நூறு சிறந்த ஓவியர்கள் தங்கள் உழைப்பைச் சிந்தியிருக்கிறார்கள்), நூற்றுக் கணக்கான கார்ட்டூன் மனிதர்கள் நடந்தும் நடனமாடியும் இயங்கும் போது ஆச்சர்யமான சந்தோஷம்.

ஸ்லீப்பிங் ப்யூட்டி, லயன் கிங், இப்போது அனஸ்டேஷியா இப்படி முழு நீள கார்ட்டூன் திரைப்பட முயற்சிகள் எல்லாமே கற்பனைக் கதைகளாகவோ, கடந்தகாலப் பின்னணி கொண்டதாகவோ மட்டுமே இருக்கிறதே என்பவர்களுக்கு ஒரு கூடுதல் தகவல். இந்தப் படத்தை உருவாக்கியவர்கள் அடுத்து தயாரிக்க இருப்பது "ப்ளானட் ஐஸ்" என்ற சயன்ஸ் ஃபிக்ஷன். இதுவும் முழு நீள கார்ட்டூன் திரைப்படம்தான்!

– ஜி



# என்னைச் சுற்றி ஒரு சதி!

**சு**சந்திகாவை நினைவிருக்கிறதா! சென்னை நேரு ஸ்டேடியத்தில் சில வருடங்களுக்கு முன் நடந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வந்தாரே, அவரேதான்! இருபத்திரெண்டே வயதான, ஆசியாவின் மிக வேகமான பெண்மணியாக விளங்கும் சுசந்திகாவின் சரித்திரம் புகழ் போதையால் மட்டுமே நிறைந்திருக்கும் என எண்ணியவர்களின் நினைப்பில் மண் விழுந்திருக்கிறது இப்போது.

1995-ல் நடைபெற்ற ஆசிய தடகள விளையாட்டுகளில் கலந்து கொண்ட போது எடுத்த யூரின் சாம்பிளில் அவர் உடலில் போதைப் பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே அவரது வெற்றி ரத்து செய்யப்பட்டது. "என் உடல் நோய் காரணமாக சில மருந்துகளை தொடர்ந்து உட்கொண்டு வந்தேன். அதில் இந்த ஸ்டெராய்டும் கலந்துள்ளது எனக்கு இப்போது தான் தெரியும்" என்று அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியில் அவர் கலந்து கொள்ள விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. சுசந்திகா அதில் கலந்து கொண்டார். வெற்றி பெற்றார்.

சென்ற வருடம் ஏதென்ஸில் நடைபெற்ற உலகப் போட்டியிலும் 200 மீட்டர் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

ஆனால் சமீபத்தில் கேஷுவலாக (போட்டியின் போது மட்டும் என்றில்லாமல் அவ்வப்போது குறிப்பிட்ட கால கெடுவில் விளையாட்டு வீரர்களைக் கட்டாய மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்துவது வழக்கமாகி வருகிறது) சுசந்திகா உட்பட ஐந்து ஸ்ரீலங்கா விளையாட்டு வீரர்களைப் பரிசோதித்ததில் சுசந்திகாவின் ரத்தத்தில் மட்டும் குறிப்பிட்ட தடைசெய்யப்பட்ட போதை மருந்து இருப்பது தெரியவர, சர்வதேச அமெச்சூர் தடகள கூட்டமைப்பு "இனி இப்போதைக்கு சுசந்திகா சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது" என்று ஸ்ரீலங்கா தடகளக் குழுவுக்கு அறிவித்தது.

மறு பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்ற கூக்குரலைத் தொடர்ந்து சுசந்திகாவிடமிருந்து ஏற்கெனவே பெறப்பட்டிருந்த இரண்டாவது சாம்பிளையும் சோதனை செய்ய, அவரது வருங்கால விளையாட்டு வாழ்வையே நெகடிவ் ஆக்கக்கூடிய வகையில் ஹெச்.ஜி.வி. "பாஸிடிவ்" என்று வந்தது சோதனை முடிவு.

"என்னிடமிருந்து பெறப்பட்ட சாம்பிள்கள் சரியாக 'சீல்' செய்யப்படவில்லை. எனக்கெதிராக ஏதோ சதி நடக்கிறது. ஸ்ரீலங்கா விளையாட்டு அமைச்சகத்தில் உள்ள ஓர் உயர் அதிகாரி என்னிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சித்ததை நான் அனுமதிக்கவில்லை. இதனால்தான் இப்படி. ஸ்ரீலங்கா விளையாட்டு அமைச்சகமோ, அமெச்சூர் தடகளக் குழுவோ இதில் சம்பந்தப்படாமல் வேறு ஏதாவது அமைப்பு இந்தப் பரிசோதனையைச் செய்யட்டும். விளைவு வேறுவிதமாக இருக்கும்" என்று கூறுகிறார். ●

— குல்லூ

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

செங்கதிர்த்தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்
அவன் எங்களறிவினைத் தூண்டி நடத்துக!

— மகாகவி பாரதியார்

ஞானச் சுடர் ஏற்றி ஒளிபெறுவோம்!
ஞாலமெல்லாம் ஞானமென்னும் ஒளி தருவோம்!

என்ற உயரிய இலட்சியத்துடன் ஆன்மீகப்
பாதையில் ஒளி வீசி பவனி வருகிறது

ஒளிவிடும்

# ஞானச் சுடர்

விலை ரூபாய் 10/- மட்டுமே

ஆசிரியர் : லட்சுமி சுப்ரமணியம்

இணை ஆசிரியர்: S. கண்ணன் கோபாலன்

ஒருமுறைப் படித்தால் மறுபடியும் படிக்கத் தோன்றும்;
முதல் இதழ் வாங்கினால் அடுத்த இதழ் வாங்கத் தூண்டும்

ஆன்மீகப் பத்திரிகையில் நீண்ட அனுபவம்
கொண்டவர்களின் அற்புதக் கைவண்ணம் இது!

*மாதந்தோறும்.......................*

- *வாசகர்களின் சந்தேகங்களுக்கு ஒரு ஆசார்ய சுவாமிகளின் ஞான விளக்கம்!*
- *புராதனமான திருத்தலம் ஒன்றின் முழுமையான தரிசனக் கட்டுரை!*
- *இல்லந்தோறும் மங்கலம் நிலைக்கச் செய்யும் அன்னையின் அருட் பிரசாதமாய் குங்குமப் பிரசாதம்!*
- *வாசக அன்பர்களுக்கு இலவச புனிதப் பயண வாய்ப்புகள் மற்றும் பல சிறப்பான கட்டுரைகளுடன்!*

படிக்க என்றும் பண்பு நலம் சேர்க்கும்!
பரமன் அருளால் சாந்தி நலம் கிட்டும்!

விவரங்களுக்கு :

**லக்ஷ்மி பப்ளிகேஷன்ஸ்,**
**"ரம்யா"**
**62, முதல் பிரதான சாலை.**
**சாய் நகர், விருகம்பாக்கம்,**
**சென்னை - 600 092.**
**போன் : 487 31 36.**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka

# ஆசையா இருக்கு ஆனா...



"மத்தவங்களைப் போல மடமடன்னு இங்கிலீஷ்ல பேசணும்னு ஆசையாத் தான் இருக்கு. ஆனா... ஏதாவது தப்பா பேசிடுவோமோங்கற பயத்துனால வாயிலேருந்து வார்த்தை வெளியே வர மாட்டேங்குது"

நீண்ட நாட்களாக உங்களிடமுள்ள இப்பிரச்சினைக்கு இன்றே, இப்பொழுதே முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். உளவியல் அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ள விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர்ந்து தயக்க மின்றி, தைரியமாகப் பேசப் பயிற்சி பெறுங்கள்.

**மூன்றே மாதங்களில் உங்களிடம் ஏற்படும் மகத்தான மாற்றத்தைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள் !**

## விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ்

**LEVEL - 1** (அடிப்படை ஆங்கிலம்) ABCD யிலிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தைகளை எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ. 175/- மட்டுமே.

**LEVEL - 2** (இலக்கணப் பயிற்சி) ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத முறையாகப் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ.225/- மட்டுமே.

**LEVEL - 3** (ஸ்போக்கன் இங்கிலீஷ்) தவறாகப் பேசிவிடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறலாம், பயிற்சிக் கட்டணம் ரூ. 250/- மட்டுமே.

**LEVEL - 2&3** இரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. 375/- மட்டும் செலுத்தினால் போதும்.

**LEVEL - 1,2&3** மூன்று பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. 525/- மட்டும் செலுத்தினால் போதும்.

முன் பணம் அனுப்ப வேண்டியதில்லை. அருகிலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்களை V.P.P.யில் அனுப்புகிறோம்.

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேரவிரும்புகிறேன். எனக்குப் பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்கிறேன். (தேவையான கட்டத்திற்குள் ✓ குறியிடவும்)

LEVEL-1 ☐ பெயர் : ..........................................

LEVEL-2 ☐ முகவரி : ..........................................

LEVEL-3 ☐ ..........................................

LEVEL-2&3 ☐ ..........................................

LEVEL-1,2&3 ☐ .................... பின்கோடு ....................

**VIVEKANANDA INSTITUTE**

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை - 600 017.

**நேர்முகப்பயிற்சி பெற விரும்புவோர் கீழ்க்காணும் பயிற்சி மையத்துடன் தொடர்புகொள்ளவும்.** சென்னை 9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை - 17 ★ 18, ராமசாமி தெரு, சண்முகம் ரோடு, மேற்கு தாம்பரம், சென்னை - 45 ★ 30, மேடவாக்கம் டாங்க் ரோடு, (E.S.I. ஆஸ்பத்திரி அருகில்) கீழ்ப்பாக்கம், சென்னை - 10 திருச்சி சேஷா டவர்ஸ், 23c/5, கீழசிந்தாமணி, (E.R. ஸ்கூல் எதிரில்) திருச்சி - 2 சேலம் சென்ட்ரல் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ் (மேம்பாலம் அருகில்) 77, ஓமலூர் மெயின் ரோடு, சேலம் - 1 வேலூர் 9, நீலிகிட்டங்கு தெரு, மல்லி ஆஸ்பத்திரி அருகில், வேலூர்-1 தஞ்சாவூர் 1263/1, தெற்கு வீதி, (பாதுகாதை புக்டெப்போ மாடியில்) தஞ்சாவூர்-9 ஈரோடு 811, பிரப் ரோடு (டெலிபோன் பவன் அருகில்) ஈரோடு - 1 கோயம்புத்தூர் ஸ்ரீ கிருஷ்ணா டவர்ஸ், 515, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர் - 18. பாண்டிச்சேரி 326, அம்பலத்தாடையார் மடத்து வீதி (அண்ணா சாலை அருகில்) பாண்டிச்சேரி - 1 மதுரை 26 A. சுண்ணாம்புக்காரத் தெரு, (கூடலழகர் பெருமாள் கோவில் அருகில்) மதுரை-1 திருப்பூர் K.P.N. காலனி முதல் தெரு, சங்கீதா தியேட்டர் மெயின் ரோடு, திருப்பூர்-1. ஹைதராபாத் 5A லெனின் எஸ்டேட் ஆபீஸ், ஹைதராபாத்-2. திண்டுக்கல் 7, E.V.R. சாலை, 80 அடி ரோடு, மேற்கு அசோக் நகர், திண்டுக்கல் - 1.